


**இளையராஜா தமிழ் திரையுலகின் தனி சகாப்தம்**



பாமர ரசிகனும்… திரையிசைப் பாடல்களை தாளம் போட்டு ரசிக்கவைத்த இசை வித்தகர்.

தமிழகத்தின் தென்கோடி தேனி மாவட்டத்தில்… மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கும் கிராமமாகிய பண்ணைப்புரத்தில் ராசய்யாவாக பிறந்து, முதல் படமாம் 'அன்னக்கிளி'யின் மெல்லிய சிறகுகள் மீது ஆரோகணித்து, இசை வானில் பறக்க ஆரம்பித்தார். பின்னாளில் தமிழகத்திற்கே இசை ராஜாவாக மாறினார் இளையராஜா. லண்டன் 'சிம்பொனி' இசை மூலம் உலக ரசிகர்களையும் தன் வசப்படுத்தினார்.

அப்படிப்பட்ட இசைப் பல்கலைக்கழகத்தை பற்றி பத்து அத்தியாயங்களில் உங்கள் முன் சில 'பாடங்களை' சமர்ப்பிக்கிறோம்…

**வாராது வந்த மாமணி…**



தொண்ணூறுகளின் கடைசி ஆண்டுகளில், அயல்நாட்டு இசை நிறுவனங்களுக்காக, இசை "சி.டி.'களுக்கு ஆங்கிலத்தில் குறிப்புகள் எழுதித்தரும் வாய்ப்பு வந்தது. அப்போது, "ராஜலஹரி' என்ற ஒரு ஒலிநாடா பார்வைக்கு வந்தது.

கர்நாடக ராகங்களில் அமைந்த உருப்படிகள், பற்பல ஆண் - பெண் குரல்களில் மிகுதியான கோரஸ் அமைப்புடன் வித்தியாசமாக வார்க்கப்பட்டிருந்தன. கேட்ட மாத்திரத்தில் பிடித்துவிட்டது.

கர்நாடக ஞானம் உள்ளவர் மேற்கத்திய இசைக் கோலங்களின் அமைப்பில் வடித்திருப்பதாகத் தெரிந்தது. எனக்குக் கொடுக்கப்பட்ட இசை நாடாவில் நிகழ்ச்சியைப் பற்றிய விவரங்கள் இல்லாததால், பேர் தெரியாத ஒரு கம்போஸரின் படைப்பிற்கு நான் ரசிகனாகி விட்டிருந்தேன்.

மேற்கத்திய இசை ரசிகர்கள், எந்தவொரு "சி.டி.'யைக் குறித்தும் மிகுதியான விவரங்களை அறிய விரும்புவதால், "ராஜலஹரி'யைப் பற்றிய முழு தகவல்களைப் பெற்றாக வேண்டிய நிலையில் இருந்தேன். அப்போது தான் தெரிந்தது, இளையராஜாவின் படைப்பு அது என்று.

இளையராஜா அத்தியாயம் தமிழ்த்திரையில் ஏறக்குறைய முடிவடைந்து வந்த தருவாயில், அவருடைய இன்னொரு படைப்பு என்னை அவரது புதிய ரசிகனாக மாற்றியிருப்பதை எண்ணி மகிழ்ந்தேன்.

எனது மகிழ்ச்சி அவரிடமும் தெரிவிக்க விரும்பினேன். அந்தச் சாக்கில் "ராஜலஹரி'யின் உருவாக்கத்தைக் குறித்து அறிய முடியுமே!

விடா முயற்சிகளுக்குப் பின் இளையராஜாவை சந்திக்க முடிந்தது. சில மணி நேரங்கள் மனம் திறந்து பேசினார். "கவுண்டர்பாயின்ட்' என்ற மேற்கத்திய இசைக்கூற்றை எனக்கு விளக்க அவர் எடுத்துக்கொண்ட சிரமத்தை என்னால் இன்றும் மறக்கமுடியவில்லை. மாறிவிட்ட இயக்குநர் / தயாரிப்பாளர்களைப் பற்றிய தனது ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தியதாக நினைவு.

ராஜலஹரி "சிடி'க்கான விவரங்கள் கிடைத்துவிட்டதுடன், தமிழ்த்திரை இசையின் ஒரு சிகரத்துடன் அளவளாவிய திருப்தி எனக்குக் கிடைத்தது.

இன்னொரு சந்திப்பு நடந்த சந்நிவேஷம் முற்றிலும் மாறுபட்டது. பம்பாயிலிருந்து தான் இறக்குமதி செய்திருந்த நாயகிகளுக்குத் தமிழ் வசனங்களை நான் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று விரும்பிய ஒரு இயக்குநர் - நண்பர், இளையராஜாவின் இசையில் நான் பாடல் எழுதலாம் என்ற ஒரு தூண்டில் போட்டார். கடைசியில் "ஆனால் நீயே இளையராஜாவிடம் இது தொடர்பாக அறிமுகம் செய்துகொள்ள வேண்டும்' என்று கூறிவிட்டார்.

ஒரு சிறந்த பாட்டனுபவத்திற்கு இசை எவ்வளவு முக்கியமோ, அதே அளவு உணர்வும் ரசானுபவமும் கொண்ட பாடல் வரிகள் அவசியம் என்று நம்புவதால், எந்த இசை அமைப்பாளரிடமும் மண்டியிடும் விருப்பம் இல்லாதவன்.

நடுநாயகமாக இருந்த கீபோர்டுகளிலிருந்து வந்த மின் ஒயர்கள் பல சீக்வன்சர்களுக்குள்ளும், சாம்பிளர்களுக்குள்ளும் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றை இயக்கும் இரு வாத்தியக்காரர்களுடன் கலந்து, இசையைக் கூட்டும் நவீன வித்தையில் ஆழ்ந்திருந்தார் இளையராஜா.

தரைமட்டமான ஜெமினியிலும் ஆஸ்பத்திரியான விஜயா கார்டனிலும் மகாதேவர்களையும் விஸ்வாதர்களையும் வாத்தியக் கோஷ்டிக்கு இடையே பார்த்துப் பழக்கப்பட்ட கண்களுக்கு, இந்த சீக்வன்ஸர் இசைக்கூட்டு புதிய "ரோபோ' சங்கீதத்திற்கான ராஜமார்க்கமாகப்படவே, ஆளை விட்டால் போதும் என்று நடையைக் கட்டிவிட்டேன் (இளையராஜாவின் அத்தியாயத்தின் பெரும் பங்கிலும் வாத்தியங்களிலிருந்துதான் இசை உற்பத்தியானது).

பட்டப்படிப்பு முடிந்துவிட்ட நிலையில், தமிழ் நாடெங்கும் காற்றலையில் "மச்சானைப் பாத்தீங்களா' பவனி வரத்தொடங்கியது. அபிநயத்தால் வெற்றிகொண்ட ஒரு நர்த்தகி, ஜதிகள் முழங்கும் நிருத்தத்தால் அரங்கத்தை தன் கைப்பிடிக்குள் கொண்டு வருவதுபோல், பாடலின் இணைப்பு இசையில் ஒரு தனித்துவ வீர்யம் பளிச்சிட்டது.

"அன்னக்கிளி உன்னைத் தேடுதே' என்று ஜானகியும், செந்தரராஜனும் தனித்தனியே பாடியதில் ஒரு நாட்டுப்புறச் சோகம் சுகமாக கனத்தது. சுயபுராணம் போல் தோன்றும் இந்தப் பீடிகைகளுக்குக் காரணம், எந்தக் காலத்தில் யாரால் ஒரு கலைஞன் ரசிக்கப்படுகிறான் என்பதையும் குறித்துச் செல்ல வேண்டும் என்ற அக்கறைதான்.

ஒருவேளை பத்து - இருபது ஆண்டுகளுக்கு முன் பிறந்திருந்தால், "மச்சானைப் பாத்தீங்களா' செவிப்பறைக்குள் இறங்கியிருக்காதோ என்னவோ! "மன்மத லீலையை வென்றார் உண்டோ'வின் சாருகேசி சங்கீதாம்ருதத்திலிருந்து மனவண்டு நகராதோ என்னவோ! ஆனால் ரசனைகள் கால எல்லைகளுக்கு உட்பட்டவை என்பது எவ்வளவு உண்மையோ, காலத்தை கடந்து நிற்கும் உள்ளங்களும் உள்ளது அவ்வளவு உண்மை.

ஜூன் 2, 1943ல், டி. ராமசாமி - சின்னத்தாயி தம்பதிக்கு மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் இருக்கும் கிராமமான பண்ணைப்புரத்தில் பிறந்தார் இளையராஜா.

(அவரைப் பற்றி வந்திருக்கும் மிகுதியான பத்திரிகை செய்திகளிலும் புத்தகங்களிலும் இல்லாத பிறந்த ஆண்டு குறித்த தகவல் இணையத்தில் உள்ளது. அதைக் கண்டுப்பிடித்து அனுப்பிய நண்பர் சரவணனுக்கு நன்றி).

கிறித்துவத்திற்கு மதம் மாறிய ராமசாமி, டேனியல் ராமசாமி ஆனதால், இளையராஜாவின் பெயர் டேனியல் ராஜய்யா என்று குறிக்கப்பட்டது. இளையராஜாவின் தாய் சின்னத்தாயியை நான்காவது மனைவியாக வரித்திருந்த ராமசாமி, இளையராஜாவின் சிறு பிராயத்திலேயே மறைந்துவிட்டார்.

("இளையராஜாவின் தந்தை தேயிலை தோட்டங்களில் கங்காணியாக வேலை பார்த்தவர்' என்றொரு செய்தி. "அவருக்கு 25 ஏக்கர் பரப்புள்ள ஒரு எஸ்டேட் சொந்தமாக இருந்தது. நான்கு மனைவிமார்கள் இருந்தார்கள். கிட்டத்தட்ட ஒரு குட்டி ராஜா அவர்' என்றார், இளையராஜாவின் முதல் பேட்டியை 1975ல் பிரசுரித்தவர் எம்ஜி. வல்லபன். தொடக்க காலத்தைப் பற்றி இப்படி வேறுபட்ட தகவல்கள். எப்படியோ அய்யனை விட ஆத்தா தான் குடும்பத்திற்கு உழைத்திருந்தார் என்பது, பின்னாளில் இளையராஜாவே எழுதி, இசை அமைத்துப் பாடிய "பொன்னைப் போல ஆத்தா' போன்ற பாடல்களில் வெளிக்காட்டின. கொஞ்சம் சுரத்துக் குறைந்திருந்த தாய் வழிபாட்டுப் பாடல்கள் இளையராஜா காலத்தில் புத்துயிர் பெற்றன).

கிராமீய மணத்தை ஒரு பிரத்யேக வீச்சுடன் திரையில் காட்டியவரின் இசையுடன் அவர் பிறந்த கிராமத்தின் இயற்கைச் சூழல் வெகுவாகப் பின்னிப் பிணைந்திருப்பதாக கொள்ளலாம்.

""பண்ணைப்புரம் கிராமத்தின் ஓடைகளிலும் சாலைகளிலும் மாந்தோப்புக்களிலும் நான் கத்திய கத்தல்கள்! மூங்கிலில் நானாக ஓட்டைப் போட்டு புல்லாங்குழலில் ஊதிய ஊதல்கள்! ""

பண்ணைப்புரத்தின் அழகே அதன் எளிமைதான். மாலை நேரங்களில் அதன் சாலைகளில் நான் மனம் போனபடி பாடிக் கொண்டே நடப்பேன். அது எனக்கு இன்பமான அனுபவம். அந்தக் கிராமத்தின் அழகையும் அமைதியையும் எங்கள் இளைஞர் குழு எவ்வளவு கெடுத்திருந்தது என்பது இப்போதுதான் எனக்குப் புரிகிறது'' என்று "சங்கீதக் கனவுகள்' என்ற நூலில் (கலைஞன் பதிப்பகம்- 1984) குறிப்பிட்டார்.

தனிப்பட்ட இசைக் கத்தல்களையே இப்படி நினைத்தார் என்றால், பிற்காலத்தில் இசை பதிவு செய்யப்பட்டு, நூறாயிரம் பிரதி எடுக்கப்பட்டு, ஒலிப்பெருக்கி மூலம் அலறலாக வெளிப்பட்டதை என்ன நினைத்திருப்பார். அதுவும் தத்துவப்பித்து இன்னும் பழுத்துவிட்ட சூழ்நிலையில்! அதனால்தான் இசை அமைப்பையே ஒரு ஏமாற்றுவித்தை என்றாரோ?

எட்டாவது படித்தார். பிறகு படிக்க வசதி இல்லை. ""எங்கள் அண்ணன் பாவலர் வரதராஜன் அவர்கள் நாடகக் குழு வைத்து நடத்தி, அதனால் ஏற்பட்டுப் போன நஷ்டத்தை ஈடு செய்வதற்காக எங்கள் தந்தையார் சேர்த்துவைத்திருந்த ஏலக்காய் எஸ்டேட், தோட்டங்கள் போன்ற சொத்துக்களை அப்போதுதான் விற்று கடனை அடைத்துவிட்டு கேரளா சென்று, கம்யூனிஸ்டு கட்சியின் தொண்டனாக வேலை செய்து வந்தார். எனவே அவராலும் (படிப்பை நான் தொடர்வதற்கு) ஒன்றும் செய்ய முடியவில்லை…'' (சங்கீத கனவுகள்).

கம்யூனிஸ்டு கட்சியின் பிரச்சாரப் பாடகராக வரதராஜன் உருவாகி வந்தார். 1958ம் ஆண்டு அவருக்குத் திருச்சியில் ஒரு நிகழ்ச்சி இருந்தது. ஆனால் உடல் நிலை சரியாக இல்லை. ""ராஜாவை வேண்டுமானால் அழைத்துக் கொண்டு போ… இடை இடையே ஓரோர் பாடலை அவன் பாடினால் உனக்குக் கொஞ்சம் ஓய்வாவது கிடைக்குமே என்று'' சின்னத்தாயி

கூறியிருக்கிறார்.



""என் அன்னையின் திருவாக்கினால்தான் என் கலை வாழ்க்கை ஆரம்பமானது. அன்று பொன்மலையிலும் திருவெறும்பூரிலும் நடந்த அந்த இசை நிகழ்ச்சிகளில் அவ்வளவு பெரிய கூட்டம் எனக்கும் என் பாட்டுக்கும் மக்கள் கைத்தட்டியது என்னை எங்கோ கொண்டுபோய் விட்டது. அண்ணன் கச்சேரிக்குப் போகும் போதெல்லாம் அவ்வப்போது என்னையும் அழைத்துச் சென்றார்கள்''.

காவிரி ஆற்றின் குளியலும், உச்சிப் பிள்ளையார் கோவிலிலிருந்து பார்த்தபோது காவிரியின் கண்கொள்ளாக் காட்சியும் பாட்டுக்குக் கிடைத்த கைத்தட்டல்களுடன் சேர்ந்துகொண்டன. ஏதோவொரு தாகம் நெஞ்சைப் பற்றிக் கொண்டது. ஆர்மோனியத்தை தலையில் ஏந்தியபடி, வரதராஜன் போன பாதையில் தொடர்ந்தார் இளையவர்.

""வானுயர்ந்த சோலையிலே, நீ நடந்த பாதையெல்லாம் / நானிருந்து வாடுகிறேன், நாவறண்டு பாடுகிறேன்' என்று சொத்துபத்துகளை நாடகம் போட்டு இழந்திருந்தாலும், இலட்சியத்தை இழக்காத அண்ணனின் பாதையில் நடந்தது ஒரு பாடமாக மட்டும் இல்லாமல் ஒரு தவமாகப் பரிணமித்திருக்க வேண்டும்.

பின்னாளில், "மாட்டு வண்டி போகாத ஊருக்கும் எங்கள் பாட்டு வண்டி போயிருக்கு' என்று இளையராஜாவால் கூற முடிந்ததென்றால், ""சமூக விரோதிகளையும், நிலத் திமிங்கிலங்களையும், கறுப்புப் பணக்காரர்களையும் கள்ளச் சந்தைப் பேய்களையும் மேட்டுக்குடி மிருகங்களையும், அதிகாரவர்க்கப் பிசாசுகளையும ஊழல் சேற்றுப் பன்றிகளையும் பாடல் என்ற சவுக்கினால் சுழற்றி, மக்கள் மன்றத்தில் வைத்து அடித்து அடித்து விரட்டிய புதுமைப் பூசாரியை'' (பாவலர் வரதராஜன் பாடல்கள் தொகுப்பிற்கு சிறப்புரையில் ஜெயகாந்தன்) பின் தொடர்ந்ததன் பயன்தான் அது.

"அவருடன் பெட்டி சுமந்து, தவறு செய்தால் குட்டு வாங்கி ஒரு குருகுலவாசத்தில் இருந்ததன்' (இளையராஜா) விளைவு. வரதராஜன் கெட்டிக்காரர். சுரண்டல் வர்க்கத்தை நோக்கிய சாட்டை அடிகளை எல்லாம் மக்களுக்குப் பழக்கமான சினிமா மெட்டுக்களில் அமைத்துவிடுவார்.

"மாவீரமாய் போராடியே, வியட்நாம் தானே வென்றது - எங்கும் வீர வாழ்த்து கேட்குது - உள்ளம் விம்மியே துள்ளுது' - என்பது "பூமாலையில் ஒரு மல்லிகை' யின் மெட்டிலே வரும்.

"உழைத்துக் களைத்தோரின் இயக்கம் தனைக்காத்து வளர்ந்த அஜய்கோஷ் அய்யா - இந்த நிலத்தில் உன்றன் சேவை நினைத்துத் துடித்தேங்க விடுத்துப் பிரிந்தாய் அய்யா""... என்பது "மலர்ந்து மலராத'வின் மெட்டிலே ஊர்வலம் வரும்.

"ஏர்பிடிக்கும் உழவனக்கு நிலமிருக்காது இயந்திரம் போல் உழைத்திடுவான் பலனிருக்காது ஆறுசுவை உணவிருக்கும் பசியிருக்காது அடிவயிற்றைப் பசிகடிக்கும் கூழிருக்காது' என்ற வரிகள் பாலிருக்கும் பழமிருக்கும் நடக்கும் பாதையில் நடக்கும்.

வருங்கால தமிழ்ச் சினிமா இசை அமைப்பாளனான இளையராஜாவிற்குப் பாவலர் வரதராஜனின் கச்சேரிகள் ஒரு பள்ளிக்கூடப் பயிற்சியாக விளங்கின. மெட்டுக்களின் போக்கும் அவற்றைத் தொடர்ந்து இணைப்பு இசைகளின் தன்மையும் அந்த மேடைப் பயிற்சிகளில் மனதில் பதிந்துபோயின.

பாடுவதைக் கேட்டு ஆர்மோனியம் வாசிக்கும் திறமையைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொண்டிருந்தார் இளையராஜா.

"ஒரு கச்சேரிக்கு ரூ. 40. எந்த ஊருக்குச் சென்றாலும் அநேகமாக அதைக்கூடப் பெற முடியாத நிலை' (பாவலர் பாடல் தொகுப்பிற்கு கங்கை அமரன் முன்னுரை) என்ற நிலை 1958-68 என்ற காலகட்டத்தில் தொடர்ந்திருக்கிறது. பாட்டுக் கேட்பதற்காக வாங்கியிருந்த ரேடியோவை விற்றுவிட்டு இளையராஜா தன் சகோதரர்களுடன் (பாஸ்கர், அமர்) சென்னைக்கு ரயிலேறினார். வடகிழக்கே போகும் ரயில்!

அவர்களின் நண்பராகிய சின்னசாமி (என்ற பாரதிராஜா) ஒரு நான்கு ஆண்டுகளுக்கு முன்பே சென்னையை சரண் அடைந்திருந்தார். அவர் இருப்பிடத்திற்கு விட்டார்கள் சவாரி.

""ஒரு கையில் ஆர்மோனியப் பெட்டி... இன்னொரு கையில் எட்டு ரூபா. இந்தக் கோலத்தோட நீயும் உன் அண்ணன் பாஸ்கரும் வந்து சேர்ந்து மெட்ராஸ ன்ங்கற நினைப்பே இல்லாம பிரியாணியே தின்னனும்பீங்க! எனக்கு அப்போ சம்பளம் 85 ரூபா. அதிலே உங்களுக்குப் பிரியாணி வாங்கிக்கொடுத்துட்டு நான் என்னப் பண்றது. அப்போ இருந்த பொருளாதாரச் சூழ்நிலையில ஒரு காப்பியை ரெண்டு பேரு குடிச்சாத்தான் சரியா வரும். ஆனால் அண்ணனும் தம்பியும் முழுக் காப்பிதான் வேணும்பீங்க...'' என்று அந்த ஆரம்பகால நிலையை வெற்றி அடைந்த காலத்தில் இளையராஜாவுடன் ஒரு கலந்துரையாடலில் பாரதிராஜா பகிர்ந்துகொண்டார்.

முழுக் காப்பியும் பிரியாணியும் கேட்டவர்களை முழுப் பட்டினியும் வருத்தாமல் இல்லை.

*அந்த ஆண்டு ஆயுத பூஜைக்கு முந்திய நான்கு நாட்கள் குலைப்பட்டினியாம். பூஜை அன்று பாரதிராஜா வேலைபார்த்த பெட்ரோல் பங்கிலிருந்து வந்த பொட்டலம்தான் உண்ணாவிரதத்தை முடிக்க உதவியது..*

*(இளையராஜா - பாரதிராஜ் உரையாடல், பேசும் படம் டிசம்பர் 1977).*

*இதற்கிடையில் இளையராஜாவிற்கு ஒரு ஃபிளாஷ்பேக்.*

*திருச்சி பொன்மலையில் இசை நிகழ்ச்சி கொடுத்தபோது, அவர்கள் பாடிய பாடல்களை ஒரு வீட்டு மாடியிலிருந்து கேட்டிருந்தார் எம்.எஸ். விஸ்வநாதன். தனது மெட்டுக்களில் சமுதாயக் கருத்துக்களைப் புகுத்திப் பாடியவர்களைத் தன்னிடம் அழைத்துவரச் சொன்னாராம். ஆனால் எப்படியோ அந்தச் சந்திப்பு நடைபெறவில்லை.*

*சென்னை வந்ததும் விஸ்வநாதனின் ஆசிகளை வாங்க நினைத்தார். ஒரு வெள்ளிக்கிழமை அவரைப் பார்க்க அனுமதி கிடைத்தது. அவரைக்காண வந்திருந்த கூட்டம் பெருகிக்கொண்டே போனது. "தன்னை அழைத்துச் சென்று பூஜை அறையில் ஆசிகள் கூறுவார் என்று எதிர்பார்த்தார் இளையராஜா! அடுத்த வெள்ளி வா. ஆசீர்வாதம் செய்கிறேன் என்கிறார் விஸ்வநாதன்.*

*ஆனால் அடுத்த வாரம் சென்றும் அது நடக்கவில்லை. இசைக் குழுவில் இடமோ, இசைப்பயிற்சியோ எதிர்பார்த்துச் செல்லவில்லை. இசை மேதையிடம் ஆசி பெறச் சென்றோம் அதுவும் கிடைக்கவில்லையே என்று மனம் வாடியது. அவர் இவ்வளவு தூரம் பேசியதே பாக்கியம் என்று மனதைத் தேற்றிக் கொண்டார்.'' (எம்.ஜி. வல்லபன் கட்டுரை..)*

*சென்னையில் பாதிப் பட்டினியில் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவருக்கு, வாராது வந்த மாமணிபோல் ஒரு மேதை கிடைத்தார்.*

***இசைப் பிரவாகத்தின் நதி மூலம்***

*சென்னையில் மயிலைப் பகுதியில் லஸ் கார்னரில் உள்ளது சாய் லாட்ஜ்.*

*ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன் அதன் செங்குத்தான படிகளைக் கடந்து சென்று, அறை காலியிருக்கிறதா என்று நீங்கள் கேட்க நேர்ந்திருந்தால், இடப் பகுதியில் ஒரு அறையிலிருந்து வாத்திய இசை வருவதைக் கேட்டிருக்கலாம்.*

*கிடார் இசையும், டிரம்ஸ ன் களின் ஒலியும், பியானோவின் மெல்லோசைகளும் 13 வது எண் அறையிலிருந்து வந்தபடி இருக்கும்.*

*(இன்றைக்கு அறை எண்ணும் அதைச் சுற்றியுள்ள அமைப்புகளும் வெகுவாக மாறியிருக்கின்றன. வெளியில், சாலையில் விரைந்து கொண்டிருக்கும் வாகனங்களின் இரைச்சல்தான் சில சமயம் கேட்கும்).*

*அந்தக் காலத்தில், திரை வாத்தியக் கலைஞர்கள் பலர், சாய் லாட்ஜின் படிகளை ஏறியவர்கள்தான். அந்தப் படிகள்தான் அவர்களது இசை அறிவின் ஆரோகணமாக விளங்கியது! அதற்கு உத்திரவாதம் தந்தவர் அந்த அறையின் நடுநாயகமாக விளங்கிய தன்ராஜ்.*

*மதுரமான ஸ்வரங்களையும் மதுவையும் விரும்பிய விசித்திர மனிதர் தன்ராஜ். மேற்கத்திய இசைக் கடலின் அகல நீளங்களை அளந்து, துரதிர்ஷ்டப் புயலில் சிக்கிய மரக்கலமாய் ரூம் நம்பர் 13ல் ஒதுங்கி, பலருக்கு கலங்கரை விளக்கமாய் பரிணமித்த மகானுபாவர்.*

*இவர்களில் ஆர். பார்த்தசாரதி (அவன் பித்தனா, கல்யாண ஊர்வலம்), எல். வைத்தியநாதன் ஆகியோர் குறிப்பிடத் தகுந்தவர்கள். டிகே. ராமமூர்த்தியும் தன்ராஜிடம் மேற்கத்திய இசை நுணுக்கங்களை அறிந்ததுண்டு.*

*அமாவாசை இருட்டில், தன்ராஜின் இதயம் புட்டிக்குள் அடைக்கலமாகும். அதில் அவர் லயித்துப் போனால், அதே சகவாசதோஷம் பல நாட்கள் நீடிக்கலாம் என்று உணர்ந்து, ஓட்டல் சூப்பர்வைசர் போஜன் முதலியோர் அந்தத் தொடர்பைத் தள்ளிப்போட முயல்வதும் உண்டு.*

*என்ன இருந்தாலும் இசையில் தன்ராஜ் கிங். "தன்ராஜ் மாஸ்டர்' என்றால் ஏதோ இசை டியூஷன் சொல்லிக் கொடுக்கும் மாஸ்டர் அல்ல. அவர் நிஜமாகவே மாஸ்டர் தான். கண்டிப்பானவர். கோபக்காரர்.*

*நடுத்தர உயரம், மாநிறம் சாதாரண உடல் பாங்கு, மூட் நன்றாக இருக்கும் போது, அரைக் கை சட்டையும் வேட்டியும் அணிந்து, வாயில் சுருட்டு அல்லது சார்மினார் புகைய, சாய் லாட்ஜ் அலுவலக அறை பக்கம் எட்டிப் பார்ப்பார் தன்ராஜ். இணக்கமாகப் பேச்சுக் கொடுப்பார். ஒரு காலத்தில் ஹாக்கி விளையாடியவரின் பேச்சில், அப்போது சூரியன் ஒளிர்வான்.*

*சென்னை வெயில், சாதாரணர்களைக் கூடுதலாக வாட்டும். "வெயில் படபடக்கும் வெப்பம் கொழுந்துவிடும், நெய்யில் நெருப்புருக்கும் தார்போட்ட நெடுவீதி, இருபுறமும் மச்சுமச்சாய் கட்டிடங்கள் எத்தனையோ, ஒரு மனிதன் தங்குதற்கோர் ஒதுக்குப்புறம் இல்லை..' என்று சதுசு. யோகியார் அனுபவித்த வெப்பம், வடபழனியிலிருந்து நடந்தே வந்திருந்த இளையராஜாவைத் தொடர்ந்தே வரும்.*

*வாய்ப்பு கேட்கச் செல்லும் சினிமா கம்பெனிகளின் நிராகரிப்பு, மெல்லிசை நிகழ்ச்சிகளில் வாசிக்கச் செல்லும் போது பெரிய கலைஞர்களின் அவமதிப்பு, வயிற்றில் அடிக்கடி கொழுந்து விட்டெரியும் பசித் தீ என்று உயிரை வாட்டிய நெருப்புகளுக்குப் பஞ்சம் இல்லை.*



தோற்றத்தில் சாதாரணராகவும், படிப்பறிவோ, சமூக அந்தஸ்தோ இல்லாதவராகவும் இருந்தவருக்கு சாய் லாட்ஜில் தன்ராஜின் வரவேற்பு கிடைத்தது.

முதல் படத்திலேயே தனித்துவம் மிக்க இசைச் சேர்ப்புகளைச் செய்தவர் என்ற பெருமையை அடைவதற்கும், வாத்தியங்களை "அரேஞ்ச்' செய்வதில் வல்லவரான இசை அமைப்பாளர் என்று பெயர் பெறுவதற்கும், சிம்போனி வரை சென்ற ஒரே தமிழ் இசை அமைப்பாளர் என்ற தகுதி கிடைப்பதற்கும் (இந்தக் கடைசி பரிமாணத்தால் அவருக்குப் பணவிரயமும் மனக் கஷ்டமும்தான் சம்பவித்தன என்பது ஒரு புறம் இருந்தாலும்), சாய் லாட்ஜின் படிகள்தான் இளையராஜாவிற்கு ஏணியாக அமைந்தன.

""வருமானம் இல்லாத நிலையில் இருந்த என்னிடம் அவர் பணமே வாங்கலே.''

""இசையின் அடிப்படை நுணுக்கங்களை கற்றுத் தந்தார். பியானோ கற்றுக் கொள்வதற்காக நான் அவரிடம் சேர்ந்தேன். எனக்கிருந்த ஆர்வத்தைக் கண்ட அவர், "அதைத் தெரிந்து கொள்' "இதைத் தெரிந்து கொள்' என்று கொஞ்சம் கொஞ்சமாக எல்லாவற்றையும் கற்றுக் கொடுத்தார்.

"வாரத்தில் இரண்டு நாள், இரண்டு மணி நேரம் பயிற்சி பெற, சேர்ந்திருந்த நான், "தினமும் வருகிறேன்' என்றேன்... "சரி வா' என்றார்.'' (சங்கீதக் கனவுகள் - இளையராஜா)

விஸ்வநாதன் பாடல்களில் மெட்டுக்களில் அண்ணன் பாவலர் வரதராஜன் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரப் பாடல்கள் பாட, அவருக்கு பின்னணி ஆர்மோனியம் வாசித்தும், கிராமீயப் பாடல்களை வாய்விட்டுப் பாடி மகிழ்ந்தும், தன்னுடைய இசை ரசனைகளை வளர்த்துக்கொண்டவருக்கு, ஒரு மேற்கத்திய இசைப் பரிமாணத்தை தன்ராஜ் அளித்துக்கொண்டிருந்தார்.

அதனால் என்ன ஆயிற்று?

""சாய் லாட்ஜ் ரூம் நம்பர் 13ல், பீதோவனும் மோசார்டும், பாஹ்கும் மேண்டல்சனும், பிராம்ஸன்ம் ஷுபர்டும், சைக்காவ்ஸ்கியும் அடிக்கடி வந்துபோவார்கள். அங்கு வராத இசை மேதைகளும் கிடையாது, இசையும் கிடையாது.

தன்ராஜின் தொடர்பினால் இளையராஜா பெற்ற இசைப் பிரவாகத்தின் நதி மூலத்தை ஆய்வது சுவாரஸ்யமானது.

மைசூர் மகாராஜாவின் இசைக்குழுவில் இருந்தவர் தன்ராஜ். அதை வழிநடத்திய கண்டக்டர், ஒரு ஜெர்மானியர். அவரது தொடர்பினால், மேற்கத்திய கிளாசிகல் இசையின் ஞானம் பெற்றார் தன்ராஜ்.

இரண்டாம் உலகப்போர் வெடித்தபோது, பிரிட்டிஷ் இந்தியாவிலிருந்து வெளியேறினார் ஜெர்மானியர். சில ஆண்டுகள் வேலையில்லாமல் தவித்த தன்ராஜுக்கு, ஜெமினி வாசன் ஓரளவிற்கு ஆதரவு அளித்திருக்கிறார்.

(தன்ராஜுக்கு, சந்திரலேகாவின் இசை அமைப்பில் ஓரளவிற்குப் பங்கு இருந்ததாகச் சொல்லப்படுகிறது... ஆனால் டைட்டிலில் பெயர் இல்லை. அதே போலத்தான் ராஜி என் கண்மணியிலும்-1954)

ஜெர்மானியரிடமிருந்து தாம் பெற்ற மேற்கத்திய இசை ஞானத்தை இளையராஜாவிற்கு அளித்த தன்ராஜ், இன்னொரு விதத்திலும் அவருக்கு ஒரு இசைப் பாரம்பரியத்தை அளித்தார். "கர்ணாமிருத சாகரம்' என்ற நூலை எழுதிய, புகழ் பெற்ற இசை அறிஞர், போஷகர் ஆப்ரஹாம் பண்டிதரின் பேரன் ஆவார் தன்ராஜ். அவரது சீடர் என்றால் சும்மாவா!

இதற்கிடையில், திரை உலில் ஒரு நுழைவாயில் திறந்தது. விஸ்வநாதனிடம் கிடைக்காத வாய்ப்பு, ஆரம்பகாலத்திலிருந்தே அவரது நண்பரும் பிறகு அவரது உதவி இசை அமைப்பாளருமான ஜி.கே. வெங்கடேஷிடம் கிடைத்தது. முதலில், அது ஒன்றும் ராஜபாட்டையாக இருக்கவில்லை.

இளையராஜாவின் எளிய தோற்றத்தையும் பின்னணியையும் கண்டு வெங்கடேஷ் சிகப்புக் கம்பள வரவேற்பை அளித்துவிடவில்லை. ஆனால் அவர் கையில் (தன்ராஜிடம் கற்ற) சரக்கு இருந்தது. முன்னுக்கு வரவேண்டும் என்ற தாகத்தில் அவமரியாதைகளை அசட்டை செய்யும் தன்மை இருந்தது...

வெங்கடேஷிடம் ஏகப்பட்ட கன்னடப் படங்கள் (அந்தக் காலத்தில் கன்னடத் திரை உலகம் பெங்களூருக்கு குடிபெயர்ந்திருக்கவில்லை), ஒரு சில தமிழ்ப் படங்கள்.

பிழைப்பைத் தேடி தம்பிகள் சென்னை போய்விட்ட நிலையில், தோழர் வரதராஜனின் வாழ்க்கை அதன் அந்திம கால சுழிப்புகளைக் கண்டுகொண்டிருந்தது. தீவிரவாதி என்று குற்றம் சாட்டப் பட்டு, கொலை மிரட்டல்களையும் பொய் வழக்குகளையும் அவர் சந்தித்துக் கொண்டிருந்தார். சிறையிலும் அடைக்கப்பட்டார்.

""தன் வாழ்க்கையையே மக்களுக்காக அர்ப்பணித்த ஒரு உன்னதமான கலைஞனின் கடைசி காலம் கல் நெஞ்சத்தையும் கரைக்கும். ஒரு கலைஞரின் ஆட்சியில் அவர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த நேரத்தில் எந்தக் கட்சிக்காக அவர்

பாடினாரோ, அந்தக் கட்சியிலிருந்து அவருக்கு ஜாமீன் கொடுக்க எந்தத் தலைவரும் வரவில்லை. எந்தத் தொண்டரும் வரவில்லை. அவருடைய தம்பிகள் தான் அவரை வெளியில் கொண்டுவந்தார்கள்.

இதை யாரும் மறுக்க முடியாது. எல்லோரும் ஒரே ரத்தம்தான். ஆனால் தம்பிகள் ரத்தம் போலாகுமா?'' என்பது இளையராஜாவின் அனுபவம்.

என்றுமே இளையராஜா கம்யூனிஸ்டாக இருந்ததில்லை. இத்தகைய அனுபவங்கள், அரசியல் மீதே ஒரு அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

பாவலருடன் முன்பெல்லாம் ஊர் ஊராகச் சுற்றும்போது அவர் கோயில்களுக்குச் சென்றதுண்டு. கும்பிட அல்ல. கலையை ரசிக்க. பிறகு ஏற்பட்ட மாற்றங்களால், கொல்லூர் மூகாம்பிகை கோவிலுக்குச் சென்றார்.

""1974ல் நான் கோயிலுக்குள் போறப்போ முதல் படியிலே நான் காலடி எடுத்து வச்சவுடனே ஷாக் மாதிரி வந்தது. உள்ளே மனசுக்குள் ஒரு அழுத்தம் வந்தது. அந்த இடத்திலிலேயே அப்படியே சிலை மாதிரி நின்னு, என்ன இது, என்னவோ இருக்கேன்னு ஒரு தேடல் ஆரம்பிச்சது. அந்தம்மா மேலே பெரிய நம்பிக்கை வந்தது''.

பின்னாளின் ஜிப்பா, வேட்டி, மழித்த தலை, குங்குமப் பொட்டு என்கிற கோலமெல்லாம் வராத, கூலிங் கிளாஸ், கலர் ஷர்ட், பெல் பாட்டம் காலத்திலேயே உள்ளுக்குள் இளையராஜா மாற ஆரம்பித்திருந்தார்.

வெங்கடேஷின் இசைக்குழுவில் சேர்ந்த பின், அவருடைய ஏழ்மை நிலையும் மாற ஆரம்பித்திருந்தது. அவரது திறமைகளுக்குச் சரியான களம் கிடைத்திருந்தது. வெங்கடேஷின் இசைக்குழுவில் புல்லாங்குழல் வாசித்த முன்னணி வாத்தியக் கலைஞர் சுதாகர், அந்த நாள் இளையராஜாவின் செயல்பாடுகளை விளக்கினார்_

""நான் மீன்வளத்துறையில் வேலை பார்த்து வந்தேன். மாலை வேளைகளில் நேரம் கிடைக்கும்போது ஜி.கே. வெங்கடேஷின் இசைக் குழுவில் புல்லாங்குழல் வாசித்துவந்தேன். அங்கே இளையராஜா - நான் ராஜா என்று தான் அவரை அறிவேன் - வெங்கடேஷின் கம்போசிங் அசிஸ்டென்டாக வேலை பார்த்து வந்தார். ஏங் ஜ்ஹஸ் க்ர்ண்ய்ஞ் ஸ்ங்ழ்ஹ் ங்ச்ச்ண்ஸ்ரீண்ங்ய்ற் ஜ்ஹ்ஹ் . மிகத் திறமையாகப் பணியாற்றினார்.

"கம்போஸிங் அசிஸ்டென்ட்'னா? "

"இசை அமைப்பாளர், தயாரிப்பாளர் இயக்குநருடன் உட்கார்ந்து மெட்டமைக்குபோது, மெட்டுக்களை நோட்ஸ் (இசைக் குறிப்பு) எடுப்பவர். தயாரிப்பாளர் மற்றும் இயக்குநரின் தேவைகளைக் கேட்டுக் கொள்வது_ சுருக்கமாகச் சொல்லப் போனால், கம்போசிங் அசிஸ்டெண்ட் என்பவர் இசை அமைப்பாளருக்கும் தயாரிப்பாளர் அல்லது இயக்குநருக்கும் ஒரு பாலமாக அமைவார்_

கிளாசிகல் கிடாரில் எட்டாவது கிரேட் வரை, படித்து முடிக்கக் கூடியவர் என்பதால், தனது வேலையைத் திறமையாக முடிப்பதைக் கவனித்தேன்.

கஸல் பாணியும் இந்துஸ்தானி இசையின் நளினங்களும் சிறந்த பழைய இந்திப் பாடல்களின் தாக்கமும் வெங்கடேஷின் மெட்டமைப்பில் சங்கமிக்கும். "தொடுவதென்ன தென்றலோ மலர்களோ' (சபதம் 1971 / கண்ணதாசன், எஸ்.பி.பி.), "தேன் சிந்துதே வானம்' (பொண்ணுக்குத் தங்க மனசு, கண்ணதாசன், எஸ்.பி.பி., ஜானகி) போன்ற அழகான வார்ப்புகளின் உருவாக்கத்தில் இளையராஜா பங்கேற்றிருக்கிறார். மெட்டுக்கு ஏற்ற இணைப்பு இசை நல்குவதில் அனுபவம் கிட்டியிருக்கிறது.

வெங்கடேஷின் உதவி இசை அமைப்பாளராக எல். வைத்தியநாதனும் இளையராஜாவும் இருந்திருக்கிறார்கள். இரண்டு பேரும் தன்ராஜின் சீடர்கள். அழகிய இசை "அரேஞ்ச்மென்டு' (வாத்தியங்களை மேற்கத்திய இசையின் நேர்த்தியுடன் அமைப்பது) செய்யும் முறைகள் வசப்பட ஆரம்பித்துவிட்டன.

வெங்கடேஷின் இடத்தில் இருந்து, மெட்டுக்களைப் பாடகர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது, சில சமயம் வாத்திய இசை அமைத்து ஒலிப்பதிவு வரை போவது என்று இசை அமைப்பின் நெளிவு சுளிவுகளில் நேரடி அனுபவம் கிடைத்தது.

கோவர்த்தனம் பாடல்கள் அமைத்த "வரப்பிரசாதம்' (1975) படத்திற்கு, பின்னணி இசை அமைக்கும் பொறுப்பை நிர்வகிக்க முடிந்தது. பாடல்கள் அமைப்பதில் தன்னுடைய பாணியைக் காண்பிக்க, ஒரு தனி எல்.பி. இசைத்தட்டை பாவலர் பிரதர்ஸ் என்ற பெயரில் இளையராஜா உருவாக்கினார்.

("பாப் ஹிட்ஸ் ஆஃப் 1975' என்ற தலைப்புடன், மலேஷியாவில் வெளியிடப்பட்ட ஒரு இசைத் தட்டு, சேகரிப்பாளர் திருநின்றவூர் சந்தானகிருஷ்ணனிடம் உள்ளது. கங்கை அமரன் எழுதிய பாடல்களை எஸ்.பி. பாலசுப்ரமணியம், பூரணி, ஆர்.டி. பாஸ்கர், மலேஷியா வாசுதேவன், டி.எம். செற்ந்தரராஜன் முதலியோர் பாடியிருக்கிறார்கள். தயாரிப்பு, வி.பி. டேவிட் தன்ராஜ்).

ஒன்றிரண்டு பட வாய்ப்புகள் வந்தும் அவை நிறைவு பெறவில்லை. இந்த நிலையில் தான் "அன்னக்கிளி' பறந்து வந்தது. "அன்னக்கிளி' கதாசிரியர் செல்வராஜ், இளையராஜாவிற்கு முன்பே பரிச்சயமானவர். "ஓ நெஞ்சமே' என்ற நாடகத்திற்கு இசை அமைக்கும் போது நட்பு வலுத்தது.

பஞ்சு அருணாசலத்திடம் அவரை அறிமுகம் செய்து வைத்தது செல்வராஜ்தான். அப்போது, "கல்யாணமாம் கல்யாணம்' (1974 - கதை - வசனம் - பஞ்சு அருணாசலம், இயக்கம் கே. கிருஷ்ணமூர்த்தி; இசை விஜய்பாஸ்கர்) என்ற படத்தில் சம்பந்தப்பட்டிருந்தார் பஞ்சு அருணாசலம். படத்தின் அபரிமிதமான வெற்றி, அவர் வாய்ப்புகளைக் கணிசமாக

அதிகரித்திருந்தது.

இந்த நிலையில் தான் "அன்னக்கிளி' தயாரிக்க ஆயத்தமானார். "அவள் ஒரு தொடர்கதை'யில் நடிப்பாலும் முகவெட்டாலும் கொடிகட்டிப் பறந்த சுஜாதாதான் தியாகம் செய்யும் அன்னம். அன்னத்தை சுற்றிப் பின்னப்பட்ட கதையை, முற்றிலும் இயற்கைச் சூழலில் கற்பனை செய்திருந்தார்கள் கதாசிரியர் (செல்வராஜ்), இயக்குநர்கள் (தேவராஜ் - மோகன்) மற்றும் தயாரிப்பாளர்.

ராஜய்யா என்ற ராஜ், இளையராஜாவானதும் (அந்தக் காலத்து ஏ.எம். ராஜா, எழுபதுகளில் ஒரு சில படங்களுக்கு இசை அமைக்கத் தொடங்கியதால் அவரிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட, ராஜா இளையராஜா வானார்).

அலை அலையாக வந்த தடைகளை மீறி அன்னக்கிளி பாடல்களை உருவாக்கியதும் எல்லோரும் அறிந்ததுதான்.

இயற்கை கொஞ்சம் கிராமத்துச் சூழலில், முக்கியமாக அந்தச் சூழலில் நாயகியாக சுஜாதா ஈர்த்ததும் (சிவகுமார் முதலிய நடிகர்களின் உதவியுடன் தான்), விறுவிறுப்பான திரைக்கதையும் மனதைக் கவர்ந்தன என்றால், இந்த போக்கின் நாதத் துடிப்பாகவும் மண்வாசமாகவும் இளையராஜாவின் பாடல்கள் பரிணமித்துவிட்டன.

கிராமத்து வாத்தியங்கள் ஒரு பிரத்யேக வீச்சுடன் கலந்து முழங்கின. இசைச் சேர்ப்பின் கோலங்களில் வாத்தியங்கள் துள்ளிக் குதித்தன. நாயகியின் பரபரப்புத் தேடல் (மச்சானைப் பாத்தீங்களா - எஸ். ஜானகி), ராட்டினத்தின் வேகச்சூழற்சியாகவும் ரேக்ளா வண்டியின் துரிதப் பாய்ச்சலாகவும் தமிழ் நாடெங்கும் ரீங்காரமிட்டது.

"லாலிலாலிலலோ..' என்று அன்னத்தின் தேடலை அறிவிக்கும் ஜானகியின் குயில்பாட்டிலும், தன்னுடைய நாயகன் இன்னொருத்தியின் மணவாளன் ஆகப் போகிறான் என்ற ஏக்கச் சுமையை ஓரமாகக் கட்டி வைத்துவிட்டு, "நம்ம வீட்டுக் கல்யாணம்' என்று அவளது துள்ளலை எதிரொலிக்கும் பாட்டும், இசையின் வண்ணங்களை எண்ணங்களுடன் கலந்து திரைக்கு அளிக்கக் கூடியவர் வந்துவிட்டார் என்று பறைசாற்றின.

விஸ்வநாதன் வாத்தியக்காரர்கள் மத்தியில் சிங்கம் போல் சஞ்சரித்து, படத்திற்குப் படம் ஹிட் பாடல்களைக் கொடுப்பதைப் பார்த்தால் பிரமிப்பாக இருக்கும். இந்தச் சூழலில், தனது இசை ஒரு நல்ல வரவேற்பைப் பெற வேண்டும் என்றால் அது மாறுபட்டதாக இருக்க வேண்டும் என்று இளையராஜா உணர்ந்தார். அப்படிச் செய்ய கடுமையாக உழைத்தார்.

வாத்தியங்களின் தன்மைகளை ஆராய்ந்தார். அவற்றைக் கலப்பதில் உள்ள நுட்பங்களைக் கையாண்டார். அசல் கிராமத்துப் பாணியை உள்ளிழுத்துக் கொண்டு, ஒரு புதிய பாய்ச்சலுடன் கிளம்பினார்.

அன்னக்கிளியின் மெல்லிய சிறகுகள் மீது ஆரோகணித்து, இசை வானில் பறக்க ஆரம்பித்துவிட்டார்.

**அன்னக்கிளியின் அரிச்சுவடி**



தமிழ் சினிமாவில் சகாப்தங்களின் நாயகர்களாகத் திகழ்ந்த பல இசை அமைப்பாளர்கள் யாரும் முதல் வீச்சிலேயே சிகரத்திற்கு சென்றவர்கள் அல்ல, இளையராஜாவையும் அவரைத் தொடர்ந்து வந்த ரஹ்மானையும் தவிர.

ராகங்களை அழகான மெட்டுக்களாக வடித்தவர் என்று புகழ் பெற்ற இசைப் படைப்பாளியான ராமநாத அய்யர், ஏறக்குறைய பேசும் படம் தொடங்கிய போதே தமிழ் சினிமாவில் நுழைந்தவர்.

ஆனால் "இசை அமைப்பாளர்' என்ற பொறுப்பே முழுமை பெறாத காலத்தில், அவர் அப்படி அறியப்படுவதற்கு பல ஆண்டுகள் பிடித்தது. பிரவேசம் செய்த இரண்டு பத்தாண்டுகளுக்குப் பிறகுதான் அவர் தளைகள் விடுபட்ட சுதந்திர இசைப் புருஷராக பவனி வந்த ஐம்பதுகளை தனதாக்கிக் கொண்டார்.

திரை இசைத் திலகம் என்று பின்னாளில் கொடி கட்டிப் பறந்த கேவி. மகாதேவன், டிஏ. கல்யாணத்துடன் நாற்பதுகளின் தொடக்கத்தில் இசை அமைத்தவர். நாற்பதுகளின் இடைப் பகுதியில் தானே சில படங்களுக்கு இசை அமைத்து வாய்ப்புகள் இல்லாமல் கிராமபோன் கம்பெனியில் தஞ்சம் புகுந்தார்.

ஐம்பதுகளில் மீண்டும் தொடங்கிய அவரது இசை அமைப்பு, ஐம்பதுகளின் கடைசி ஆண்டுகளிலும் அறுபதுகளிலும்தான் உச்சத்தை எட்டியது. இசை மேதை சி.ஆர். சுப்பராமனின் திடீர் மறைவால், அவர் ஒப்பந்தமாகியிருந்த படங்கள் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இணைக்குப் பிள்ளையார் சுழியாக அமைந்தது.

(அந்தச் சமயத்தில், ஜெனோவா என்ற படத்திற்கு தனியாக இசை அமைத்திருந்தார் எம்எஸ். விஸ்வநாதன். சுப்பராமன் உயிரோடு இருந்து, ராமமூர்த்தியும் விஸ்வநாதனுடன் இணையாதிருந்தால், பின்னவரின் இசைப் பயணம் எப்படி அமைந்திருக்கும் என்பது கற்பனையின்பாற்பட்டது). ஆனால் விஸ்வநாதன் - ராமமூர்த்தி இணை, ஒரு ஏழு - எட்டு ஆண்டுகள் எதிர்நீச்சல் அடித்த பின், "பா' வரிசைப் படங்களில்தான் வெல்லும் தொனியைக் காண முடிந்தது.

மேற்கூறிய இசை அமைப்பாளர்களுக்குக் கிடைத்த இளமைப் பிரவேசம் (ராமநாதன் - 21 வயதில், கேவி.எம். 24 வயதில், எம்.எஸ்வி. 24 வயதில்) இளையராஜாவிற்கு கிட்டாத போதும் (முதல் படம் 33 வயதில்), எடுத்து வைத்த முதல் அடியிலேயே தனது தனித்துவமான பாணியால் கவனத்தை ஈர்க்கும் படைப்பாளியாக அடையாளம் காணப்படும் பெருமை அவருக்கே அமைந்தது.

ஜி.கே. வெங்கடேஷின் குழுவில் கிடைத்த அனுபவத்தோடு, கேவி. மகாதேவன், எம்.எஸ். விஸ்வநாதன், வி. குமார், சலீல் சவுத்ரி மற்றும் மலையாளம் தட்சிணாமூர்த்தி ஆகியோரிடம் பணியாற்றிய அனுபவமும் துணைபுரிந்தது.

தான் வந்த காலத்தில் கோலோச்சிய (எம்.எஸ். விஸ்வநாதனின்) நாதத்தின் தன்மைகளையும், அதனின்று மாறுபட்டு ஒலிக்கவேண்டிய உத்திகளையும் நன்றாக உணர்ந்துகொண்டு, சுயமான கற்பனை பலத்துடனும் மனம் தோய்ந்த ரசனையுடனும் வழங்கியதால் அன்னக்கிளி தமிழ் ரசிகர்களிடம் பலித்தது.

""எனக்கா நான் ரசிக்க ரசிக்க, சாந்தோம் பீச்ல சத்தம் போட்டு பாடிட்டே நடந்து நடந்து போட்டப் பாடல்கள்... அன்னக்கிளி உன்னைத் தேடுதே எல்லாம் அப்படி நான் கம்போஸ் பண்ணதுதான்... கத்திப் பாடிட்டே போறது... பின்னணி இசை கூட அப்படித்தான்... ஒரு பாட்டை எவ்வளவு இனிமையா கொண்டு வரணுங்கறதுலதான் கவனம் இருந்தது... சக்ஸஸ் ஆகுமா, பெயிலியர் ஆகுமாங்கற பயமெல்லாம் இல்லை... எனக்கு ஜி.கே. வெங்கடேஷ் கிட்ட ரெகுலரா வர்க் நடந்து கிட்டிருந்தது. தேவையான அளவு வருமானம் வந்துகிட்டிருந்தது...'' என்று இளையராஜாவே ஒரு பேட்டியில் கூறியதைப் போல, வெற்றி தோல்வியைக் குறித்து கவலை இல்லாத, ஒரு தனிப் படைப்பாளியின் உள்ளத்தில் மட்டுமே அலை அலையாக இன்ப ரசம் எழுப்பிய இசை வடிவங்கள், எந்தவித குறுக்கீடும் இல்லாமல் பொது அரங்கத்திற்கு வந்த போது அவை ஜீவனுள்ள கீதங்களாக கேட்போரை பரவசப்படுத்தின.

அன்னக்கிளி உன்னைத் தேடுதே என்று அன்னம் உருகியபோது, அவளது பாட்டின் ஒவ்வொரு வரியிலும், அதை கனபரிமாணத்தோடு தொடர்ந்த இணைப்பு இசையிலும் ஒரு ஈர்ப்பும் இனிமையும் பெருகெடுத்தன... உதாரணத்திற்கு... ஒன்று, இரண்டு மூன்றாவது சரணங்களில் முறையே "உறங்காத' என்றும், மழைபெஞ்சா' வென்றும், "புள்ளிபோட்ட' என்று ஜானகி இழுக்கும் சுகமும், அதற்கு முத்தாய்ப்பு வைக்கும் போது தபேலா தத்தி வரும் நேர்த்தியும் இனிமையிலும் இனிமை.

நெல்லூரு ஜானகி உள்ளூர் மணத்தோடு பாடியது ஒரு பிரமிப்புதான்... ஆனால் அதைவிட பிரமிப்பைத் தருவது உள்ளம் உருக அவர் மனம் பாடலில் பீறிட்டெழச் செய்யும் உணர்ச்சி. அவருக்குப் பன்னீர் தெளிப்பதுபோல அவ்வப்போது குழல் சிலிர்க்கும் சிலிர்ப்புகளும் அனுபவக்கத்தக்கவை.

"அன்னக்கிளி' பாடலிலும், "மச்சானைப் பாத்தீங்கா'ளாவிலும் குரலும் குழல் இத்யாதிகளும் உற்சாகத்துடன் கைகுலுக்க ஓடிவரும் லாகவம் இசை அமைப்பாளரின் கற்பனை வளத்தையும் ஒவ்வொரு ஆவர்த்தத்தையும் கண்ணென எண்ணி இணைக்கும் உழைப்பையும் முன்னுக்கு நிறுத்துகின்றன.

"ஆளைப் பார்க்கலாம் ரீ-ரிகார்டிங்கில்... என்னவோ படத்துக்குப் பாட்டு மட்டும் போட்டால் ஆச்சா'' என்றார் ஒருவர் இளையராஜா காதுபட, எகத்தாளமாகத்தான். அவரும் இசை அமைப்பாளர். "அந்த அலட்சியப் பேச்சே என்னுள் இருந்த சக்தியை உசுப்பி விட்டது. 14 ரீல்களுக்கு நானே இசை அமைத்தேன்' என்பார் இளையராஜா.

("ஆமாம், இசை அமைப்பாளர்தானே பின்னணி இசையையும் அமைக்க வேண்டும்' என்று கேட்டுவிடாதீர்கள்... சில இசை அமைப்பாளர்கள் மெட்டைப் போட்டு விடுவதோடு சரி... மெட்டின் ஸ்வரங்களைக் கூட சிலர் அறியமாட்டார்கள்... கூட இருக்கும் உதவியாளர் "தன்னன்னா'வை ஸ்வரம் எழுதிக் கொள்ள வேண்டும்... இன்னொருவர் பின்னணி இசை போட வேண்டும்... விஷயம் தெரியாத இசை அமைப்பாளர்களும் உண்டு... தெரிந்தும் செய்யாதவர்களும் உண்டு.)

வானொலியிலிருந்தும் (1976ல் தொலைக்காட்சி என்றால் டிடி தான்...) இசைத் தட்டுக்களிலிருந்தும், திருமண வீடுகள் மற்றும் திருவிழா ஒலிபெருக்கிக்களிலிருந்தும் ஒலித்த "மச்சானைப் பாத்தீங்களா'வும் "அன்னக்கிளி உன்னெ தேடுதே'வும் காற்றின் அலைவரிசையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன. ஏதோ வெற்றிப் பாடல் என்று மட்டும் அல்ல. காதுள்ளவர்களுக்கு இது ஒரு புதிய நாதம் என்று புரிந்தது.

நட்சத்திர ஆதிக்கமும் வண்ண ஊர்வலங்களும் பிரபலங்களின் அணிவகுப்பும் கொண்ட படங்களுக்கு இடையே, கறுப்பு வெள்ளை அன்னக்கிளி ஜெயித்ததென்றால் வண்ணமும் வாசமும் கொண்ட அதன் இசையும் ஒரு காரணம் என்பது கண்கூடாகத் தெரிந்தது.

""இந்த ஆண்டு வெளிவந்த தமிழ்ப் படங்களிலேயே நூறு நாள் ஓடியதோடு வெள்ளி விழா கண்ட ஒரே படம் அன்னக்கிளி. எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்ற பிரபல நடிகர்களின் கலர் படங்களையே வென்ற பெருமை கறுப்பு வெள்ளை அன்னக்கிளியையே சாரும். இப்படத்தின் வெற்றிக்கு அதன் இசை அமைப்பாளர் இளையராஜாவும் ஒருவர்'' என்றது ஒரு வாசகர் கடிதம்.

மதுரையில் படத்தின் நூறாவது நாள் விழா நடந்தது. இளையராஜா குழுவினரும் மேடையில் இசை வழங்க இருந்தார்கள். மழை கொட்டித் தீர்த்தது. விழாவை நடத்தவிடாத பொழிவு. திரை உலகை ஆக்கிரமிக்கப் போகிற ஒரு வெள்ளத்திற்கு முகமன் கூறியது போலும்.

அன்னக்கிளியைத் தொடர்ந்து இளையராஜா இசை அமைத்த ஒரு சிலப் படங்கள் வெற்றி பெறவில்லை. "உறவாடும் நெஞ்சம்' என்றொரு படம் (1976). "அன்னக்கிளி' இயக்குநர்கள் தேவராஜ்-மோகன் தான் படைத்தார்கள். சிவகுமார், ஸ்ரீகாந்த், தேங்காய் சீனிவாசன், எஸ்வி. சுப்பையா என்று "அன்னக்கிளி' வரிசை இதிலும் இருந்தது.

("நேரத்தைப் போற்றும் தந்தை, அதைக் கடைப்பிடிக்காத மகன், இவர்களிடையே ஏற்படும் மோதலில் சிக்கிக் கொண்டு தவிக்கும் அவனது தம்பி, மனைவி, மக்கள்; ஆனால் நேரத்தைப் போற்றியவர் அதைக் கடைபிடிக்க முடியாமலும், நேரத்தைப் போற்றாத மகன் அதைக் கடைப்பிடித்தே ஆக வேண்டிய சூழ்நிலையும் வரும் போது, தந்தை, மகன், தம்பி, மனைவி, பிள்ளைகள் ஆகிய அனைவரின் மனமும் கடிகார பெண்டுலம் போல் ஊசலாடுகின்றன... இந்தப் புதுமையான கருத்தை

வைத்துக் கொண்டே பின்னப்பட்ட கதை'' என்றது விளம்பரம். ஆனால் புதுமை பலிக்கவில்லை).

உறவாடும் நெஞ்சத்தில், தேவார ஓதுவார் (காலஞ்சென்ற) லால்குடி ஸ்வாமிநாதனை (சுந்தரேச தீட்சிதர் என்பவரோடு இணைத்து) திருப்பாவை பாட வைத்திருந்தார் இளையராஜா. அது ஒரு புதுமை. பழைய நண்பர் எஸ்.பி. பாலசுப்ரமண்யம் ஜானகியுடன் பாடிய "ஒரு நாள் உன்னோடு ஒரு நாள்' வித்தியாசமான, கனிவான வார்ப்பு. "ஒரு நாள்' என்று தொடங்கி "திருநாள்' என்று முடியும் பல்லவியின் கழிப்பில் ஒரு சுகமான சங்கமத்தின் வளையம் நிறைவு பெறுகிறது...

ஆனால் படம் அம்பேலாகும் போது, பாடல் அம்பலத்தில் பரிமளிக்காமல் போகிறது. "பாலூட்டி வளர்த்த கிளி' என்று இன்னொரு படம். "நான் பேச வந்தேன்' என்ற இந்தப் படத்தில் ஒரு எஸ்.பி.பி. - ஜானகி டூயட். சிட்டுக் குருவி சிறகசைப்பது போலவும் சலங்கைகள் சிலம்புவது போலவும் மென்மையாக நடந்தது செல்லும் அருமையான பாடல். குரல்களின் இதமான போக்கிற்கு மெதுவாக சாமரம் வீசுவது போல் இணைப்பு இசையில் ஒரு புதுமையான அடக்கிவாசிக்கப்பட்ட மென்மை இழையோடுகிறது.

எழுபதுகளின் இரண்டாம் பாதியில், நாவல்களைப் படமாக்கும் ஒரு வலுப்பெற்ற போக்கின் இன்னொரு எடுத்துக்காட்டாக, எழுத்தாளர் மகரிஷியின் சிறு நாவலான "பத்ரகாளி' (1976) திரைக்கு வந்தது. "அன்னக்கிளி'யைப் போல் நல்ல பாடல்களும் வெற்றியும் ஒருங்கே பெற்ற படமாக "பத்ரகாளி' அமைந்தது. ஒரு விதத்தில் பார்த்தால் "அன்னக்கிளி'யைப் போல் "பத்ரகாளி'யும் ஒரு முக்கோண காதல் கதைதான். இரண்டிலும், இரண்டு பெண்கள் ஒரு ஆண்.

இரண்டிலும் மூன்றாவது கோணத்தில் நிற்கும் பெண் உச்சக்கட்ட காட்சியில் தனது செயலால் படத்தின் பிரச்னைக்குத் தீர்வை நல்குகிறாள். ஆனால் அன்னக்கிளியின் கிராமீய அன்னத்திற்கும் பத்ரகாளியில் மனநிலை சரியில்லாத பிராம்மணப் பெண் காயத்ரிக்கும் (நாவலில் அவள் பெயர் ருக்மிணி) பாத்திரப் படைப்பில் உள்ள வேற்றுமையைப் போல், இளையராஜா "பத்ரகாளி'க்கு அமைத்த இசையும் வேறுபட்டது. முதல் படம் கிராமீய வண்ணம் என்றால் இது மெல்லிசைக் கோலம்.

மோகனத்தில் அமைந்த மெல்லிய வண்ணமாக வந்த "கண்ணன் ஒரு கைக்குழந்தை', அந்தக்காலத்தில் ஒரு மந்திர வட்டத்தை அல்லவா சிருஷ்டித்தது! சுசீலா, ஏசுதாஸ் ஆகியோரின் வெல்வெட் குரல்கள், ஒரு நல்ல வர்ணமெட்டின் வாயிலாக தாம்பத்தியத்தின் இணக்கத்தை ஒரு தாலாட்டின் முத்தாய்ப்போடுகூட வெளியிடும்போது (வாலிக்கும் ஒரு பிரத்யேக வெற்றிதான்), "ஏழ் பிறப்பும் இணைந்திருக்கும் சொந்தம் உன்றன் சொந்தம் அம்மா வாழ்விருக்கும் நாள் வரைக்கும் தஞ்சன் உன்றன் நெஞ்சம் அம்மா' என்று பாட்டு சுகத்தில் கலந்துவிடத் தோன்றுகிறது.

மடிசார் கட்டுடன் மாமிகளை ஆட விடுவது தமிழ் சினிமாவின் ஒரு மசாலா சேர்க்கை. "வாங்கோன்னா, வாங்கோன்ன' என்று மடிசாரை மசாலாவாக்கிய பாடலும்கூட, மெட்டு என்ற அளவிலே ஒரு வீச்சோடுவந்த காலம் அது. உச்சக்கட்ட காட்சியுடன் பிணைந்து வரும் ஒரு கதாகாலட்சேபப் பாடலில் எம்.ஆர். விஜயா தானே தோன்றி பாடியிருந்தார்.

நாவலில் இல்லாத இதுபோன்ற காட்சிகளை திரைக்கதைக்குத் தோதாக தயாரிப்பாளர் - இயக்குநர் திருலோகசந்தர் சேர்த்திருந்ததும் (நாவலில், வில்லனை நாயகி தீவட்டியால் அடித்தும் குரல்வளையைக் கடித்தும் கொல்கிறாள்; படத்தில் சூரசம்ஹாரம் திருசூலத்தால் நடக்கிறது), சிவகுமார், ராணிசந்திரா, மேஜர் சுந்தரராஜன் போன்றோரின் நல்ல நடிப்பு இளையராஜாவின் நல்ல பாடல்களுடன் சேர்ந்ததும் "பத்ரகாளி' ஜெயிக்கும் படமாகிவிட்டது. இல்லை என்றால் "ஆபரேஷன் சக்ஸஸ், பேஷன்ட் டெட்' என்கிற வகையிலே பாடல்கள் "டல்' ஆகியிருக்கலாம்!

அன்னக்கிளியும் பத்ரகாளியும் தமிழ் சினிமாவின் சதா அடைந்திருக்கும் நெடுங்கதவுகளை இளையராஜாவிற்காகத் திறக்கத் தொடங்கிவிட்டன.

சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு ஊதாப்பு கண் சிமிட்டுகிறது, பத்ரகாளி என்று 1976ல் நாவலிலிருந்து வெற்றிகரமாகத் திரை வந்த பட வரிசை, 1977ல் தொடர்ந்தது. வெறும் மசாலாத்தனங்களுக்குப் பழக்கப்பட்ட தமிழ் சினிமாவில் சில குணச்சித்திரங்களும் கதைப் பின்னலும் கொண்ட நாவலைத் தழுவிக்கொள்வது கூடுதல் பாதுகாப்புதான்... உருப்படியான திரைக்கதையைக் கையாண்டால்.

"தினமணிக் கதிரி'ல் சுஜாதா எழுதிய பரபரப்பான கதை "காயத்ரி'. புதிதாக மணமானவள், தன்னைச் சுழந்துள்ள மாப்பிள்ளை, நாத்தனார், கூர்க்கா என்ற (ப்ளூ ஃபிலிம்) கும்பலின் நடவடிக்கைகளால் திகிலுறுவதும், அதிலிருந்து மீள்வதும் கதை.

ஸ்ரீதேவி நாயகியாக நடித்த படத்தில், வில்லன் ரஜினிகாந்த், நாயகன் ஜெய்சங்கர். (ஒரு மூன்றே ஆண்டுகளில் இது தலைகீழாக மாறும்... ஜெய் வில்லன் ஆவார், ரஜினிகாந்த் முரட்டுக் காளை ஆவார்... இதே இளையராஜா இசையில்!).

"காயத்ரி' பட நாயகியின் திகில், சோகம், அச்சம் ஆகியவற்றைப் பிரதிபலிக்க, "வாழ்வே மாயமா' பாடல் பயன்பட்டது. வார்த்தைகளை வெட்டி வெட்டிப் பாடும் பாணியும், திகிலைப் புலப்படுத்தும் தாளக்கட்டும், "திரைப்போட்டு நீ மறைத்தால் என்ன, போகுமா' என்று குரல் மேல் ஸ்தாயியில் அலறும்போது வேகமாகச் செல்லும் காரின் திடீர் பிரேக்கால் டயர் கீறிச்சிடுவது போன்ற அபாய உணர்வும், இதற்கெல்லாம் பக்கத்துணையாக சசிரேகாவின் குரல் வெளிப்படுத்தும் ஒரு அதைரியமும் அறைகூவலும்... திரையின் கறுப்பு நிகழ்வுகளுக்குப் பொருத்தமான திகில் உணர்வுகளை பாடலின் மூலம் உசுப்பிவிடுகின்றன.

இதற்கு நேர் மாறாக, "காலைப் பனியில்' என்ற பாடலில் பாடகி சுஜாதாவின் குரலில் ஒரு குளிர்ச்சியும் இயற்கையோடு ஒட்டிய ஒரு மென்மையும் இழையோடின. மாறுபட்ட திரைச் சூழல்களை மெட்டுக்களாலும் இணைப்பு இசையாலும் வெளிப்படுத்துகிற இளையராஜாவின் ஆற்றல் புலப்படுகிறது.

இதற்கிடையில் இளையராஜாவின் முதல் பிரவேசத்தை சாத்தியமாக்க அவருக்குக் கிடைத்த பஞ்சு அருணாசலம்போல், அவரது

நண்பர் பாரதிராஜாவிற்கு எஸ்.ஏ. ராஜ்கண்ணு கிடைத்துவிட்டார்.. 16 வயதினிலே உருவாகிக் கொண்டிருந்தது.. சப்பாணியும் மயிலும் ஆத்தாளும் தங்களது கிராம பரிவாரங்களுடன் பாரதிராஜா வைத்த கோணங்களில் வலம் வரத்தொடங்கினார்கள்..

""இப்போ தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம்னு பல படங்களுக்கு இசை அமைக்கிற.. இந்தப் படங்கள்ள உனக்கு ஆத்ம திருப்தி தரக்கூடியதா ஒரு நல்ல படத்துக்கு இசை அமைச்சிருக்கோம்னு நீ நினெச்சப் படம் எது?' "

"அந்த நிறைவை எனக்குத் தந்த படம் 16 வயதினிலேதான்.'' பாரதிராஜா கேட்ட கேள்விக்கு இளையராஜா அப்படிப் பதில் கொடுக்கும் அளவிற்குப் படமும் அதற்கான பாடல்களும் அமைந்திருந்தன. பாரதிராஜாவின் மயில் "செந்தூரப்பூவே' என்று பாடியபோது, குளிர்ச்சியான சிலிர்ப்புகளின் மூர்ச்சனையாக அது காற்றில் மிதந்தது. "இந்த ஆண்டில் எனக்குப் பிடித்த பாடல் இது' என்று சிவாஜி கணேசன் அறிவித்தார்.

"திரும்பிப் பார்' என்று அவருக்கு இசை அமைத்த விஸ்வநாதன் நினைத்திருக்கக் கூடும். திரை உலகத்தினருக்குத் தான் அந்தப் பழக்கமே கிடையாதே.

சிவாஜியை வைத்துத் தொடர்ந்து படங்கள் தயாரித்துக் கொண்டிருந்த கே. பாலாஜியின் சுஜாதா சினி ஆர்ட்ஸ், சிவாஜி படத்திற்கு இளையராஜாவை ஒப்பந்தம் செய்தது. பழைய இசை அமைப்பாளர் சம்பள உயர்வு கேட்டதன் விளைவு என்றும் கூறலாம்.

புதிய இசை அமைப்பாளரின் பலம் அதிகரிக்க ஆரம்பித்ததன் அறிகுறி என்றும் கொள்ளலாம். புதிய தொடுவானங்கள் இளையராஜாவின் கைகளுக்கு அகப்பட ஆரம்பித்திருந்த காலகட்டத்தில், பழைய சாம்ராஜ்யங்கள் அவருக்கு அடிபணிய தொடங்கியிருந்தன.

**ரஜினியும் 'இசை'ராஜாவும்..**

My Dear Rascal, What a consummate artistry you have shown. There is only one word - BEAUTIFUL... Keep it up...' என்று கே. பாலச்சந்தரை கமலஹாசனுக்கு கடிதம் எழுத வைத்திருந்தது "16 வயதினிலே'.

பாரதிராஜாவின் கலை நோக்கு அப்படி ஒரு மாஜிக்கை நிகழ்த்தி விட்டது. அந்தக் கண்கட்டு வித்தையை சாத்தியப்படுத்தியதில் இளையராஜாவிற்கும் பங்கு உண்டு.

படத்திற்குப் பாட்டு எழுதியவர்களில் கண்ணதாசன் முக்கியமானவர். இளையராஜாவும் பாரதிராஜாவும் மெட்டை நிர்ணயித்துக் கொண்டு கண்ணதாசனின் கவிதா ஓட்டலுக்குச் சென்றிருந்தனர்.

தென்னை மரங்களுக்கும் அடர்ந்த நிழல்களுக்கும் இடையே கவிஞர், நெடிய உருவம், தும்பைப்பூ வேட்டி, பட்டுச் சட்டை, கதையின் நாயகன் சப்பாணி பாடுகிற வேடிக்கைப் பாடல் என்று கட்டத்தை பாரதிராஜா விளக்க, ஆர்மோனியத்தில் வாசித்துக் காட்டினார் இளையராஜா. "ஆட்டுக் குட்டி முட்டையிட்டு' என்ற வரிகள் ஓடி வந்தன.

தத்தகாரத்தை ஒரு முறை கேட்டுவிட்டால், சிந்திக்கும் நொடி நமக்குத் தெரியாமல் பாடல் வரிகளைக் கொட்டக் கூடியவர் என்று பின்னாளில் பாரதிராஜா வியந்தார். (இதைக் கவிஞரின் பிறந்த ஊரான சிறுகூடல்பட்டியிலேயே பின்னாளில் வெளியிட்டார்). இன்னொரு ஆச்சரியமும் அவர்களுக்குக் காத்திருந்தது. "பழைய நினைப்புடா பேராண்டி பழைய நினைப்புடா' என்று இவர்கள் பிறகு பாட்டில் இணைக்க நினைத்ததை கவிஞரும் அப்புறம் எழுதியிருந்தார்!

எப்படியோ, மலேசியா வாசுதேவனும் ஜானகியும் அனுபவித்துப் பாடிய பாடலில், கவிஞரின் அற்புதமான வரிகளுக்கு இளையராஜாவின் மெட்டும் இசை அமைப்பும் சுவாரஸ்யத்தைக் கூட்டி விட்டன. கடைசியில் கழுதையின் கனைப்போடும் எள்ளல் சிரிப்போடும் முடிவது கதைக்கு மட்டும்தான். பாடல், "கூத்து மேடை ராசா'வின் நாதமாகத்தான் ஒலிக்கிறது.

இன்னொரு பாடல். கிராமத்து குதூகலம். இளம் ஜோடியின் உற்சாக நடை. சொல்லாமல் சொல்லுகிற பாங்கு (என்னமோ என்னமோ ஹோய்). காட்சிகளை உலா விடும் போக்கு ("கோயில் அம்மனுக்கு சூடம் காட்டு', "ஆத்துல காத்தடிச்சு அலைமோதும்'). "செவ்வந்தி பூ முடிச்ச சின்னாக்கா'வும் நாட்டியத் துள்ளலோடு காற்றில் புரள விடுகிற வண்ணப் பொடிகளைப் போல், விழிகளுக்கு முன் விளையாடுகிறது.

"சோளம் விதைக்கையிலே' என்று நாட்டுப்புறப் பல்லவியைத் தழுவி எழுதச் செய்து, "பதினைந்து நிமிடத்தில்' மெட்டமைத்து இளையராஜாவே பாடிய டைட்டில் பாடல், அந்நாளில் ஒரு சுற்று வந்தது. "பல நாள் கஷ்டப்பட்டு உருவாக்கும் பாடல்கள் சில சமயம் பலிப்பதில்லை. ஆனால் இதுபோன்ற மின்னல் பாடல்கள் வெற்றி பெற்று விடுவதுண்டு..' என்று சொல்லிக் கொண்டார் இளையராஜா.

புதிய நாதத்துடன் மட்டுமல்லாது, பாரதிராஜா போன்றவர்களின் புதிய திரைக் கோணங்களில் இளையராஜாவின் இசை ஒலித்துக் கொண்டிருந்தது. இப்படி இளையராஜா முன்னுக்கு வந்து கொண்டிருந்த போது தமிழ் சினிமாவின் சூழல் எப்படி இருந்தது?

எழுபத்தி எட்டில் ஒரு சினிமா இதழில், "தற்போதைய தமிழ் சினிமா உலகம் எப்படி இருக்கிறது' என்ற கேள்விக்கு, "இப்போது தமிழ்ப் பட உலகில் சுறுசுறுப்பு மிதமிஞ்சிக் காணப்படுகிறது. தென்னிந்திய சினிமா வர்த்தக சபையில் மாதா மாதம் சுமார் இருபத்தி ஐந்து புதுத் தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் அங்கத்தினர்களாக சேர்ந்து வருகின்றனர்.

இவ்வருட ஆரம்பத்திலிருந்து ஆறு மாதத்தில் 42 படங்கள் வெளி வந்திருக்கின்றன. சுமார் நூறு படங்களுக்குப் பூஜை



போட்டிருக்கிறார்கள்... பழம்பெரும் தயாரிப்பாளர்கள் பதுங்கிக் கிடக்கும்போது புதியவர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருவது விரும்பத்தக்கதுதான்...'' என்று பதில் அளிக்கப்பட்டிருந்தது.

ஒரு புதிய பாணியில் இளையராஜா ஆரோகணித்து வந்த சமயத்தில் இந்தப் போக்கு அவருக்கு கைகொடுத்தது. ஐம்பத்தி ஆறு (1972), 54 (1973), 62 (1974), 60 (1975) என்றிருந்த படங்களின் எண்ணிக்கை, எழுபதுகளின் கடைசி ஆண்டுகளில் உத்தரத்தை பிய்த்துக் கொண்டு கிளம்பியது. 1978ல் தயாரிப்பு 87ஐ எட்டியது. அடுத்த ஆண்டின் ஸ்கோர் 99! அதற்கடுத்த 1980ல் 107!!

ஆயிரம் பூக்கள் மலரட்டும் என்பது போல் தமிழ்ப் படவுலகில் இருந்த இந்த வளமையான போக்குத்தான் இளையராஜாவின் நாதம் ஒலிப்பதற்கு பல வாய்ப்புகள் அளித்து, அதன் வீச்சுகள் நிலைக்கும்படியான சூழ்நிலையை உருவாக்கியது.

இந்தக் காலகட்டத்தில் உச்ச நிலையில் இருந்த இசை அமைப்பாளரான எம்.எஸ். விஸ்வநாதனுக்கு ஆண்டுக்கு ஆண்டு இருபதுக்குக் குறையாமல் படங்கள் இருந்து வந்தன. இருபத்தி ஐந்து (1976), 20 (1977), 28 (1978), 23 (1979), 20 (1980) என்று அவர் இசை அமைத்து வந்த காலத்தில், அவர் சம்பளம் லட்சத்தைத் தொட்டுக் கொண்டிருந்தது.

புது அத்தியாயம் தொடங்கிக் கொண்டிருந்த இளையராஜா அதற்கு நாலில் ஒரு பங்கில் இருந்தார். பல தயாரிப்பாளர்கள் அவரிடம் செல்ல, அது ஒரு கூடுதல் ஈர்ப்பு...

இளையராஜாவின் திறமைக்கும் வெற்றிகளுக்கும் ஏற்ப நான்கு (1976), 13 (1977), 21 (1978) என்று அவரது பட மகசூலும் அதிகரித்தது. கூடுதல் வாய்ப்புகள் கிடைக்கும் போது சில படங்கள் வெற்றி அடையும் சந்தர்ப்பங்களும் அதிகரிக்கின்றன.

இளையராஜாவின் முதல் படத்தைத் தயாரித்த பஞ்சு அருணாசலமும் அதை இயக்கிய தேவராஜ் - மோகனும் இளையராஜாவின் முதல் சில ஆண்டுகளில் படத்திற்கு மேல் படம் எடுத்ததும் - சில பலிக்காமல் போனாலும் - இந்தப் போக்கிற்கு வலுவூட்டியது.

இந்நிலையில் தனக்குத் தோதான வாத்தியக் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார் இளையராஜா. ஜி.கே. வெங்கடேஷின் கோஷ்டியிலே ஒரு பையன் அழகாக கிதார் வாசித்துக் கொண்டிருந்தான். அந்த நாதம் இளையராஜாவிற்குப் பிடித்திருந்தது. "வாசிப்பது யார்' என்று கேட்டார். பெயர் கணேஷ்... இசை அமைப்பாளர் எம்.எம். முத்துவின் மகன் என்றார்கள். உடனே தனது குழுவிலே இணைத்துக் கொண்டார் இளையராஜா. அப்போது கணேஷுக்கு வயது 18.

ஜி.கே. வெங்கடேஷின் குழுவிலே இளையராஜா அறிந்த இன்னொரு வாத்தியக் கலைஞர் சுதாகர் கைபா. அவர் விலங்கியலில் முதுகலை பட்டம் பெற்றவர். யாரிடமும் சங்கீதம் கற்காமலேயே புல்லாங்குழலுக்கு வாக்கப்பட்டவர். மூங்கிலை எடுத்து அவர் ஊதும்போது ஒரு வசீகர நாதம் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அரசின் விலங்கியல் துறையில் வேலைப் பார்த்துக் கொண்டே, ஓய்வான நேரங்களில் வெங்கடேஷிடம் பகுதி நேர வாசிப்பாளராக இருந்தார். இப்படிப்பட்ட சுதாகரை இளையராஜா தனது கோஷ்டிக்குள் இழுத்தார்.

"எனக்கு நோட்ஸ் பார்த்து வாசிக்கத் தெரியாது. கேட்டு வாசிப்பவன் நான்' என்றார் சுதாகர். "எப்படி வாசிக்க வைப்பது என்று எனக்குத் தெரியும்' என்றார் இளையராஜா.

மேற்கூறிய வாத்தியக் கலைஞர்களைக் குறிப்பிட்டதன் காரணம்? ஒருவருடைய வாசிப்பு நன்றாக இருந்தால் அவரை தனது இசைத் தொகுப்பில் எப்படியும் அழகாகப் பயன்படுத்த முடியும் என்ற அசாத்திய தன்னம்பிக்கை இளையராஜாவிற்கு இருந்தது என்பதைக் காட்டத்தான்.

எப்படியும் தனது முதல் அத்தியாயத்தில் திரை உலகின் பழக்கப்பட்ட பிரபலங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருந்தார் இளையராஜா. புதிய உலகம் வசப்படுவதற்கு முன்பு, பழைய சிகரங்களை வென்றாக வேண்டுமே! அப்படித்தான் அவர் சிவாஜி, எம்ஜி.ஆரின் ஓங்கிய நாதமாக விளங்கிய சௌந்தரராஜனைப் பயன்படுத்தினார். ஜி.கே. வெங்கடஷின் உதவியாளராக இளையராஜா இருந்த போதே, தானே மெட்டமைத்து டி.எம்.எஸ்ஸைப் பாட வைத்திருந்தார்.

பிரசாத் புரொடக்ஷன்ஸ் என்ற நிறுவனத்தின் பெயரிடப்படாத படத்திற்கு ஆகஸ்டு 1974ல் "ஜிஞ்சரு ஜிஞ்சரு' என்று சௌந்தரராஜனை இளையராஜா (அப்போது ராஜா) பாட வைத்தார். அப்போதே சில அபிப்பிராய பேதங்கள் தலைதூக்கின. "அன்னக்கிளி உன்னைத் தேடுதே' என்று இளையராஜா பாடிக் காட்டியபோது, "இது பாமரமாக இருக்கிறது... நாகரிகப்படுத்திப் பாடுகிறேன்' என்றார் சௌந்தரராஜன்.

"இல்லை... கிராமத்துப் பாணியில் போட்டிருக்கிறேன்' என்று இளையராஜா கூறினாலும், டி.எம்.எஸ் பாடியது என்னமோ அவருடைய தலைமுறைக்குப் பரிச்சயமான ஸ்டைலில் தான். ஒரு புதிய அலையை உருவாக்க நினைப்பவரால் இதை எப்படி ஜீரணிக்க முடியும்?

ஆனால் சௌந்தரராஜன் படலம் தொடர்ந்தது. சிவாஜிக்கு இசை அமைக்கும் போது சௌந்தரராஜன் இல்லாமலா?

தீபம் (1977), தியாகம் (1978), நல்லதொரு குடும்பம் (1979), நான் வாழ வைப்பேன் (1979), ரிஷிமூலம் (1980) முதலிய படங்களில் சௌந்தரராஜனை வைத்து இளையராஜா கொடுத்த பாடல்கள், உயிரோட்டமான உணர்வுகளைத் தொட்டன.

புலமைப்பித்தன் / டிஎம்எஸ். / ஜானகி / சிவாஜி என்ற தொடர்ச்சியில் தீபத்தில் வார்க்கப்பட்ட "அந்தப்புரத்தில் ஒரு மகாராணி', சங்கமத்தின் சுகங்களை சரசசல்லாப சங்கீதமாக உயிர்ப்பித்தது. இளையராஜாவின் இசைத் தொகுப்பிற்கு இடம் கொடுத்து சௌந்தரராஜனும் அந்த உணர்வில் கலந்திருந்தார்.

சிவாஜி சித்தரிக்கும் பாத்திரங்களின் மனச்சாட்சி குமுறும்போது, காற்றில் இடி - மின்னல் - மழை கலந்திருக்கும். தியாகத்தில் "நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் ரெண்டு' என்று கண்ணதாசன் / சௌந்தரராஜன் / சிவாஜி ஆகியோர் இளையராஜாவின் இசையில் கலந்தபோது, காற்றில் மின்சாரம் பாய்ந்தது.

சௌந்தரராஜனின் கம்பீர நாதம், "நதி வெள்ளம் காய்ந்து விட்டால் நதி செய்த குற்றமில்லை, விதி செய்த குற்றம்' என்ற காவிய வரியையும் (கம்பன்), "தவறுக்கு துணிந்த மனிதன் அழுவதில்லையே / தவறியும் வானம் மண்ணில் விழுவதில்லையே' என்ற கண்ணதாசன் முத்திரையையும் ஏந்தியபோது, மீண்டும் சிவாஜியின் அரங்கத்தில் ஒரு குதூகலம்... ரிஷிமூலத்தில் "ஐம்பதிலும் ஆசை வரும்' (சில்மிஷமான சிருங்காரம்), "நேரமிது' (கம்பீரமான கனிவு) ஆகியவை, பாடல் மட்டத்திலாவது ஒரு கனிவான கூட்டு முயற்சியின் பலனாக ஒலிக்கின்றன.

ஆனால் இடையில், வெற்றிக்கு ஒருவனில், இளையராஜா - டிஎம்எஸ் கூட்டு சோபிக்கவில்லை. கவரிமானில், இளையராஜா இசையில் சிவாஜி கச்சேரி செய்தார்... ஏசுதாஸ் குரலில்!

இத்தகைய சூழ்நிலையில், தனது முதல் படலத்தில் மற்ற நாயகர்களுக்கும் சௌந்தரராஜனை இளையராஜா பயன்படுத்தியது ஒரு ஆச்சரியம்தான்.

கணக்குப் பார்த்து காதல் வந்தது (முத்துராமன் - "ஆளுக்கொரு ஆசை - 1977), குதிரையில் நான் அமர்ந்தேன் (ஜெய்சங்கர் - அவர் எனக்கே சொந்தம் - 1977), இயற்கை ரதங்களே (ஜெய்சங்கர் - வாழ நினைத்தால் வாழலாம் - 1978) என்று தனது எடுப்பில் சௌந்தரராஜனைத் தொடுத்தார் இளையராஜா.

இவற்றை எல்லாம் விட, தேங்காய் சீனிவாசனுக்கு மாரியம்மன் திருவிழாவில் "சிரித்தான் சிரித்தேன் அவள் ஒரு ராஜகுமாரி' (1978) என்று காபியில் சௌந்தரராஜனைப் பாட வைத்ததில் ஒரு மிடுக்கும் வீரியமும் சுடர்விட்டது.

ரஜினிகாந்த் போன்ற புதிய வரவுகளுக்கு சௌந்தரராஜனைப் பாட வைத்து இளையராஜா வெற்றிகள் கண்டார். முந்தைய பாணி அவருக்கு கைவராத ஒன்றல்ல என்று நிரூபித்தார் போலும்.

"பைரவி'யில் சோக-கோப நெருப்புகளால் வாட்டப்பட்ட நாயகனின் உள்ளக்குமுறல், "நண்டூருது நரி ஊருது' என்று அற்புதமாக வெளிப்பட்டது. "அம்மா நீ சுமந்த பிள்ளை' என்று தாய்ப்பாசத்தில் ரஜினிகாந்த் துள்ளியபோது (அன்னை ஓர் ஆலயம் - 1979), சௌந்தரராஜனைப் பாட வைத்த அந்நாள் சுப்பையா நாயுடு (பத்து மாதம் - அன்னையின் ஆணை - 1958), கேவி. மகாதேவன் (தாயின் மடியில் தலை வைத்திருந்தால் - தாலி பாக்கியம் - 1966; தாயில்லாமல் நானில்லை - அடிமைப் பெண் - 1969) ஆகியோருக்கு எந்த வகையிலும் குறைவில்லாமல் பயன்படுத்தினார் இளையராஜா.

ஆனால் சிவாஜி, எம்ஜிஆர். காலத்துத் தோரணையிலிருந்து மாறுபட்டு புதிய படங்கள் வரத் தொடங்கியபோது, புதிய நாயகர்களுக்கு வேறுபட்ட குரல்கள் தேவைப்பட்டன போலும்.

(முந்தின தலைமுறையின் முன்னணிக் குரலான சௌந்தரராஜனையும் இளையராஜாவையும் தொடர்புபடுத்தி எழுதியதில், இரண்டாமவரின் வளர்ச்சியின் ஒரு பகுதியைக் கண்டு கொள்வதே நோக்கம்... என்றோ முடிந்துக் கொண்ட சிண்டுகளை மீண்டும் முடிச்சுப் போட்டுப் பார்ப்பதல்ல!)

ஆனால் தமிழ் சினிமாவின் புதிய ஏற்பாட்டின் மணிக்கதவங்கள் வேகமாகத் திறந்து கொண்டிருந்தன. முன்னாள் பத்திரிகையாளர், கதை வசனகர்த்தாவான மகேந்திரன் என்ற அலெக்சாண்டர், தமிழ்ச் சினிமாவின் இடைஞ்சல்களில் புழுங்கிக் கொண்டிருந்தார்.

செயற்கை ஜோடனை, மிதமிஞ்சிய வசன - நாடகப் பாணிகள் ஆகியவற்றிலிருந்து மீண்டு, யதார்த்தமான போக்கிற்கும் சினிமாவின் விஷுவல் தன்மைகளுக்கும் தாவ வேண்டும் என்று எத்தெனித்தார். அவர் எடுத்த படம்,

எழுபதுகளின் பாசமலர், முள்ளும் மலரும் (1978), முந்திய மலரிலே, நடிப்புத் துறையிலும் இசை அமைப்பிலும் சில அபூர்வமான சுகந்தங்கள் காற்றில் கமழ்ந்து கதையின் செயற்கைத் தனங்களை மறக்கடித்தன. ஆனால் பிந்திய மலரில் அளவான நடிப்பும், நம்பகமான கதாபாத்திரங்களும், அழகான பாடல்களும், அருமையான காட்சி அமைப்புகளும், அவற்றுக்கு ஏற்ற பின்னணி இசையும் படத்தை கலாசிருஷ்டியின் உச்சத்தில் கொண்டு வைத்தன.

இன்று ரஜினிகாந்த் தேசிய நதிகளின் இணைப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார் என்றால், அன்று அந்தப் படம் அவரை சினிமா என்ற மீடியத்தில் உன்னதத்தில் இணைத்ததால்தான்.

அந்தப் படத்தைப் பற்றி ஒரு பொழுது மகேந்திரன் தந்த வாக்குமூலம் மிக முக்கியமானது.

பின்னணி இசைச் சேர்ப்புக்கு முன், தயாரிப்பாளர் வேணு செட்டியார், முள்ளும் மலரும் படத்தை பார்க்க நேர்ந்ததாம். கலை

*அது இது என்று பேசிக் கொண்டு இயக்குநர் படத்தை செல்லாக் காசாக்கி விட்டார் என்று பயந்திருக்கிறார் செட்டியார். பின்னணி இசை கொடுக்கப்பட்ட பின் தான் அவர் பயம் தீர்ந்ததாம்.*

*இப்படிக் காட்சிக்கும், அதை தூக்கி நிறுத்திய இசைக்கும் ஒரு தொடர்பு தமிழ்ச் சினிமாவில் அபூர்வமாக ஏற்பட்டபோது, அதில் இளையராஜா இடம் பெற்றிருக்கிறார். காட்சி, இசையின் மூலம் உயிர் பெற்றது என்பது அல்ல. அது இசையை எதிர்பார்த்து தன்னை கட்டுப்படுத்திக் கொண்டது.*

*திரையில் ஒளியும் ஒலியும் சிவ-சக்தி வடிவமாயின், அண்ணன் காளியிடம் திருமணமான தங்கை வள்ளி திரும்பும் காட்சியில் இந்த விந்தையைக் காணலாம்.*

*பாடல்களுக்கும் எந்தக் குறைவும் இல்லை. கண்ணதாசன் - இளையராஜா இணைவு மீண்டும் ஏற்பட்டது. நாயகன் (சரத்பாபு) இயற்கையின் வனப்பை வியந்து அனுபவிப்பதுதான் காட்சி. அப்படி ஒன்றும் அதில் புதுமை இல்லை! ஆனால் ''செந்தாழம் பூவில் வந்தாடும் தென்றலில்' ஆனந்தம் இருக்கத் தவறவில்லை.*

*இயற்கையை விட்டு செயற்கையின் எந்திர சுழலில் வாழும் (வாடும்) கோடிக்கணக்கான தமிழர்களுக்கு இதுபோன்ற பாடல்கள் தானே டானிக். அந்த சமுகப் பயன்பாட்டை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்? இதை ஏசுதாஸின் குரலில் அருமையாக நிறைவேற்றினார் இளையராஜா.*

*அடங்காப் பிடாரனான (!) காளி, ஒரு விபத்தில் கையை இழக்கப் போகிறான். அதற்கு முன் அவன் ''ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலை இல்லை' என்று கொக்கரித்துப் பாடுகிறான்.*


*பாடலில் என்ன அலட்சியம்! என்ன செருக்கு! சபாஷ் எஸ்.பி.பி. சபாஷ் கங்கை அமரன் என்று சொல்லத் தோன்றுகிற பாட்டு பின்னணியின் அண்ணனுக்கும் தான். பாடலைச் சரியான இடத்தில் கச்சிதமாகத் தொடுத்த மகேந்திரனைப் பற்றி சொல்லத் தேவையில்லை. நித்தம் நித்தம் நெல்லுச் சோறு என்று வாணி ஜெயராம் பாடியது மண் வாசத்துடன் (சோற்றில்) இருந்தது வாஸ்தவம்தான்.*

*ஆனால் மகேந்திரன் படைத்த சாப்பாட்டுராமி மங்கா என்ற ஃபடாஃபட்டிற்கு அது ஒலித்தபோது மறக்க முடியாத படிவம் ஆனது. இன்னொரு வித்தியாசமான குரல் படத்தில் ஒலித்தது... எம்.எஸ். ராஜேஸ்வரியின் பாப்பா குரலுக்கு தாவணி கட்டும் வயதில் ஜீன்ஸ் போட்டு விட்டதை போல் ஒரு குரல்.*

*''அடிப் பெண்ணே...' என்று ஜென்சி ஆண்டனியை சிறகடிக்க விட்டிருந்தார் இளையராஜா.*

*வித்தியாசங்களுக்கு புள்ளி போட ஆரம்பித்து விட்ட காலம் தொடங்கிவிட்டது.*

### ***ராஜா டிஎம்எஸ் பிரிவு***



*திரை உலகில் இசை அமைப்பாளராக இளையராஜா காலடி எடுத்து வைப்பதற்கு சில ஆண்டுகளுக்கு முன், அவர் சில இசை அமைப்பாளர்களுக்கு கிட்டார் வாசித்து வந்தார் அல்லவா? அப்படி வி. குமாரின் இசை அமைப்பில் ஒரு பாட்டுக்கு வாசித்துக் கொண்டிருந்தபோது, ஒரு நிகழ்ச்சி நடந்தது.*

*பி. சுசீலா பாடிக் கொண்டிருந்த பாட்டிற்கு இளையராஜா வாசித்தார். வாத்தியக்காரர் (இளைய)ராஜா தவறு செய்கிறார் என்றார் சுசீலா.*

*அவங்கதான் தப்பா பாடறாங்க, என்றார் (இளைய)ராஜா.*

*கண்ணீர் சிந்தும் அளவிற்கு சுசீலா பாதிக்கப்பட்டார்.*

*வாத்தியக்காரரை வெளியே அனுப்பிவைத்து விட்டு பாடல் பதிவைத் தொடர்ந்தார் குமார். ஆகட்டும், நான் இசை அமைப்பாளராகும் போது பார்த்துக் கொள்கிறேன், என்று வெளிக் கிளம்பியவர்தான். அப்படியும், தன் முதல் படமான அன்னக்கிளியிலேயே சுசீலாவை பாட வைத்தார்! ''சொந்தமில்லை பந்தமில்லை' என்று பாடகி பாடியது சுமார் ரகப் பாடல்தான் (குறிப்பாக ஜானகி பாடிய மற்றவற்றை ஒப்பிடும் போது). அது இசை அமைப்பாளரின் மனோநிலையையும் பிரதிபலித்திருக்கக் கூடும்!*

*ஆனால் எம்.எஸ். விஸ்வநாதனுடைய சங்கீத ராஜ்ஜியத்தின் அச்சாணிக் குரலாக விளங்கிய சுசீலாவைக் கொண்டு தன்னாலும் வசீகரமான வர்ணமெட்டுக்களைத் தீட்ட முடியும் என்று புதியவர் காட்டத் தவறவில்லை.*

*''அன்னக்கிளி' வந்த ஆண்டிலேயே வந்த ''பத்ரகாளி'யில் ''கண்ணன் ஒரு கைக்குழந்தை'யை நாம் ஏற்கனவே கவனித்திருக்கிறோம்.*

*காயத்ரி (1977), துர்கா தேவி (1977) போன்ற சில படங்களில் சுசீலா பாடியது வெற்றி பெறவில்லை. ''சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு' என்ற படத்தில் (பத்ரகாளி கதையின் ஆசிரியரான மகரிஷிதான் கதை; அன்னக்கிளி தேவராஜ்-மோகன் இயக்கம்), அனைத்துப் பாடல்களையும் சுசீலாவைப் பாட வைத்தார் இளையராஜா.*

*''உலகில் எனக்குத் தான் அதிக ரசிகர்கள்' என்று சுசீலா பாடினாலும், படத்தில் ஒன்றிரண்டு பாடல்கள்தான் (''ஒரு காதல் தேவதை', ''கண்ணன் என்ன சொன்னான் சிறுபிள்ளையே') கேட்கும்படியாக இருந்தன.*

ஏ.எம். ராஜா அறிமுகமான ஜெமினியின் சம்சாரம் படத்தின் கதையை அடிப்படையாகக் கொண்டு எழுத்தாளர் வலம்புரி சோமநாதன் திரைக்கதை எழுதி, துணையிருப்பாள் மீனாட்சி (1977) என்ற படத்தை இயக்கினார். இசை இளையராஜா. மெட்டினிமையிலும் குரலினிமையிலும் மனதைக் கவரும் பாடலாக அமைந்தது, "உறவோ ஆயிரம்' என்ற பாடல் உணர்ச்சிக்கு உரமூட்டக்கூடிய சுஜாதாவின் நடிப்பு வேறு. செவியிலும் விழிகளிலும் பாடல் நின்றது.

"செல்லப்பிள்ளை சரவணன்' (பெண் ஜென்மம் 1977), "மோக சங்கீதம்' (கண்ணன் ஒரு கைக்குழந்தை 1978), உன்னை நம்பி நெத்தியிலே (சிட்டுக்குருவி 1978), சிந்து நதிக் கரையோரம் (நல்லதோர் குடும்பம் 1979) ஆகியவற்றை சுசீலாவின் குரலில் இளையராஜா வார்த்த உயிரோட்டமான பாடல்களாக குறிக்கலாம்.

பாடகி-இசை அமைப்பாளர் உறவில் விதிவசமாக ஏற்பட்டிருந்த முதல் கட்ட இணைக்கமின்மையை, தனது சுமுகமான போக்கால் சுசீலாவும் ஓரளவிற்கு சரிகட்டியதால், இளையராஜா அவ்வப்போது அவரைப் பயன்படுத்தினார். ஏன், "லட்சுமி' என்ற படத்தில் "தென்னை மரத்திலே தென்றல் அடிக்குது நந்தவனக் குயிலே' என்று சுசீலாவைப் பார்த்து டூயட் கூடப் பாடினார்!

சிட்டுக்குருவியில் "என் கண்மணி உன் காதலி' என்ற பரிட்சார்த்தப் பாடலையும் எஸ்.பி.பி.யுடன் பாட வைத்தார்.

ஆனால் பல ஆண்டுகளாக ஓரத்தில் இருந்த ஜானகி, இளையராஜாவின் புதிய இசை மழையில் ஆயிரம் பாடல்களாக மலர்ந்தார். எஸ்.பி. சைலஜா, ஜென்சி, சசிரேகா என்று அவ்வப்போது வேறு பாடகிகளின் குரல் வண்ணங்களைத் தனது புதிய தூரிகையில் குழைத்துக் கொண்டு, புதிய திரை இசை வானவில்லாக மிளிர்ந்தார் இளையராஜா.

இதற்கிடையில், இளையராஜாவிடம் டி.எம். செளந்தரராஜனின் அத்தியாயம் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியால் முடிவுற்றது. இதை மறைமுகமாக விளைவித்தது, இளையராஜா இசை அமைத்த, "பொண்ணு ஊருக்குப் புதுசு' (1977) என்ற திரைப்படத்தின் பாடல் ஒன்று, கிராமத்து சப்பாணி போன்றவன் (நடிப்பு சுதாகர்), சைக்கிள் ஓட்ட கற்றுக்கொள்ளும் காட்சி. வாண்டுகள் புடைசூழ, "ஓரம் போ, ஓரம் போ' என்று அவன் வலம் வரும் கட்டம். "பண்ணைபுரம் சின்னதாயி பெத்த மகன்' என்று இசை அமைப்பாளர் (இளையராஜா) மற்றும் பாடலாசிரியரின் (கங்கை அமரன்) ஊரின் பெயரும் அன்னையின் பெயரும் பாடலில் பொறிக்கப்பட்டிருந்தன.

இளையராஜா இசை அமைத்துப் பாடிய இந்தப் பாடலை சென்னை வானொலி நிலையம் தடை செய்திருந்தது. (கங்கை அமரனுக்கு பாடல் எழுத முதல் அடி எடுத்துக் கொடுத்தவர் இளையராஜாதான்!)

இந்த நிலையில் செளந்தரராஜன் இலங்கைக்கு மெல்லிசை நிகழ்ச்சிகள் வழங்க சென்றிருந்தார். "பத்திரிகையில் போட அல்ல.. தனிப்பட்ட முறையிலே ஓரம் போ பாடலைக் குறித்து உங்க அபிப்பிராயம் என்ன"" என்று பொய் சொல்லி வலிந்து வாயைக் கிளறிய நிருபர், அடுத்த நாள் செளந்தரராஜனின் தனிப்பட்ட கருத்தை கொட்டை எழுத்துக்களில் பதிப்பித்தார்.

அதற்கு எதிராக, ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் செளந்தரராஜனை எதிர்த்து இளையராஜாவின் பதில் தொடர்ந்தது. மொத்த பயன் இதுதான். இனி இவர் இசையில் அவருக்குப் பாட வாய்ப்பு இல்லை என்பதுதான்.

எந்த இசை அமைப்பாளருக்கும் யாரை வேண்டுமானாலும் பாட வைக்கும் உரிமை உண்டு என்பதையும் யாரையும் பாட வைக்காமல் இருக்கும் உரிமையும் தொக்கி நிற்கிறது.

ஆனால் இளையராஜா இசை என்றால் சிவாஜிக்குக்கூட செளந்தரராஜனின் பின்னணிக் குரல் ஒலிக்காது என்ற நிலை இளையராஜாவிற்கு அந்த வகையில் வெற்றியைத் தரவில்லை, இயக்குநரின் மகோன்னத கற்பனைச் சக்தியில் பிழைத்துக் கொண்ட "முதல் மரியாதை' போன்ற ஓரிரு படங்களைத் தவிர. ஆனால் சிவாஜியே, குரலுக்கு ஏற்ப நான் வாயசைத்துவிட்டுப் போகிறேன் என்று சொன்ன பிறகு என்ன தடை? பாடும் குரலுக்கு ஏற்ப படம் முழுக்க வசனம் பேச முடியுமா என்பது வேறு விஷயம்.

தலைமுறை இடைவெளியோ, புதுமுறையின் இசை வெளியோ தெரியாது, கண்ணதாசனும் அதன் தாக்கத்தை உணர்ந்தார். புதிய இசை அமைப்பாளர்களின் இசையில் கனம் இருக்கிறதோ இல்லையோ, தலையில் கனத்திற்குக் குறைச்சலில்லை என்று ஒரு பத்திரிகையில் எழுதி வைத்தார்.

இதன் பிறகு இளையராஜா இசையில் அவர் பாடல் எழுதாமல் சில காலம் கழித்தது. ஏ.வி.எம். ராஜேஸ்வரியில் ஒரு திருமண விழாவில் முதல் வரிசையில் கண்ணதாசன். அவரைக் கடந்து செல்லும்போது, இளையராஜா நலம் விசாரித்திருக்கிறார்.

கவிஞர் சொன்னார்-- "ராஜாக்களின் கவனிப்பு இல்லாமல் கவிஞர்கள் எப்போது நலமாக இருந்திருக்கிறார்கள்!'

இதன் பிறகு, இளையராஜா தனது உதவியாளரிடம் சொன்னார்- "இந்த பாட்டை எழுத கவிஞரைக் கூப்பிடுங்க'.

"எந்த கவிஞரை' என்றார் உதவியாளர். "கவிஞர் என்றால் கண்ணதாசன்தான்' என்றார் இசையமைப்பாளர்!

(இந்த நிகழ்ச்சியைத் தெரிவித்தவர், தான் தயாரித்த வாழ நினைத்தால் வாழலாம் 1978 என்ற படத்தில் இளையராஜாவை இசை அமைக்கச் செய்த சுபா சுந்தரம்).

எப்படியோ எழுபதுகளின் இரண்டாம் பாதியில் திரை உலகிலிருந்து மெல்ல அந்நியப்பட்டுப் போய்க் கொண்டிருந்த கண்ணதாசனின் கடைசிப் பாடலுக்கு சுகமான இசைவார்ப்பு கொடுக்கும் சிறப்பு இளையராஜாவிற்கு அமைந்தது..

"கண்ணே கலைமானே' என்று வந்த பாடல், வரிகளின் நயத்தில் மட்டும் அல்ல.. அதை பூப்போல் தொடுத்த முறையிலும், குரல் தேர்விலும், பாடப்பட்ட மென்மையான பாங்கிலும் மிகச் சிறப்பாக அமைந்தது.. இயக்குநர் பாலு மகேந்திராவும் நடிகர் கமலஹாசனும் மூன்றாம் பிறையில (1982) உருவகப்படுத்திய தனிமை வாத்தியாரின் தாய்மைப் பரிவைப் பாடல் தாலாட்டிச் சென்றது.

படம் வருவதற்குள் கவிஞர் சிகாகோ வழியாக மறுகரைக்குப் போய்ச் சேர்ந்துவிட்டார். இங்கே பூவுலகில் நம் தமிழ்ச் சினிமா உலகத்திலே, அத்தியாய மாற்றங்கள் நடப்பதற்கு அறிகுறியாக.

முதல் படத்திற்கு இசை அமைத்த மூன்று நான்கு ஆண்டுகளில் நூறு படங்கள் முடிக்கும் நிலைக்குப் போய்க் கொண்டிருந்தார் இளையராஜா. கல்லூரி மாண்வர்கள் அவரைக் கட்டிப் பிடித்து "கைகளிலும் விரல்களிலும் கனனத்திலும்' (இவை இளையராஜாவின் வார்த்தைகள்) முத்தம் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

இது வெறும் இசை அல்ல. திரையில் வந்த புதிய உயிரோட்டங்களோடு கூடி நடைபோட்ட ஒரு அலை. அதனால்தான் அதன் வரவேற்பு எல்லை மீறியது.

எண்பதுகளின் பிற்பகுதியில் ஒருநாள், பாரதிராஜா அலுவலகத்தில் முதல் மாடியிலிருந்த அவரது அறையிலிருந்து அவருடன் கீழே இறங்கி வரும்போது, பரஸ்பர உரையாடலின்போது அவர் சொன்னார்-- "இளையராஜாவிடம் ("அவனிடம்' என்று குறிப்பிட்டதாகத்தான் நினைவு) எனக்குக் கிடைத்த இசை பலம் வேறெங்கும் கிடைக்கவில்லை. அது சில ஜோடிப் பொருத்தங்கள் அப்படி அமைந்துவிட்ட காலம்தான்.

16 வயதினிலேவிற்குப் பிறகு, ஒரு சாதாரண கிராமத்துக் கதையைச் சொன்னார் பாரதிராஜா. ஊரில் கவிதை எழுதித் திரியும் ஒரு உருப்படாத வாலிபனுக்கும் கபடமில்லாத பெண்ணுக்கும் காதல். பையன் நகரத்திற்குப் போய் பெரும் கவிஞன் ஆகத் திரும்புகிறான் என்பதான கதை என்னவோ சாதாரணம்தான். ஆனால் புதுமுகங்களும் (ராதிகா + சுதாகர்), இயக்கத்தின் நேர்த்தியும், இசையின் எழிலும் ஜீவனூட்டின.

கோயில் மணியோசையைக் காதல் சமிக்ஞை ஆக்கிய, "கோயில் மணி ஓசை' பாடலின் அழகான வர்ணமெட்டும் (இளையராஜாவிற்குப் பிடித்த சுத்த சாவேரியில்), அதை இசைத்த மலேசியா வாசு + ஜானகியின் குளிர்ச்சியான குரல்களும், அதை மனதில் நிறுத்தின.

ஒரு பெண்ணின் எதிர்பார்ப்பையும், உற்சாகத்தையும் என்னமாய்க் காட்டியது. "பூரவம்பூ பூத்தாச்சு..'! தமிழ்நாட்டு காவேரி வறண்டு கிடக்கும் இந்நாளில் "காவேரி போல பொங்குகிற மனசு.' என்பது அவ்வளவு சரியாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் ஒரு இதயத்தின் சிறகடிப்பு ஜானகியின் குரலில் பூரணமாக இருந்தது. அப்படித் தொடுத்திருந்தார் இளையராஜா.

ஒரு உணர்ச்சியை பாட்டில் படம் பிடித்து விடுவதைவிட ஒரு இசை அமைப்பாளருக்கு என்ன வெற்றி வேண்டும்.

(கி.போ. ரயிலுக்கு, வானம்பாடி கவிஞர் சிற்பி எழுதி, "மலர்களே நாதஸ்வரங்கள்' என்று ஹம்சத்வனி ராகத்தில் ஒரு அருமையான பாடலைப் பதிவு செய்தார் இளையராஜா. ஆனால் இசைத்தட்டில் வெற்றி பெற்ற அந்தப் பாடல் படத்தில் இல்லை.. படமாக்க செலவாகும் என்று விட்டுவிட்டதாகச் சொன்னார்கள்)

நாட்டுப்புறத்தானாக மட்டும் அல்ல, அதி நவீன நகர்ப்புறத்தானாகவும் தன்னால் திரை அவதாரம் எடுக்க முடியும் என்று நிரூபிக்க, "சிகப்பு ரோஜாக்கள்' எடுத்தார் பாரதிராஜா. படத் தொகுப்பும் குணச்சித்திரப் படைப்பும் அற்புதமாக இருந்தன.

பாலியல் முனைப்புக் காட்டும் வடிவுக்கரசி, பயமும் அடக்கமும் இழைந்தோடும் ஸ்ரீதேவி, ஒரு கொலைகார வேட்கையை குரூரமாக மறைத்து வாழும் கமல்.. என்று வலுவான பாத்திரப் படைப்புகளின் சுழற்சியில் படம் அழகாகச் சென்றது.

பங்களா மர்மங்களுக்கும் தோட்டத்தில் முளைத்தெழும் கன்னியரின் கரங்களுக்கும் இடையே, இன்ப நுகர்ச்சியில் கதகதப்பாக வளரும் கணங்களைக் குறிக்கிறது "நினைவோ ஒரு பறவை'. படத்தின் மர்மச் சூழல்களுக்கு குந்தகம் விளைவிக்காமல் காதல் சொல்ல வேண்டிய கட்டம். பாடல் வரிகளும் சரி சங்கீத வண்ணங்களும் சரி, அப்படித்தான் செல்கின்றன.

"இந்த மின்மினிக்குக் கண்ணில் ஒரு மின்னல் வந்தது'க்கும் இது பொருந்தும். ஜானகியுடன் இணைந்த கமலஹாசனும் மலேசியா வாசுவும் அழுத்திப் பாடாமல் நகர்ப்புற கீதத்திற்கு உயிரூட்டினார்கள்.

நல்ல இசைத் தொடுப்புகள், 25 வாரம் மலர்ந்திருந்தன ரோஜாக்கள். திகில் படத்திற்குப் பின்னணி இசை அமைப்பு மிகவும் முக்கியமானது. சிகப்பு ரோஜாக்களின் பின்னணி இசையை நான்கரை கால்ஷீட்டில் 12,500 ஆர்கெஸ்டிரா செலவில் செய்துமுடித்தார் இளையராஜா.

இயக்குநர் ஸ்ரீதர்- எம்.எஸ். விஸ்வநாதன் ஆகியோர் பல காலமாக ஒரு யூனிட்டாக செயல்பட்டவர்கள். ஆனால் இளையவர்களைக் கொண்டு ஒரு காதல் கதையைச் சொல்ல நினைத்தபோது, இளையராஜாவைத் தேர்ந்தெடுத்தார் ஸ்ரீதர்.

காதல் (ஒரே நாள்), இன்பச்சுவை பாடல் (கிண்ணத்தில் தேன் வடித்து), நாட்டுப்புற ராகம் (தண்ணி கருத்திருச்சு), பிரிவுச் சோகம் (வார்த்தை தவறிவிட்டாய்) என்று ஒவ்வொரு துறையிலும் வெற்றி கண்டன இளையராஜா இசை அமைத்தப் பாடல்கள் (எழுதியவர் வாலி). காதல் முக்கோணங்களைப் பழக்கப்பட்ட லாகவத்துடன் நகர்த்தத் தெரிந்த ஸ்ரீதர், நடிகர்களை சரியாக வேலை வாங்கியிருந்தார்.

அழகான முகவெட்டு உள்ளவருக்கு நல்லவராக நடிப்பது சுலபம். கமலஹாசன் அதைச் செய்தார். கடுமையான மனப்போக்கு உள்ள காதல் வில்லனாக வந்து, கடைசியில் காதலைத் தியாகம் செய்துவிட்டுப் போகும் தியாகியாக ஃபிரேமை விட்டு கம்பீரமாக அகன்றார் ரஜினிகாந்த்.



ஸ்ரீதரின் நிரந்தர முக்கோணத்தின் வெற்றிக் கோணம் எழுபதுகளின் கடைசியிலும், இசைச்சித்திரமாக அமைந்தது, தாங்க்ஸ் டு இளையராஜா.

கட்டி வைத்த தொப்பை, ஒட்ட வைத்த விக், அரிதாரத்தில் மறைக்கப்பட்ட சுருக்கங்கள், வரைந்து வைக்கப்பட்ட தட்டி என்று பழைய தலைமுறையின் ஊர்வலங்களுக்கு இடையே, இளம் யதார்த்த முகங்கள் பவனி வரத் தொடங்கியிருந்தன.

தனது உதவி இயக்குநராகவும் வசனகர்த்தாவாகவும் இருந்த பாக்கியராஜை, நாயகன் ஆக்கினார் பாரதிராஜா (புதிய வார்ப்புகள் 1979). எடுக்கப் போகிற படத்தின் உதவி காமிரா இயக்குநராக வந்திருந்த சுகாசினியை நாயகி ஆக்கினார் மகேந்திரன் (நெஞ்சத்தைக் கிள்ளாதே 1982).

ஆடிப் பாடி மரங்களைச் சுற்றி வரும் போக்குகளை நீக்கி, பாடல்களைப் பின்னணியில் ஒலிக்கச் செய்து நாயகன் - நாயகியை இயல்பான சூழல்களின் படம் பிடித்தார்.
பெண்ணீய கருத்துக்கள் முளைவிடும் காலகட்டத்தில், அதையே மையமாகி, யதார்த்தமாக எடுத்தார் திரைப்படக் கல்லூரியில் படித்த இயக்குநரான ருத்ரையா (அவள் அப்படித்தான் 1977).

இந்தப் புது முயற்சிகள் அனைத்திலும், இணைந்த இசை இளையராஜாவினுடையது. எப்படி அமைவு? தன்னிடம் பாட வருகிறவரிடம், "அப்படி என்னதான் செய்யறான்' என்று விஸ்வநாதன் வினவியதற்கு, ஒரே பதில்தான். சிறந்த இசை அமைப்பாளராக மட்டும் இல்லாமல், தமிழ்ச் சினிமாவின் அடுத்தத் திருப்பத்திற்கான இசை வார்ப்பாளராக மாறிவிட்டார் என்பது சரியான பதிலாக இருந்திருக்க முடியும்.

(இதே காலகட்டத்தில், சில நேரங்களில் சில மனிதர்கள் 1977 போன்ற யதார்த்தப் படங்கள் எடுத்தார் பீம்சிங். வெற்றிகரமாக இசை அமைத்திருந்தார் விஸ்வநாதன்).

ஆனால், மசாலா சாம்ராஜ்ஜியமான தமிழ்ச் சினிமாவில், கலைத் தரமுள்ள படங்களில் மட்டும் பணிசெய்து யாராவது ஜீவிக்க முடியுமா? அர்த்தமுள்ள வியாபாரத்தனம், அர்த்தமில்லாதது என்று சகலத்திலும் இளையராஜா கலந்திருந்தார். புதிய பறவையில் இரண்டாவது செற்காரை சந்தித்து சிவாஜி படும் அவதி போல், புதுமுகம் கவிதாவைப் பார்த்து முத்துராமன் திகைக்கிறார்.

பஞ்சு அருணாசலம் திரைக்கதை வசனம் பாடல்கள் எழுதிய "காற்றினிலே வரும் கீதம்' என்ற படத்தில். அவ்வப்போது சின்னத் திரையில் வரும் படம் காலப்போக்கில் தேய்ந்துபோகலாம். காற்றினிலே வரும் கீதம் என்று எம்.எஸ்ஸின் அமரப் பாடலைப் பெயராகக் கொண்ட படத்தின் பாடல்கள் புஸ்வாணமாகப் போகவில்லை. அதில் இளையராஜா வேய்ந்த சில நெய்தல் ராகங்கள் மனதின் ஒரு ஓரத்தில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்.

ஜெயசந்திரன், ஜானகி கூட்டில் ஒரு வானவில் போலே (டூயட்), சித்திரச் செவ்வானம் (சோலோ) முதலிய பாடல்களில் மெட்டின் நடையிலும் போக்கிலும் அப்படி ஒரு ஆற்றொழுக்கு.. மெட்டை முதலில் போட்டுவிட்டு எழுதச் செய்வதுதான் இளையராஜாவின் பாணியாக இருந்தாலும், வார்த்தைத் திணிப்பையும் மொழிச் சிதைவையும் ஏற்படுத்தாத வார்ப்புகள்.

**"பயணங்கள் முடிவதில்லை**



ஏகப்பட்ட படங்கள் தயாரிக்கப்பட்டு வந்த எண்பதுகளில், அரசியல்வாதியான கோவைத்தம்பி, கோவையைச் சேர்ந்த சினிமாக்காரரான ஆர். சுந்தரராஜனிடம் ஒரு கதை கேட்டார். அதை தனது முதல் படமாக எடுத்தார். அதுதான் "பயணங்கள் முடிவதில்லை' (1982).

இளையராஜா இசை அமைத்த இந்தப் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, அவரது இசையிலேயே இன்னும் ஐந்து படங்கள் வரிசையாகத் தொடர்ந்தன. முதல் படத்திலும் தொடர்ந்து மற்ற படங்களிலும் நடித்தவர் மோகன்.

"பல பல ஜன்மங்கள் நான் எடுப்பேன். பாடல்கள் கோடி நான் படிப்பேன்' (வைகறையில்..) என்று அவர் பாடியதாக அமைந்தது ஓரளவு சத்தியமாகிப் போய், ஏறக்குறைய அனைத்துப் படங்களிலும் மைக்கும் கையுமாக மேடையில் மெல்லிசைப் பாடல்கள் பாடிக் கொண்டிருந்தார்! இளையராஜா அமைத்துக் கொடுத்தப் பாடல்கள் அப்படி உதவின..

''பயணங்கள் முடிவதில்லை'யில் ஏழு பாடல்கள். ஒன்றுகூட சோடை போகவில்லை. மெல்லிசை மோஸ்தரில் சொல்லி வைத்து வெற்றிப் பாடல்களை அமைக்கும் வல்லமை இளையராஜாவிற்கு இருந்தது இந்தப் பாடல்களிலும் புலப்பட்டது..

இளையநிலா பொழிகிறதே (சலவை நிலா' என்று வைரமுத்து எழுதியதன் சலவை செய்யப்பட்ட பிரதி இது), தோகை இள மயில் ஆடி வருகுது, சாலையோரம் சோலை ஒன்று ஆடும் ஆகிய பாடல்களின் ராகம் பஹாடி, ஹம்சத்வனி என்று எதுவாக இருந்தாலும், ஒரு மெல்லிசை வீச்சுடனும் நடையின் துள்ளலுடனும் அவை ஒலித்தன.. சங்கீதமே அறியாதவனும் நேரடியாகச் சுவைத்து மகிழக்கூடிய வார்ப்புகளாக அவை இருந்தன...
காட்சிகளின் தேவைக்கு ஏற்ப, இன்னும் கொஞ்சம் கனமான, கனிவான மெட்டுக்கள் தேவைப்பட்டபோது, சுபபந்துவராளி (வைகறையில் வைகை கரையில், ஹம்சானந்தி (ராகதீபம் ஏற்றும் நேரம்), சிந்துபைரவி (மணியோசை கேட்டு எழுந்து) போன்ற ஜனரஞ்சகமான ராகங்கள் கொஞ்சம் அள்ளித் தெளித்து, சங்கீதக் கலர் கொடுத்தார் இளையராஜா.

ஆனால், ''ஏய்.. ஆத்தா.. ஆத்தோரமா வாரீயா' என்ற சொல்லுக்கு அது கொடுத்த விபரீதமான பொருள் ஜீரணிக்கும்படி இல்லை. ''என்னைப் பெத்த ஆத்தா' என்று (பின்னாளில்) உருகிய இளையராஜாவால் எப்படி இந்தப் பல்லவியை ஏற்றுக் கொள்ள முடிந்ததோ..

அடுத்து வந்த ''இளமைக்காலங்கள்' (1983) கோவைத்தம்பியின் கையைக் கடித்ததாம். பாடல்கள் காதைக் கடிக்கவில்லை.. அதாவது செவிக்கு இனிமையாக இருந்தன.. ''ஈரமான ரோஜாவே' என்று ஏசுதாஸ் ஈரமாகப் பாட வைத்தது சாரமாக இருந்தது.. இனிமையும் ''மூட்' உம் உள்ள ஒரு குரலை உணர்வுகளைப் பிரதிபலிக்கும் மெட்டில் ஏற்றினால் வேறு எப்படி இருக்கும்!

''இசை மேடையில் இந்த வேளையில்' என்ற டூயட்டில் ஜானகி- பாலு இணையின் இசைப்பில் தர்பாரி கானடாவின் மூர்ச்சனைகளை (உயிரோட்டங்களை) புரளவிட்டு வெற்றி கண்டார் இளையராஜா.

கோவைத் தம்பியின் மூன்றாவது படமான ''நான்பாடும் பாடல்'இல் இசைக்குக் கிடைத்த முக்கியத்துவத்திற்கு நேரடி சாட்சி.. படத்தில் ஹீரோயின் ஒரு திரைப்படப் பின்னணிப் பாடகி!.

இளையராஜாவின் சில ரொமான்டிக் பாடல்களில் அவருக்கே உரிய அமைதியுடன் இழையோடும் ஒரு மெல்லிய சோகம் மென்பாங்கில் மெல்ல நடந்துவரும்.. அத்தகைய ஒரு பாடல், ''தேவன் கோயில் தீபம் ஒன்று' (பாடல் வைரமுத்து). சரணங்களின் முதல் நான்கு வரிகளில் வெட்டி வெட்டிப் பாடும் ஒரு பாணி.. அதைத் தொடர்ந்து நேர்மாறாக ''காதல் தேவனே' என்று கடைசியில் ஒரு கார்வை.. அழகு, சுகம்!

ஒரு சில படங்களில் வழுக்கி விழுந்த பின், இயக்குநர் சுந்தரராஜன் காதல் கணவனை இழந்த பின் ஒரு பிரபல எழுத்தாளரின் அன்புக்குப் பாத்திரமாகும் நாயகியின் கதையை பண்பாடோடு கூறியிருந்தார்.. பாட்டெனும் தோளில் ஏறி, கதைப் புறாக்கள் சிறகடிக்கும்படி இருந்தன பாடல்கள்.. பயணங்கள் முடிவதில்லையில் அமைந்ததைப் போல, இந்தப் படத்திலும் அழகிய மெல்லிசைக் கோலங்களாகப் பாடல்கள் அமைந்தன..

''பாடவா உன் பாடலை' என்ற பாடல், நாயகியின் வாழ்வின் (விபரீத) திருப்புமுனையாகவும் அவளது தனிமைச் சோகமாகவும் இருமுறை ஒலிக்கும்.

இருமுறையும் அவளது நிலையை வெற்றிகரமான இசைச் சூழலில் வெளிப்படுத்தும்.. ''பாடும் வானம்பாடி' (காமராசன்), ''சீர் கொண்டு வா' (கங்கை அமரன்) முதலிய மெட்டுக்கள் அந்நாளின் காற்றலைகளில் லாவகமாக வலம் வந்தன.
தயாரிப்பாளருக்குக் காசு தேடிக் கொடுத்ததுடன், இயக்குநருக்கும் இந்த இசைச் சித்திரம் திருப்புமுனையாக அமைந்தது.

(விநியோகஸ்தர்கள் மூன்று ஏரியாக்களில் படத்தை வாங்காததால், தானே வெளியிட்டிருந்த தயாரிப்பாளருக்கு, வெற்றியின் கனியை நேரடியாக அனுபவிக்க முடிந்தது..).

''தேவன் தந்த வீணை' என்ற பாடலில் ''தேடும் நெஞ்சம் தேடினால்' என்ற பல்லவியிலும், ''மோகமோ சோகமோ..' என்ற சரணத்திலும் வரும்போது, ஏற்கனவே அழகாக இருந்த மெட்டு, கூடுதல் ஒளிபெறும். வீணை, கானம், என்று சங்கீத பாட்டையிலே வந்த இந்தப் பாடல் இடம் பெற்ற படம் ''உன்னை நான் சந்தித்தேன்' (1984).

வெற்றி பெற்ற இந்த படத்தைத் தொடர்ந்து வந்த அடுத்த படம். ''உதயகீதம்' (1985). இதில் கதாநாயகன் ஒரு மேடைப் பாடகன். அது மட்டுமா? அவன் தூக்குத் தண்டனைக் கைதி! அது மட்டுமா? அவனைத் திருமணம் செய்து கொள்ளும் நாயகி, முதல் இரவில் அவன் கதையை முடிக்கப் பார்க்கிறாள் (கதை- ஆர். செல்வராஜ்!).

முதலிரண்டு சொற்களிலேயே மெட்டுக்குத் தனித்துவம் கொடுத்துவிடுகிற தன்மையை ''பாடு நிலவே.. தேன் கவிதை பூ மலர' என்ற பாடலில் பார்க்கிறோம்..

தவழ்ந்துவரும் தென்றலுக்குக் காலப்பிரமாணம் அமைந்ததைப் போல், எஸ்.பி.பி. குரலில் ''தேனே தென்பாண்டி மீனே' என்று ஒரு தாலாட்டை வார்த்தார் இளையராஜா.. உணர்ச்சியில் இம்மியும் குறையாத ஜானகியின் குரலிலும் (மாறுபட்ட சரணத்துடன்) இன்னொரு பிரதி சமைத்தார்.. இரண்டும் காதல் / சோகம் / இனிமை / அமைதி ஆகிய லட்சணங்கள் பொருந்திய அசல் இளையராஜா முத்திரையுடன் கூடிய பாடல்கள்.

தூக்கு மேடை பின்னணி உள்ள மேடைப் பாடகனை முந்திய படத்தில் கண்ட நாம், அதே செல்வராஜின் கதையமைப்பில், தேவதாஸின் சாயல் கொண்ட கல்லூரி மாணவனை ''இதயக்கோவில்' (1985) என்ற படத்தில் பார்க்கிறோம்.

(உ.நா. சந்தித்தேனையும், உதயகீதத்தையும் கே. ரங்கராஜ் இயக்கியிருக்க, இதயக் கோவிலை மணிரத்னம் இயக்கினார்..).

இதயக்கோவிலில், கல்லூரிப் பேரவை தேர்தலில் வெற்றி பெற்ற மாணவி சூர்யா, சகமாணவன் ஹெரிசங்கரைக் கல்லூரி விழாவில் பாட வைக்கிறாள்.. ஆனால் அவன் எந்த நிலையில் இருக்கிறான்.. "நான் பாடும் மௌன ராகம் கேட்கவில்லையா.. என் காதல் ராணி இன்னும் தூங்கவில்லையா' என்று ஏதோ ஆவியுலக மோகினியை நோக்கிப் பிரமித்துப் போய் பாடுபவனாக இருக்கிறான்..

"கண்ணீரில் உன்னைத் தேடுகின்றேன், என்னோடு நானே பாடுகிறேன்' என்று அவன் பாடுவதில் (வரிகள் வைரமுத்து) அவனது அந்தரங்க தேடல் அழகாக வெளிப்படுகிறது.

படத்தில் இன்னொரு விசேஷம். வாலி (ஊரோரமா), முத்துலிங்கம் (திஸ்ரத்தில் சதிராடும் "கூட்டத்திலே கோவில் புறா'), மேத்தா (பாலு தூள் பரத்தும் யார் வீட்டு ரோஜாப்பூ..), நா. காமராசன் (பாட்டுத் தலைவன்..), வைரமுத்து என்ற கவிஞர்களின் வரிசையில், இளையராஜாவின் அண்ணன் பாவலர் வரதராஜனும் இருந்தார் (வாழ்க அந்தத் தியாகியின் நாமம்), இளையராஜாவும் இருந்தார்..

ஆன்மா, தெய்வம் என்பதெல்லாம் காதலுக்கு முற்றிலும் புறம்பானவை என்று ஒரு பரவலான (பாமரத்தனமான) அபிப்ராயம் நம்மிடையே நிலவுகிறது.. ஆனால் மொட்டை போட்டு, ஏகாந்தம் தேடிய இளையராஜாவிடமிருந்து எத்தனை காதல் பாடல் வந்தன! ஏனென்றால் நிஜமான, ஆழமான காதல் என்பதும் ஒரு ஆன்மீகம், தெய்வீகம்.

உண்மையான ஆன்மீகமும் ஒரு உன்னதமான காதல்.. "ஆத்மராகம் ஒன்றில்தான் ஆடும் உயிர்கள் என்றுமே, உயிரின் ஜீவநாதமே நாதம் ஆகுமே.. உயிரில் கலந்து பாடும்போது எதுவுமே பாடலே, பாடல்கள் ஒரு கோடி, எதுவும் புதிதில்லை, ராகங்கள் கோடி கோடி எதுவும் புதிதில்லை, எனது ஜீவன் நீதானே என்றும் புதிது..' என்று பாடல் எழுதி, இசை அமைத்துப் பாடியும் எஸ்.பி.பி.யைப் பாட வைத்தும், காதலின், பாடலின், ஆன்ம தேடலின் பரிணாமங்களைச் சுட்டியிருக்கிறார் இளையராஜா.

இதற்கு விளக்கமாக ஒரு புத்தகமே எழுதலாம்.. அந்த வரிகள் ஆழமான இந்திய ஆன்மீக மரபில் தோய்ந்திருப்பதால், நவம் நவமாகப் பரிணமிக்கும் உயிரின் வண்ணங்களைத் தவிர இந்த உலகத்தில் எதுவும் புதிதல்ல என்ற உண்மை, "மோகன'மான மெட்டில் ஒரு சாதவீக (நன்கூடிப்ண்ம்ங்) வார்ப்பாக வடிவெடுத்திருக்கிறது..

பாவலரின் "வானுயர்ந்த சோலையிலே'வைப் பொறுத்தவரை, ஒரு லட்சிய இதயத்தின் காதல் ஏக்கப் பிரதிபலிப்பை அகண்ட வெளிகளில் செவிமடுக்கிற உணர்வு கிடைக்கிறது.. அப்படியும் படம் எதிர்பார்த்த வெற்றி பெறவில்லை.

இளையராஜா என்ற ஒரே இசை அமைப்பாளரின் செல்வாக்கு தமிழ்ச்சினிமாவில் ஓங்கியிருந்த எண்பதுகள் அல்லவா அது.. ஒரு ஆண்டுக்கு வெளிவரக்கூடிய தமிழ்ப் படங்களின் எண்ணிக்கை நூறாகவோ அதைவிட அதிகமாகவோ இருந்த காலகட்டத்தில், இளையராஜா மட்டுமே நாற்பது படங்களுக்கு இசை அமைத்துக் கொண்டிருந்தார் (தெலுங்கு இத்யாதிகளில் ஒரு இருபது படங்கள் நீங்கலாக).

இந்த நிலையில் சில தயாரிப்பாளர்களுக்கும் இயக்குநர்களுக்கும் பல காரணங்களால் இளையராஜா கிடைக்காமல் போனது புரிந்து கொள்ளக் கூடியது.. ஆனால்.. இளையராஜா இசையில் ஆறு படங்கள் எடுத்து சில குறிப்பிடும்படியான வெற்றிகளை ஈட்டிய கோவைத் தம்பியே செழுமையான இசையைத் தேடி பம்பாய் சென்று லட்சுமிகாந்த்-பியாரேலாலை நாட வேண்டிய நிலைமை வந்தது.

சென்னையில் ஒரு பாடலைப் பதிவு செய்ய ஏற்பட்ட செலவை விட பம்பாயில் மூன்று மடங்குக்கு மேல் செலவானாலும், அங்கே ஒரு வித்தியாசமான "எக்கோ எஃபெக்டு' கிடைக்கிறது என்று "உயிரே உனக்காக' (1986) பாடல்களைப் பம்பாயில் பதிவு செய்தார் கோவைத்தம்பி. மலையாளத்தில் பேர் வாங்கிய ரவீந்திரன், சில தமிழ்ப் படங்களில் உபயோகிக்கப்பட்டார் (ரசிகன் ஒரு ரசிகை 1986, கண்மணியே பேசு.. 1986 இத்யாதி.)

எத்தைத் தின்றால் பித்தம் தீரும் என்றிருந்த தமிழ்ச் சினிமாக்காரர்கள், எய்ட்-இன்-ஒன்னாக இருந்த டி. ராஜேந்திரை பாடல்கள்- இசை என்றும் போட்டுப் பார்த்தார்கள். சங்கர்-கணேஷ், எம்.எஸ்.வி, ஷியாம், ஜி.கே. வெங்கடேஷ், சந்திரபோஸ் ஆகியோரும் ஒரு சில படங்களுக்கு இசை அமைத்து வந்தார்கள்.

ஆபாவாணனுடன் ஊமை விழிகளில் 1986ல் வந்த மனோஜ்-கியான் ஒரு குறும் படலத்தை அமைத்துக் கொண்டார்கள். வங்காளத்து ஆனந்தா சங்கரை யாரோ எழுதிய கவிதையில் பயன்படுத்திய ஸ்ரீதர், யார் இசையமைத்தப் படம் என்று கேட்கப்படாத நிலையை அடைந்தார்.

ஏவி.எம், நிறுவனத்தார் சந்திரபோஸ் ஸ தங்கள் அலுவலகத்திலேயே பராமரித்த சில படங்களுக்கு வேலை வாங்கினார்கள். பம்பாய்க்குப் பறந்து ஆர்.டி. பர்மனிடம் உலகம் பிறந்தது எனக்காக (1990) என்ற படத்திற்கு இசை அமைக்கச் செய்தார்கள்..

ஆனால் யார் என்ன செய்து என்ன? எண்பதுகளுக்கு இளையராஜாதான் ராஜா என்ற விதியின் ஏட்டிலே எழுதி வைத்திருக்கிறபோது, யார் எத்தனை ரிக்கார்டிங்களை செய்தாலும் காசெட்டுகளை சுழற்றினாலும் படங்களை எடுத்தாலும் அந்த செல்லுலாய்ட் ஏட்டின் ஒரு எழுத்தைக்கூட மாற்ற இயலவில்லை!

இதற்கிடையில், "நான் இப்போது வெளியில் போனால் கோயிலுக்கு மட்டுமே போகிறேன்' என்ற அளவிற்கு ஆன்மீகத்தில் லயித்துப் போயிருந்த இளையராஜா, செப்டம்பர் 1983ல் ஒரு வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார். எதற்காக?

""பாஹ், பீதோவன், பிராம்ஸ், ஹைடின், மொஸப்ர்ட் போன்ற இசை மேதைகள் வாழ்ந்த மண்ணை.. அவர்கள் பல இசைகளை உருவாக்கி, இசை நிகழ்ச்சிகள் நடத்தி இசை உள்ளங்களை மகிழ்வித்த இடங்களைத் தரிசிக்க..'' ""இந்த ஒரு மாத பயணத்தில் மதுவையோ மாமிசத்தையோ தொடுகின்ற வேதனையைக் கூட, எனக்குக் கொடுக்காமல் காப்பாற்று,'' என்று பூஜை அறைக்குள் சென்று பிரார்த்தித்துவிட்டு, புறப்பட்டார் இளையராஜா.

""இதற்கு முன், நான் ஒன்றும் சுத்தமாக இருந்தவன் அல்ல. என்றாலும் கடந்த மூன்று ஆண்டுகளாக மதுவையும் மாமிசத்தையும் தொடுவதில்லை. எந்தக் கெட்ட எண்ணங்களுக்கும் மனதில் இடம் கொடுப்பதில்லை.. இசையையும் இறைவனையும் தவிர வேறெந்த சிந்தனையும் எனக்கு இல்லை..'' (சங்கீதக் கனவுகள்- கலைஞன் பதிப்பகம்)..

இப்படி நினைக்கின்ற மனம் இருக்கிறபோது, தொடுகின்ற சந்தர்ப்பம் எப்படி வரும்? வசதியும் வாய்ப்புகளும் வந்தவுடனேயே, மூன்று "மா'க்களைத் தேடும் பிரகிருதிகளுக்கு நடுவே இளையராஜா இப்படி விரதம் காத்தது அவரது சொந்த விஷயமாக இருக்கலாம்..

ஆனால் அவரது நடத்தை ஒரு சிலருக்கேனும் சிறந்த முன்னுதாரணமாக அமைந்ததை நான் நிதர்சனமாக அறிவேன். ஜாதிபேதமும் போதமும் ஓங்கியிருக்கிற அளவிற்கு சால்பையும் சான்றாண்மையும் பற்றிய சிந்தனை தமிழ்நாட்டில் ஓங்காததன் காரணமாக, இளையராஜாவின் இந்தப் பண்புகள் கிரகிக்கப்படவில்லை.

அவை வெறும் சாமியார்த்தனமாக நோக்கப்பட்டன.. அல்லது ஒரு மேதையின் வினோதமான நடவடிக்கைகளாக பாவிக்கப்பட்டன. இன்னொரு விஷயம்.. என்னதான் கோபுரத்தில் ஏறி உட்கார்ந்தாலும், தமிழ்ச் சினிமாவின் மசாலாத்தனங்களுக்கு அவரும் அடிபணியத்தான் வேண்டியிருந்தது..

அயல்நாட்டுப் பயணத்தில், ஐந்து வயதில் இசையை உருவாக்கத் தொடங்கி, ஆறு வயதில் ஆஸ்டிரிய ராணியின் ராஜசபையிலே வாசித்து, முப்பத்தி ஆறு வயதிற்குள் அறுநூறு உருப்படிகளை உருவாக்கி, வறுமையில் விடைபெற்றுச் சென்ற மோஸப்ர்டு வாசித்த பியானோவையும் உபயோகித்த வாத்தியங்களையும் கண்டார் இளையராஜா..

வாத்திய இசையின் முழுவீச்சை நிரூபித்த சிருஷ்டிகர்த்தாவான இசை மேதை பீத்தோவான் வாசித்த பியானோவை ஸ்பர்சித்துப் பார்த்தார்..

மெலடி மன்னரான ஷூபர்ட் முப்பத்தியோரு வயதில் இறந்துபோன அறையில் அவர் எழுதிய இசையின் பிரதிகள் கண்ணாடி போட்டு மாட்டப்பட்டிருப்பதைக் கண்டார் இளையராஜா.

இயற்கையின் அழகை வியக்கும் ஜெர்மானியப் பாடல்களை எழுதிக் குவித்த அந்த மேதை, தனது வாழ்நாளில் கெளரவிக்கப்படாமலேயே அற்ப ஆயுளில் இறந்துபோனது என்ன பரிதாபம்.. ஆனால் அவருக்குப் பிறகாவது அவரது உருப்படிகளையும் நினைவுகளையும் பாதுகாத்து வைத்திருக்கிறார்களே..

கவுண்டர்பாய்ன்ட், ஃபியூக் (ஒரே நேரத்தில் பலவித இசைகளை ஒலிக்கச் செய்யும் உத்திகள்) முதலியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்த பாஹ் பணியாற்றிய தேவாலயத்திற்குச் சென்றார் இளையராஜா.. மேற்கத்திய இசை மேதைகளை நேசித்தார்...

அன்றொரு நாள் சாய் லாட்ஜின் சிறிய அறையில் தன்ராஜ் மாஸ்டரால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மேதைகள் இயங்கிய சூழல்களைக் கோயில்களைக் காணும் உணர்வுடன் கண்டார்.. மற்றபடி மேற்கத்திய நாகரிகமெல்லாம் இளையராஜாவிற்கு இடைஞ்சலான விஷயங்களாக பட்டது..

""தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்த்தவர்கள் நாயன்மார்கள், பதினெண் சித்தர்கள், ஞானிகள், முனிவர்கள், மகான்கள், கவிஞர்களை, இசைமேதைகள்.. இவர்களுடைய எண்ணங்களும், ஆவிகளும் எங்கும் போகவில்லை.. எங்கள் அன்னை பூமியில் அரசாட்சி நடத்திக் கொண்டிருக்கிறது..''

இத்தகைய மனோபாவத்துடன், காலை 7 முதல் இரவு 10 வரையிலான தனது அன்றாடப் பணியில் இணைந்தார். அவர் இசை அமைத்து ஜூலையில் வெளிவந்திருந்த "முந்தானை முடிச்சு' இருநூறாவது நாளை நோக்கி நடை போட்டுக் கொண்டிருந்தது.

திறமையுடன் வனையப்பட்ட திரைக்கதையில் உயிரோட்டமுள்ள பாடல்கள் கலந்தபோது, சாதாரண மக்கள் அந்தப் பாடல்களுடன் ஒன்றிப் போனார்கள். பாடல்கள் வெறும் அலங்காரமாக இல்லாமல் உணர்வின் பிரதிபலிப்பாக ஒலித்தன.

"சின்னஞ்சிறு கிளியே..' (பாரதியின் தொடக்கத்துடன் முத்துலிங்கம்), "அந்தி வரும் நேரம்' (கங்கை அமரன்) ஆகிய பாடல்கள் நாகசுரத்தின் கம்பீரமான நாதத்திற்கு சுரம் பிடித்தாற் போல் தெம்பான மெட்டுக்களாக அமைந்தன.

"வெளக்கு வெச்ச நேரத்திலே' என்ற சிருங்காரக் காட்சியை தாங்கி வரும் பாடலை ஜானகியுடன் இளையராஜா பாடினார். இதுபோன்ற பாடல்களில் அவர் குரல் பெரிதாகப் பரிமளிக்கவில்லை என்றாலும், மலையூர் மம்பட்டியானை (1983) அறிமுகம் செய்து வைக்கும், "காட்டு வழிப் போறபுள்ளே கவலைப்படாதே' மாதிரி, ஒரு பாலட் (பழம் நாட்டுப்புறக் கதை) எஃபெக்டுக்குத் தோதாக ஒலித்தார்.

## சிம்போனி ஏன் வரவில்லை?

இளையராஜா இசை அமைத்த "தாய்க்கு ஒரு தாலாட்டு'ல் இப்படி ஒரு பாடல்.. "பழைய பாடல் போல புதிய பாடல் இல்லை / வயது போன முல்லை வாடிப் போகவில்லை.. பழைய பாடல் பாடு, இளமை திரும்பும் இங்கே'





பத்மினியைப் பார்த்து 1986ல் சிவாஜி பாடுவதாக, ஒரு பாடல் காட்சியில் இது.

இத்தனைக்கும் இளையராஜா இசை. வரிகள் வைரமுத்து. ஐம்பதுகளில் இளம் ஜோடியாக இருந்த சிவாஜி - பத்மினி பாடுவதால் மட்டும் அது ஒரு ஃபிளாஷ்பேக்காக அமையவில்லை.. பாடலில் மெட்டும் ''புதிய பறவை'யில் இடம் பெற்ற ''உன்னை ஒன்று கேட்பேன்' என்ற பாடலின் இரண்டாம் ஓட்டம்தான்.

ஒத்துவராததால் சில வருடங்கள் டி.எம். செற்ந்தரராஜனை பாட வைக்காத இளையராஜா, இந்தப் பாடலை அவரையும் சுசீலாவையும் பாட வைத்தார். எல்லாம் சரி.. ஆனால் படத்தில் இந்த வரிகள் கட்!

''பழைய பாடல் போல புதிய பாடல் இல்லை' என்று ஏன் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கடைசியில் யாரோ பின் வாங்கியிருக்கலாம்.

ஆனால் ''பழைய பாடல் போல் புதிய பாடல் இல்லை' என்று சொல்வதற்கு என்ன பொருள்? பழையதைப் போல் புதியது எப்படி இருக்க முடியும்.. அல்லது ஏன் இருக்க வேண்டும்? பழைய சாதம் போல் புதிதாக வடித்த சாதம் இருக்க முடியுமா? எது உயர்வு? எத்தனையோ கேள்விகள்.

இளையராஜா 1986ல் போடுகிற பாடல் புதியது என்றால் 1978ல் போட்டது?

பழையது என்று சொல்லப்படுவது மிகப் பழையதாகி, ஒரு காலத்தில் மறக்கப்படலாம்.. ஒரு காலத்தில் திரையில் சிறப்பாகப் பாடிய எஸ்வி. சுப்பையா பாகவதரையும் செல்லப்பாவையும் எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தியையும் கொத்தமங்கலம் சீனுவையும் மக்கள் மறந்துவிட்டது போல.

புதியது என்று இன்று சொல்லப்படுவது நாளை பழையது ஆகலாம்.. ஆகும்.

ஆனால் இடையில் பல தரப்பட்ட விமர்சனங்கள்.. அவற்றுக்கு அடிப்படையாக பல அளவு கோல்கள்.. எவை சரி.. எவை சரியில்லை? அவரவரின் அனுபவப்படி அது அது உயர்வு.

ஒருவருக்கு ஒரு காலத்தில் உயர்வாகப் படுவதே இன்னொரு காலத்தில் துச்சமாகப்படுகிறது.. காலம் ஓடிக் கொண்டிருக்கிறது. தன் உள்ளத்திற்கு தான் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது கலைக்கான அளவுகோலாகவும் செயல்படுகிறது.

தாய்க்கு ஒரு தாலாட்டிற்கு முந்தைய ஆண்டிலேயே பாரதிராஜா அதைத்தான் செய்து காட்டினார். பல பாத்திரங்களை திரையில் சிருஷ்டித்துக் காண்பிப்பதில் மன்னனான சிவாஜிகணேசன், அவருக்கு உருவாகியிருந்த ரசிகர் கூட்டத்தைத் திருப்திப்படுத்துவதற்காக, மிகை நடிப்பை அறிந்தே மேற்கொண்டிருந்தார்.

அதற்கெல்லாம் (ஒரு படத்தில் தங்கவேலு மீண்டும் மீண்டும் சொல்வதுபோலே) ஃபுலுஸ்டாப் போட்டுவிட்டு, மார்பில் குரூரமான மனைவி ஏற்படுத்திய ரணத்தை தாங்கிக் கொண்டு, ஒரு புதிய குயிலிடம் பரிவைத் தேடும் மலைச்சாமியாக, பாரதிராஜா போட்ட பாட்டையிலே நடந்தார் சிவாஜி.

பாத்திரத்திற்கு ''முதல் மரியாதை' கொடுத்த பாரதிராஜாவிற்கு வெற்றி. எந்த டைரக்டருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று முடிவுகட்டி, அவர் கையில் பிசையப்படும் களிமண்ணாகத் தன்னை மாற்றிக் கொண்ட கலை உலக சிகரத்திற்கும் வெற்றி.

இரண்டு பேருக்கும் மட்டும்தானா ஜெயம். இந்தக் கலா வைபவத்தில் கலந்து கொண்ட மற்றவர்களுக்கும் தான். பாடல் வரிகளில் உணர்ச்சிக்குத்தான் முதலிடமே தவிர, உருவகத்திற்கு இல்லை என்று இளையராஜா ஒரு முறை கூறிய இலக்கணத்திற்கு உட்பட்டே இருந்தன வைரமுத்துவின் வரிகள்.. ''உன்னையும் என்னையும் வச்சு ஊருசனம் கும்மியடிக்குது..' என்று முதல் சரணத்தில் வரும் கற்பனை வளமிக்க வரியின் பொருள்தான்.

''கண்ணு காது மூக்கு வச்சி ஊருக்குள்ள பேச்சு' என்று இரண்டாவது சரணத்தில் மூத்தாய்ப்பாக சொல்லப்பட்டாலும், கூறியதைக் கூறல் என்ற முணுமுணுப்பை எல்லாம் மீறி ''ராசாவே உன்னெ நம்பி'யில் ரவிக்கை அணியாத குயிலின் உயிர் தெறிக்கிறது!

ஜானகியின் குரல் நாட்டுப்புற ராகத்தில் வண்டின் ரீங்காரம் போல் சங்கமிப்பதும், மெட்டின் மூர்ச்சனைகளில் பரிவும் ஏக்கமும் விரவிக் கிடப்பதும் கதைக்கும் கதாபாத்திரத்திற்கும்.. வளம் சேர்த்தன.

''ஏதோ என் பாட்டுக்கு நான் பாட்டுப் பாடி / சொல்லாத சோகத்தை சொன்னேனடி' என்று அவன் பாட, ''சொக ராகம் சோகம் தானே' என்று அவள் எதிர்பாட்டுப் பாட, ''யாரது போறது' என்று அவன் கேட்க, ''குயில் பாடலாம், தன் முகம்

*காட்டுமா' என்று அவள் முடிக்கிறாள்... "பூங்காற்று திரும்புமா' என்ற பாடலில் சபாஷ்!*

*இதில் பாரதிராஜா, இளையராஜா, வைரமுத்து, மலேசியா வாசுதேவன், ஜானகி, சிவாஜி, ராதா ஆகியோர் திரைக்குப் பின்னேயும் முன்னேயும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது வெறும் தோற்றம் தான். அல்லது புள்ளி விவரம் மட்டும்தான். சுக ராகமான சோக ராகத்தின் அர்த்தத்தை எல்லோரும் தத்தமது வழியில் தேடியிருக்கிறார்கள் என்று தான் சொல்ல வேண்டும்.*

*பிறந்து, வளர்ந்து, இணைந்து, பிரிந்து தனி வழியே போகிற இந்த ஜீவிய கதியில் நிழல்போல் வந்து மறையும் சுகங்களை அசை போடுவதைத் தவிர ஏதாவது சுகம் உள்ளதா என்ன? முதல் மரியாதையில் ஒவ்வொருவரும் தமது கலைக்கு முதல் மரியாதை கொடுப்பதில் தம்மை மறந்ததால், நம்மால் நினைக்கப்பட*
வேண்டியவர்கள் ஆகிறார்கள்.

*"முதல் மரியாதை' வந்து வெற்றி அடைந்த முந்தைய ஆண்டின் தீபாவளி ஜாக்பாட்டில், வெற்றி அடையும் என்று எதிர்பார்க்காத (டார்க் ஹார்ஸ்) பந்தைய குதிரையாக வந்து வெள்ளி விழா வெற்றியை வாரிக்கொண்டு போன படம், "வைதேகி காத்திருந்தாள்'.*

*வெற்றிக்குக் காரணம் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்த திரைக்கதையும், காதல் சப்ஜெக்டும், அதைத் தூக்கி நிறுத்திய பாடல் மழையும்தான் இளையராஜா போன்ற முதல் தர இசை அமைப்பாளர்களுக்குப் படத்தில் இடம் பெறும் ஒவ்வொரு பாடலையும் வெற்றி பெறச் செய்யும் ஆற்றல் இருப்பதற்கு அந்தப் படம் உதாரணமாக விளங்குகிறது...*

*அவருடைய இசைத் தொகுப்புகளின் நேர்த்தியைக் கவனிக்க இரண்டு பாடல்களை எடுத்துக் கொள்ளலாம். இரண்டும் ஜெயசந்திரன் பாடியவை. ஒன்று "ராசாத்தி உன்னை காணாத நெஞ்சு காற்றாடி போல் ஆடுது' இன்னொன்று "காத்திருந்து காத்திருந்து காலங்கள் போனதம்மா'.*

*முதல் பாடலில் காதலின் எதிர்பார்ப்பு, பூரிப்பு, துடிப்பு ஆகியவை சுட்டப்படுகின்றன. "பொழுதாகிப் போய், வெளக்கு ஏந்திய பின்' இசைக்கப்படுகிற முன் இரவின் மாயப் பொழுதிலே பாடல் நிகழ்த்தப்படுகிறது. வாத்திய இசைத் தொகுப்புகளும், மெட்டின் சுழிப்புகளும் (உணர்ச்சி வேகத்தில் மெட்டு மேல் ஸ்தசாயியில் ஏறி, கொடி பறக்க விடுகிறது...) கூடலில் நம்பிக்கை கொண்ட காதலின் உணர்ச்சி வண்ணங்களை கோலமிடுகின்றன.*

*இரண்டாவது பாடலோ, தொடக்க ஹம்மிங், இடையில் வரும் தாயின் ஆராரோ, பின்னர் வரும் மந்திரவாதியின் உச்சாடனங்கள் ஆகியவற்றால் காதலின் சோகச் சுமையை கூற வருகிறது... முதல் பாட்டில் எதிர்பார்ப்பு கூடிய பிரிவு, அடுத்தது சோகச் சுமையால் அழுத்தப்பட்ட நிரந்தரமான, ஆனால் இன்னும் ஒரு குருட்டு எதிர்பார்ப்புடன் உள்ள பிரிவு.*

*இரண்டிற்கும் இளையராஜா கற்பனை செய்துள்ள வித்தியாசமான இசைச் சூழல்கள் நேர்த்தியானவை. குறை சொல்ல வேண்டும் என்றால், இரண்டு பாடல்களையும் மிகவும் இனிமையாகப் பாடியிருக்கிற ஜெயசந்திரன் இரண்டிலும் ஒரேவிதமாக (பிரத்யேக உணர்ச்சி காட்டாமல்) பாடியிருப்பதைச் சொல்லலாம்.*

*தெரிந்த ராகங்களில் எளிமை- இனிமை உள்ள மெட்டுக்களை அமைக்கும் இளையராஜாவின் திறமை, ஆபோகியில் அமைந்த "இன்றைக்கு ஏனிந்த ஆனந்தமோ'வில் பளிச்சிடுகிறது... எந்த ராகத்தையும் காலப்பிரமாணத்தை மாற்றி வெவ்வேறு உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கச் செய்யலாம் என்றாலும், ஆபோகியை தொட்டுக் கொள்ளும்போது ஆனந்தம் எப்படிக் காற்றை கவ்வுகிறது!*

*இளையராஜா சொந்தக் குரலில் பாடுவதைப் பற்றி கேள்வி கேட்பவர்கள், வைதேகி காத்திருந்தாளில் அவர் உமா ரமணனுடன் பாடும் "மேகங்கறுக்கையிலே' என்ற ஓடப் பாட்டைக் கேட்க வேண்டும். அதிகமாகப் பயன்படுத்தப்படும் பெண் கோரஸ ன் டன் ஆண் கோரஸ் குரல்கள் பின்னும் பாடல் இது. திஸ்ர நடை சுறுசுறுப்பாக ஓடி வரும்போது கிடைக்கும் துடிப்பும் துள்ளலும் பாடலில் அலைமோதுகின்றன.*

*படத்தில் மற்றப் பாடல்களை வாலி எழுதியிருக்க, இந்தப் பாடல் பஞ்சுவின் கைவண்ணம். வரிகளில் மட்டும் அல்ல, இளையராஜா தொண்டையைத் திறந்து பாடும் விதத்திலும் கிராமீய பாணி மணக்கிறது...*

ஆணென்னும் பெண்ணென்னும் ஏன் படைச்சான்
ஆளுக்கொரு ஆசையை ஏன் வளர்த்தான்
இல்லேன்னா உலகமே இல்லை புள்ளை
இதுகூட தெரியவில்லை என்ன புள்ளே

*என்று முடிக்கும்போது... கடைசியில் வரும் "என்ன புள்ளை'வில் "என்ன'வை கேள்வி கேட்பதுபோல் அழுத்துவதில் தனி சுகம். நல்ல பாடலை சாகித்தியத்தை உணர்ந்த பாடகன் பாடும்போது கிடைக்கும் சுகங்கள் இவை.*

*சிறையை விட்டுத் திரும்பும் நாயகியின் ஃபிளாஷ்பேக்காக படத்தைத் தொடங்கி, "அம்மன் கோயில் கிழக்காலே'வில் (1986) வைதேகி காத்திருந்தாளில் இயக்குநர் சுந்தரராஜன் இன்னொரு வெற்றியைக் கண்டார் (இதன் நாயகனும் ஒரு பாடகன்!) இதில் பாடல்கள் முந்தைய படத்தைப் போல் எடுத்ததற்கெல்லாம் ஹிட் ஆகவில்லை என்றாலும் "சின்னமணிக் குயிலே', "உன் பார்வையில்', "காலைநேரப் பூங்குயில்' போன்றவை நினைவில் நின்றன.*

*தெரிந்த ராகங்களில் தெரியாத அழகு மெட்டுக்கள் என்ற வகையில் காலைநேரப் பாட்டில் ஆபோகியிலிருந்து இளையராஜா நெய்யும் ஒரு காலை சாந்தியையும் மென்மையையும் அனுபவிக்கலாம்.*

இளையராஜாவின் மாபெரும் இசை அலையைத் தாக்குப் பிடிக்க, (மகன் கோபிகிருஷ்ணா) சொந்த தயாரிப்பில் சொந்தப் படங்கள் எடுத்து, ஒரு விசித்திரமான திருப்பத்திற்கு வந்திருந்தார் இசை அமைப்பாளர் விஸ்வநாதன்.

ஏ.வி.எம். நிறுவனத்தின் தயாரிப்பில், இளையராஜாவுடன் கூட்டு இசை அமைப்பிலே ஈடுபட்டு நிதி நெருக்கடியை நேர் செய்யும் நிலையில் இருந்தார். உருவான படம் ''மெல்லத் திறந்தது கதவு' (1986). எம்.எஸ்.வி.யின் பழைய நண்பரும் இசை அமைப்பாளரும், இளையராஜாவின் குருவுமான ஜி.கே. வெங்கடேஷ் ஒரு வேடத்தில் நடித்தார்.

எம்.எஸ்.வி. மெட்டுக்கள், இளையராஜா இசைச் சேர்ப்பு (அரேஞ்ச்மென்ட்) என்ற பொதுவான அமைப்பில் உருவான பாடல்கள் எல்லாம் நன்றாககவே இருந்தன... முந்திய இசை அலையின் நாயகர், அந்நாளைய இசை நாயகருடன் இணைகிறார் என்ற புதுமை இணைவு இருந்தபோதும், வெற்றியின் கதவுகளைப் படம் திறந்துவிடவில்லை...

இசைத் தொடர்புடைய கதை இருக்கும் சில படங்களில் இசை சரியாக அமையாமல் கழுத்து அறுத்துவிடுவது உண்டு... இளையராஜாவின் இசை வீச்சில் புதுவெள்ளத்தில் அது நிகழவில்லை. ஒரு கிராமத்து இசைவாணன் திரைஇசைக் கலைஞனாக உருவாகும் படம்தான் ''மகுடி' (1984). குழலூதும் கிராமத்தானாக மோகன்தான்.

''நீலக்குயில் உன்னோடு நான் பண்பாடுவேன்' (எஸ்.பி.பி.) என்ற பாடல் கச்சிதமாக மனதைக் கவர்வதாக அமைந்தது. சின்ன ''ரீ' யைத் தொட்டால் ஒரு நெகிழ்வு... பெரிய ''தா'வுடன் ஒரு கம்பீரம்... எப்படியும் பாட்டில் ஒரு கனிவும் கெத்தும் வந்து விடுகின்றன.

''தரரத்தரரா... தரரத்தரரா...' என்று ஜானகி சிலம்புவார். கீழே ஏசுதாஸ் அதற்கு ஹார்மனி பாடுவார்.

''தென்றல்வந்து என்னைத் தொடும்' என்று டைட்டில் பாடல் (அதாவது படத்தின் தலைப்பு இடம் பெறும் பாடல்) இருவர் குரலில் மூட் பாடலாக வந்தது. 1954 ல் பாண்டுரங்கன் இசைவில் ''எதிர்பாராதது' கதையை சொல்லிக் கொண்டிருந்த ஸ்ரீதர், 1974 ல் எம்.ஜி.ஆருக்கு விஸ்வநாதனை கரம் பிடித்துக் கொண்டிருந்த ஸ்ரீதர், 1985 ல் ஒரு இளம் காதல் கதைக்கு அன்றைய இளையராஜாவை ஊக்கிக் கொண்டிருந்தார்...

இளமைக் காதல்... இளம் கதாநாயகி வடிவில் ஸ்விம் சூட்டில் பவனி வந்தாலும் சிருங்காரம் ''சீ' என்று தாழாமல் குளிர்ச்சியான இசையில் குளித்துவந்தால் தென்றல் ரசிகர்களைத் தொட்டது...

மூட் ஏற்படுத்துகிற பாடல்கள், காலுக்கு வேலை கொடுக்கிற பாடல்கள் என்று ஒரு கதம்பம்... நாயகன்-நாயகி மரங்களை சுற்றி ஓடினால் போதாது, தலை சுற்றுகிறவரை தாளத்திற்கு கை-கால் அசைக்க வேண்டும் என்ற நியதிகள் முளைவிட்டுக் கொண்டிருந்த காலம்...
தமிழ் இசை பற்றிய கருத்துக்களை தமிழ்ச் சினிமாவில் சொல்ல நினைத்த கே.பாலசந்தர் நல்ல கதை அமைப்புடன் ''சிந்து பைரவி' எடுத்தார்.

சுமார் இருபது வருடங்களாக எம்.எஸ்.வியை 25 படங்களுக்கு மேல் இசை அமைக்கச் செய்த பாலசந்தர், இசைச் செறிவும் சவாலும் நிறைந்த ஒரு படத்தை இளையராஜாவிற்கு அளித்திருந்தார். இளையராஜா ஒன்றும் சங்கீத கலாநிதி அல்ல. ஆனால் திரைப்படத்திற்குத் தேவையான கர்நாடக அழுத்தங்களை மக்களைச் சென்றடையும்படி உருவாக்குவதில் வெற்றி அடைந்தார்.

''கலைவாணியே' என்று கீழ்நோக்கும் சஞ்சாரங்கள் இல்லாத கல்யாணிராகப் பாடல். ''மகாகணபதிம்' என்ற தீட்சிதர் கிருதியை மிருதங்கம் இல்லாமல் எடுத்த புதுமை. ''மரிமரி நின்னே' என்ற காம்போதி ராக தியாகராஜ கிருதியை சாரமதியில் மாற்றி சர்ச்சைக்கு வழிவகுத்த தன்மை...

அதை நாட்டுப்புற விவாதத்திற்கு வளைத்துக்காட்டிய நேர்த்தி. சங்கீத வித்வான் சுருதி மாறிப் போய் காதல் பித்தனான தருணத்தில் தர்பாரியில் பாடும் ''பூமாலை வாங்கி வந்தேன்' தண்ணியில் மூழ்கும் வித்வான் ''தண்ணித் தொட்டி' என்று பாடும்போதும், ஒரு விக்கலை மிக்ஸ் செய்த பொடி சங்கதி படே ஜோர்... இப்படிப் பல.

''''மேல் நோக்கும் சஞ்சாரங்களை மட்டும் வைத்து ஒரு கிருதி செய்யலாம் என்பது யாருக்கும் தோன்றாத கற்பனை... இளையராஜாவிற்குத் தோன்றியிருக்கிறது,'' என்று பாராட்டுகிறார் இளையராஜாவின் முதல் திரைப்பாடல் சிடியை உலகுக்கு அளித்த ரங்கசாமி பார்த்தசாரதி.

எக்கோ ரிக்கார்டிங் மற்றும் ஓரியன்டல் ரிக்கார்ட்ஸ் நிறுவனங்களின் தலைவரான பார்த்தசாரதி, இசை அமைப்பாளரும் ஒளிப்பதிவில் அமெரிக்கப் பயிற்சியும் உள்ளவர். அவர் அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்.

நான் சந்தித்தபோது அமெரிக்காவிற்கு பறக்க ஆயத்தமாக இருந்தவர், ஒருமணி நேரம் இளையராஜாவைப் பற்றி தனது அபிப்ராயங்களைப் பகிர்ந்துகொண்டுவிட்டு வேகமாகப் புறப்பட்டார். ''''கலைவாணியே பாடலின் அமைப்பு இளையராஜாவின் வித்தியாசமான கற்பனைக்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம்... தம்பூரா ஸ்ருதி, வயலின் ஆகியவை மட்டும் ஒலிக்கப் பாடலை பதிவு செய்திருந்ததும் ஒரு நாவல்டி,'' என்றார் பார்த்தசாரதி.

''''இப்படி எல்லாம் வித்தியாசமான அணுகுமுறை அவருக்கு இருப்பதால்தான், பி.பி.சி. நிறுவனம் 116 நாடுகளிலிருந்து சென்ற நூற்றாண்டின் பாடலை (சாங் ஆஃப் தி பிளாநெட்) தேர்வு செய்தபோது அவரது ''ராக்கம்மா கையைத் தட்டு' இடம் பெற்றிருக்கிறது.''

படங்களுக்குப் பின்னணி இசை அமைப்பதில் இளையராஜாவிற்கு இருக்கும் தனித்திறமை பலருக்குத் தெரியும். இதைப் பற்றி தன்னுடைய அயல்நாட்டு அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தசாரதி ஒரு கருத்தைச் சொன்னார். ''''இந்த விஷயத்தில்

ஆசியாவிலேயே இளையராஜா சிறந்தவர் என்பது என் மதிப்பீடு,'' என்றார்.

""அப்படி என்றால் ஹாலிவுட் இசை அமைப்பாளர்கள்தான் இதில் சிறந்தவர்களா,'' என்றேன்.

""அங்கே முதலில் இசை அமைக்கப்பட்டு, அதற்கு ஏற்றவாறு படம் பிடிக்கப்படுவதால், காட்சிகளுக்கு இசை அமைக்க வேண்டிய நம் இசை அமைப்பாளர்கள் எதிர்கொள்ளும் சவால் அவர்களுக்கு இல்லை. அதனால் அவர்களை நான் இதில் சேர்க்கவில்லை'' என்றார்.

இளையராஜா உருவாக்கிய சிம்போனி ஏன் வரவில்லை என்று சொல்ல இயலுமா, என்றேன்.

""இசை தரத்தில் அது சிறந்ததாக இருக்கிறது. இங்கிலாந்தில் இசைக் கலைஞர்களின் யூனியன் மிக வலுவுடையது. அதனுடன் சரியான ஒப்பந்தம் செய்து கொள்ளாதது காரணமாக இருக்கலாம். கலையுள்ளம் கொண்ட இளையராஜா இதை சரியாகக் கவனிக்காததால் பிரச்சனை எழுந்திருக்கலாம்..''

இதெல்லாம் தொண்ணூறுகளின் பிரச்சனைகள்..

அதற்கு முன், ""என் லட்சியத்தை அடைய பாதை என்று ஒன்று இருந்தால், அதுவே லட்சியத்திற்கும் எனக்கும் உள்ள இடைவெளி'' என்று வெட்டவெளியில் கொட்டிக் கிடக்கிற திரைவாய்ப்புகளை சினிமா சந்தையிலே சுவீகரித்து இளையராஜா நடைபோட்டுக் கொண்டிருந்தார்.

### பாட்டுக்கு நான் பாடுபட்டேன்



பண்ணைபுரம் சின்னத்தாயி பெத்த மகன் (பிச்சமுத்து) ஏறியே வர்றான் டோய்.. ஓரம் போ ஓரம் போ..' என்று இளையராஜா என்ற இசையமைப்பாளரின் அன்னையின் பெயரைச் சொல்லி, "பொண்ணு ஊருக்குப் புதுசு'வில் 1979 ல் விளையாட்டாகப் பிரகடனப்படுத்தியது போலத்தான் தோன்றியது.

ஆனால், விளையாட்டைப் போல் அடித்த தண்டோராவும் முழங்கிய "பராக்'கும், எண்பதுகளின் இரண்டாம் பாதியில் நிஜத்தை விட நிஜமாயின.

ஒரு இசை அமைப்பாளரின் படத்தை பாட்டுப் புத்தக முகப்பில் போட்டதுண்டு (எஸ். ராஜேஸ்வரராவ்- அலிபாபாவும் அற்புதவிளக்கும் 1956). இசை அமைப்பாளரின் படத்தை பாட்டுப் புத்தகத்தின் பின் அட்டையில் முழுப் பக்கத்தில் போட்டதுண்டு (ஜி. ராமநாதன்- கடவுளின் குழந்தை). டைட்டில்களில் இயக்குநருக்கு அடுத்த இடம் இசை அமைப்பாளருக்குக் கிடைத்ததுண்டு (விஸ்வநாதன் - ராமமூர்த்தி).

ஆனால் இசை அமைப்பாளருக்கு திரை அரங்கத்தில் கட் அவுட் வைக்கும் நிலை இளையராஜா காலத்தில்தான் நிகழ்ந்தது.. பட விளம்பரங்களில் படத் தலைப்பிற்கு மேல் இடம் பெறும் நிலை ("இளையராஜாவின் இன்னிசை மழையில்' என்று மேற்பொறிக்கப்பட்ட வாசகத்துடன் "பயணங்கள் முடிவதில்லை' பேனர்கள் வைக்கப்பட்டன) அல்லது இயக்குநரை விட பெரிய அளவில் பெயர் பொறிக்கப்படும் நிலை (சில படங்களில்தான்), இளையராஜா உச்சியில் இருந்தபோதுதான் நிகழ்ந்தது..

தமிழ்த் திரைப்படங்களின் எண்ணிக்கை அதன் சரித்திரத்திலேயே என்றும் இல்லாத அளவிற்கு நூறைத் தாண்டி போய்க் கொண்டிருந்த காலகட்டத்தில் இப்படி நடந்தது.

இந்த எண்ணிக்கையில், கமலஹாசன், ரஜினிகாந்த் ஆகிய முன்னணி நட்சத்திரங்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய படங்களில் நடித்தார்கள். விஜய்காந்த், சத்யராஜ், பிரபு, ராமராஜன் போன்ற அன்றைய இரண்டாம் வரிசை நட்சத்திரங்கள் சில படங்களில் நடித்தார்கள். இவர்கள் அனைவரின் வெற்றிகளிலும் இளையராஜாவின் பெயர் கலந்திருந்தது.

மற்றபடி, புதியவர்களையும் இளைஞர்களையும் வைத்துப் படம் எடுக்க நினைத்த தயாரிப்பாளர்கள், இளையராஜாவின் நட்சத்திர அந்தஸ்தைப் பயன்படுத்தி, தங்கள் படங்களுக்கு கூடுதல் மவுசை ஏற்படுத்திக் கொள்ள முயன்றார்கள்.. அதன் விளைவுதான் அவருக்குக் கிடைத்த முக்கியத்துவம். இதற்கு இன்னொரு திரைப் பரிமாணம் இருந்தது.

இளையராஜா செல்லமாக "ராஜா' என்றழைக்கப்பட்டார்.. அந்தப் பெயர் திரைப்படத் தலைப்புகளிலும் பல்லவிகளிலும் பட்ட ஒரு பாடு இருக்கிறதே!

"ராஜா நீ வாழ்க' என்றது ஒரு தலைப்பு. "ராசாவே உன்னை நம்பி' என்று ராஜாவின் பாட்டுப் பல்லவியைத் தலைப்பாக்கினார் இன்னொருவர். ராஜா ராஜாதான் என்றது இன்னொரு தலைப்பு. "ராஜா கையை வச்சா ராங்கா போனதில்லே' என்றும் "ராஜா ராஜாதிகளின் இந்த ராஜா என்றும் திரைநாயகர்கள் பாடினார்கள். ஆடினார்கள்.

உங்களுக்குப் பிடித்த இசை அமைப்பாளர் யார் என்ற கேள்விக்கு, இளையராஜாதான் என்று கற்பூரம் மிதிக்கக் தையத்தக்கா என்று நடிகைகள் குதித்தார்கள்!

அவருக்கு முந்திய இசை அமைப்பாளர் முப்பது வருடங்களில் நெருங்கிய எண்ணிக்கையை ஒரு பத்து ஆண்டிலேயே சாதித்து விட்டிருந்தார் இளையராஜா. மேற்கத்திய இசை நுட்பங்களில் அவர் கை தேர்ந்திருந்தது இதற்கு உதவியது. குறிப்பாக இசையை எழுதும் (ரைட்டிங் ஸ்கோர்) திறமையால் அவரால் பல படங்களுக்கு பின்னணி இசையைக் குறித்து விட முடிந்தது.

ஒரே நாளில் அவர் மூன்று படங்களின் பின்னணி இசையைக் கவனித்ததைக் கண்டு வியந்தவர்கள் உண்டு. ஏகப்பட்டப் படங்களை அவர் ஏற்றதால், நேரத்திற்கு முடிக்க முடியாமல் மற்றவர்கள் செய்து முடித்ததும் உண்டு. ''விடிஞ்சா கல்யாணம்' என்ற படத்திற்கு எம்.எஸ். விஸ்வநாதன் பின்னணி இசை அமைத்திருந்தார். இளையராஜாவின் அழைப்பின் பேரில்தான்.

இத்தனைப் பரபரப்புகளுக்கு இடையே, ஏராளமான படு சுமார் படங்களுக்கு இசை அமைத்து வந்தாலும், இளையராஜாவின் கற்பனை அவ்வப்போது மூணாறு அருவியாகப் பெய்து வருகிறது. அந்தப் பச்சை பசேல் மலையருவிப் பிரதேசங்களில் ஒருவரை ஒருவர் அணைத்தும் பிணைத்தும் கொண்டிருக்கும் காதலரின் கண்களில் சோகம் ஏன்?

கூடலிலும் இப்படியொரு பரிதவிப்பா? அடடா, உயிர்களின் சுவாசம் ஈரமாகவும், பாரமாகவும் இசையில் வார்க்கப்பட்டிருக்கும் இந்த விந்தைதான் என்ன? என்ன சத்தம் இந்த நேரம்?

அருவியின் ஓசையைவிட உயிர்களின் ரகசிய விசும்பல் பேரொலியாகக் கேட்கிறதே இந்தப் பாட்டில்... இடைஇடையே குரலும் வாத்தியமும் தேய்ந்ததும் சம்பவிக்கும் சின்ன மௌனங்களில் வனதேவதைகளின் சிலம்போசைக்கு நடுவே அவற்றின் தேவபாஷை கேட்கிறதே!... காட்சியை கற்பனை செய்த கே. பாலசந்தரும், பாடலைக் கற்பனை செய்த இளையராஜாவும், கற்பனையை கண்முன்னும் செவிக்குச் சமீபமாகவும் கொண்டு வந்த அனைவரும் பாக்கியவான்கள்!

மற்றபடி படத்தின் வெவ்வேறு மெட்டுக்களில் காலை ஆட்ட வைக்கும் தாளசதிராட்டத்திற்கு முக்கியத்துவம் கிடைத்தது... (சித்ரா இசைத்த ஏதேதோ எண்ணம் வளர்த்தேன் இதற்கு விதிவிலக்கு).

''சிங்களத்து சின்னக் குயிலே' என்று இதே புன்னகை மன்னனில் இன்னொரு பாட்டு. பாமரமாகப் பல்லவியில் தொடங்கி, சரணத்தில் ஒரு கஸல் பாணி மெல்லிசைக்குச் சென்று மீண்டும் பல்லவி ஸ்டைலுக்குத் திரும்பி, அதைத் தொடர்ந்து ஒரு கவ்வாலி டச் கொடுத்து... இப்படிச் சினிமா அவியலிசையின் சிறந்த உதாரணம் இந்தப் பாடல்.

நண்பர் ஒருவர் ஒரு சினிமா பாடலைச் சுட்டி முதல் லைன் கர்நாடிக், ரெண்டாவதில் உள்ள அசைவுகள் இந்துஸ்தானி, மூன்றாவதாக வருவது, வெஸ்டர்ன் என்று எடுத்துக் காட்டுவார்... அது குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி இருக்காத வரை (இல்லை, காட்சிக்கு அப்படித்தான் தேவை என்றால், அப்படியே இருக்கும் வரை) எல்லாம் சரிதான்.

இசையமைப்பில் ஒரு பிரத்யேக பாணி இருந்த இளையராஜா இப்படியாகப் பல படங்களுக்கு இசை அமைத்தார். சில பாடல்கள் பலித்தன. சில மெட்டுக்கள் மனதைத் தொட்டன என்பது உண்மைதான். ஆனால் பாடலையும் இசையையும் படத்திலிருந்து பிரித்துப் பார்க்காமல் படத்தோடு இசையும் வளர்த்து இசையோடு படமும் மணந்து ஏற்படுகிற அனுபவங்கள் அபூர்வம்.

இசை கதையோடு ஒட்டி வந்து, மனதிலேயும் ஒட்டிக் கொண்டால் எந்த அளவிற்கு தூள் பறக்கும் என்பது இளையராஜா இசை அமைத்த சில படங்களில் நிரூபணம் ஆகிக் கொண்டிருந்தது...

''ஆண் பாவம்' என்றொரு படம் (1985). பெயருக்கேற்ற மாதிரி குறுக்குப் பார்வையுள்ள ஒரு குறும்புப் படம். அன்புப் படங்களுக்கும் அசுரப் படங்களுக்கும் மத்தியில் வம்புப் படம் (கதை, வசனம், டைரக்ஷன் பாண்டியராஜன்)...

படத்தில் இசையும் நகையோடும் உவகையோடும் நக்கலோடும் வரும் பாருங்கள்... நையாண்டி மேளம் கூத்தடிக்க, குழல் திக்க, திணற, விக்க, விம்ம... இடையில் இளையராஜா காட்டுகிற பாக் (ஆஹுரீட்) ஒரு கணம் கிராமத்துப் பரப்பில் ஓடி மறையும் நவீன ரயிலைப் போல் வந்து போக... ''குயிலே குயிலே பூங்குயிலே! என்றொரு காதல் சம்வாதம்...

மெல்லிசை மோஸ்தரிலே பாடல் நகர்ந்தாலும் மலேசியா வாசுவின் ஒய்யாரமும் சித்ராவின் கிராமப் பாங்கும் ஒரு தோப்போர டிஸ்கஷனை (குருவிக்கரம்பை) நோட்ஸ் எடுத்ததைப் போல் உற்சாகத்தோடு கொப்பளித்துச் செல்லும். இன்னொரு பாட்டில் ''என்னைப் பாடச் சொல்லாதே நான் கண்டபடி பாடிப் புடுவேன்' என்று தாளத்தைக் கவனிக்கும்...

நையாண்டி மேளம் கிராமத்து வானில் அப்பாவியாகத் திரிந்து கொண்டிருக்கும் மேகங்களைப் போய் சீண்டும்... ''தேவாரம் படிச்சோம் திருவாசகம் படிச்சோம்... ''எட்செட்ரா எட்செட்ரா படிச்சோம் என்ன கிழிச்சோம்' என்று அந்த நாளில் பட்டுக்கோட்டை கிழிச்சக் கோட்டை மீண்டும் வாலி கிழிப்பார்... கண்டபடி பாடிப்புடுவேன் என்று எச்சரிக்கிறார் ஜானகி, (இதுவரை) காணாதபடி பாடிப்புடுவார்...

வரப்பிலே தலையெடுத்த களை யெல்லாம்கூட தலை ஆட்டும் போங்கள்... திஸ்ரத்தின் ஜெட் ஸ்பீட் ஓட்டத்திலே... இப்படிப் போற வேகத்திலே, ''இந்திரன் வந்தது சந்திரன் வந்தது இந்த சினிமாதான்' (வைரமுத்து) என்று கோஷ்டியோடு சினிமா மகாத்மியம் பாடுவார் இளையராஜா (ஹீரோக்களுடைய அப்பா கிராமத்தில் ஒரு டூரிங் டாக்கீஸ் நடத்துகிறார்).

''காதல் கசக்குதய்யா' என்று கிளாசிகலைக் கிண்டல் பாணியிலே வண்டல் மண்ணில் அள்ளிவிடுவார் இளையராஜா, டைரக்டரோட மியூசிக் டைரக்டரும் இணைந்து செயல்பட்டால் வைப்ரேஷனே வேற மாதிரி இருக்கும் என்பதைக் காட்டும் படங்களின் வரிசையில் இது குறிப்பிடத்தக்கது.

''காதல் கசக்குதைய்யா'வில் ''இந்தக் கால இளைஞர் செய்யும் காதலுக்கு இளையராஜா என்றன் பாட்டிருக்கு' என்ற இளையராஜாவே பாடும் பாட்டிற்கு, இப்படி எழுதிய புண்ணியத்தை வாலி கட்டிக் கொண்டார் (எம்.ஜி.ஆர். பாடுவதுபோல் வரும் எங்கள் தங்க காலட்சேபத்தில் செற்ந்தரராஜனைப் பற்றி அவரையே பாட வைத்தவர் இல்லையா!).

இந்தக் காலகட்டத்தில் எதிர்திசையில் சென்றார் வைரமுத்து. ''வெட்ட வெளியில் கொட்டிக் கிடக்குது' என்ற நூல் விழாவில், ''இளையராஜாவின் நூலில் காணப்படும் எல்லா கருத்துக்களோடும் எனக்கு உடன்பாடில்லை' என்று தனி ஆவர்த்தனம் வாசித்தார் வைரமுத்து. அது அவருக்கு சில ஆண்டுகள் வனவாசத்தை ஏற்படுத்தியது. தமிழ்ச் சினிமா, அந்த வேளையில், புதிய திசைகளை நோக்கிச் சென்றது..

வியாபார சினிமாவின் சம்பிரதாயங்களைக் கைவிடாமல் யதார்த்தங்களைத் தழுவிய கதைப் போக்கு, காமிரா பாணி.. கலை இயக்கம், நடிப்பு, ஒப்பனை, இசை என்று எல்லாம் ஒரு புதுப் பொலிவுடன் வந்த படம், மணிரத்தினம் இயக்கிய ''நாயகன்' (1987). பம்பாயில் உள்ள தாராவி பகுதி தாதாவின் உண்மை வாழ்க்கையைப் பிரதிபலித்து, கோடம்பாக்கத்து காட்ஃபாதருக்கு மண்வாசம் கொடுத்திருந்தார் இயக்குநர்.. இளையராஜாவின் வித்தியாசமான இசை அமைப்பும் படத்தின் வெற்றிக்குக் கை கொடுத்தன..

நாயகன் (அட, படத்தின் நாயகன்) ஒரு வேசியர் விடுதிக்குச் செல்கிறான்.. அங்கே அமைந்த பாடலைப் பழைய பாணியிலே மெட்டமைத்து, அதை ஜமுனா ராணியையும் எம்.எஸ். ராஜேஸ்வரியையும் பாட வைத்தார். அதில் கிடைத்த ஒரு வண்ணம், ஒரு சூழல் படத்திற்கு மிகவும் உதவியது.. வருங்கால நாயகன் வாழ்வில் மென்மையான பெண்மையின் தென்றல் கலந்துபோது, அது விஸ்ராந்தியான காலப் பிரமாணத்தில் அமீர் கல்யாணியில் ''நீ ஒரு காதல் சங்கீதம்' ஆனது.

மழையின் குதூகலத்தையும் அதன் மூலம் நிலத்தில் பெருகும் படைப்பு சக்தியையும் ''அந்தி மழை மேகம்' என்று கோரஸ் குரல்களின் கோலத்திற்கு நடுவே புள்ளிகளாக்கினார். ஓடப் பாட்டுத்தான்.. ஆனால் கடத்தல் சம்பந்தப்பட்டிருப்பதால் ''பலானது ஓடத்து மேலே' என்று பாடல் அமைந்தது.. ஞானத் தேடலில் இருந்த இளையராஜா, இந்தப் பாடலை எழுதி, இசை அமைத்துப் பாடவும் செய்தார்!

தாராவியில் ''தாராந்து' போகாமல், தீயவர்களுக்குத் தீயவனாய் நல்லவர்களுக்கு நிழலாய் இருக்க முயன்றவனின் கதையின் சோக இழையை, ''தென்பாண்டிச் சீமையிலே, தேரோடும் வீதியிலே, மான்போல வந்தவனை யார் அடித்தாரோ' என்ற வரிகளில், இழந்த குழந்தையின் சோகம் அலைமோதுகிறது.. இதுபோன்ற சோகத்தை வெளிக் காட்டுவதில் வல்லவரான கமலஹாசனை பற்பல ஆண்டுகள் நினைவுபடுத்தப் போகும் நாயகனில் இளையராஜாவின் இசையும் நினைவில் வைத்துக் கொள்ளப்படும்.

இளையராஜா, ஸ்ரீராம், கமலஹாசன், புலமைபித்தன், தோட்டாதரணி என்று பல வண்ண இழைகளை தன் செல்லுலாய்ட் தறியில் நெய்துகாட்டி, தமிழ்ச் சினிமாவின் தொழில்நுட்பத் திறனை வெளிக் கொண்டுவந்த மணிரத்தினமும் நினைவில் கொள்ளப்படுவார்.
சொல்லப் போனால், இந்தக் காலகட்டத்தில் திறமையுள்ள இயக்குநர்களின் படங்களில் இளையராஜாவின் இசை பரிமளித்தது..

தனது திறமைகளைக் கூர்தீட்டித்கொண்டு திரைப்படக் கலையின் நேர்த்திகளைப் பரிமாறுவதில் குறியாயிருந்த மணிரத்தினத்தின் படங்களான அக்னி நட்சத்திரம் (1988), அஞ்சலி (1990) போன்றவை இளையராஜாவின் இசைக்கு பெரும் முக்கியத்துவம் கொடுத்தன.

கடந்த சில ஆண்டுகளாக எம்.டி.வியிலும் வீடிவியிலும் எல்லோருக்கும் காணக் கிடைப்பதை முன்கூட்டியே தமிழ்ச் சினிமா இலக்கணத்தில் மணிரத்தினம் புகுத்த, அந்த வீச்சுக்கு தனது இசைத் தொடுப்புகளை நல்கினார் இளையராஜா. இதெல்லாம் ''மச்சானைப் பாத்தீங்களா'விலிருந்தும், ''கண்ணே கலைமானே'விலிருந்தும் எத்தனைத் தூரம் வந்துவிட்டது திரை இசையின் வளர்ச்சியா தளர்ச்சியா?

காலத்தின் கோலமா கொடுமையா என்று கேட்க வேண்டிய அளவிற்கு, அன்று நுழைந்த மியூசிக் வீடியோவின் தாக்கம் இன்று பெருகிவிட்டது.. காலுக்கு (''ராஜா ராஜாதிராஜன்', ''ஒரு பூங்காவனம்'), கண்ணுக்கு (''ரோஜாப்பூ ஓடி வந்தது'), உணர்வுக்கு (''தூங்காத விழிகள்',- அம்ருதவர்ஷிணி) என்று வெரைட்டியைத் தொட இயக்குநர் மறக்கவில்லை.

தெளிவான கதைப் போக்கு இருந்த டைரக்டர் ஃபாசிலின் படங்களில் இளையராஜாவின் இசையும், அதிகமான ஏசுதாஸின் இணைவும் (அற்புதமான சாகித்தியங்களும் பாவங்களும் அமைந்த நூற்றுக்கணக்கான மலையாளப் பாடல்களை அனுபவித்த எந்த மலையாளியும் ஏசுதாஸ்ஸ மதிக்காமல் இருக்கமாட்டான்.. அந்தச் சுகத்தை தமிழில் விழையாமல் இருக்கமாட்டான்..)

பூவே பூச்சூடவா (1985), வருஷம் 16 (1989) போன்ற ஃபாசில் படங்களில், அழகான இசை கண்ணியமான கதையுடன் கை கோர்த்ததில் ஒரு மகிமை பெற்றது.. (நல்ல கதை தகுந்த இசையுடன் இணைந்ததால் செழுமை பெற்றது. பூவே பூச்சூடவா (பூவே பூச்சூடவா), பழமுதிர்ச் சோலை உனக்காகத்தான்.. (வருஷம் 16), சின்னச் சின்ன ரோஜாப்பூவே (பூவிழி வாசலிலே) முதலியவற்றைக் குறிக்கலாம்.

சண்முகப்பிரியனின் வித்தியாசமான ''ஒருவர் வாழும் ஆலயம்' (1988) என்ற படத்தில், ''உயிரே உயிரே உருகாதே' என்று ஏசுதாஸின் குரலில் அணையும் விளக்கின் பரிதாபத்தைப் பாட்டாக்கியிருந்தார் இளையராஜா. அதே படத்தில், அவருடைய பழைய நண்பர் எஸ்.பி.பி.யின் நளின நடையில் ''சிங்காரப் பெண்ணொருத்தி' பெறும் மெருகை என்னென்பது! (பாடல் பொன்னடியான்).

இப்படி எத்தனை குரல்கள் இளையராஜாவின் தொடுப்பில் விகசித்தன. பாலு, ஏசுதாஸ், ஜானகி என்று உத்திரவாதமுள்ள

வாகனங்களில் அவர் மெட்டுக்கள் பயணம் செய்தன. மலேசியா வாசுதேவனின் ஒலி இந்தப் பட்டறையில்தான் உருப் பெற்றது.

இசை அமைப்பாளர் ஆதவற்கு முன்பே, சுசீலாவுடன் ஒரு கசப்பான சம்பவம் நேர்ந்திருந்தாலும் இருவரும் அதை மறந்துவிட்டார்கள். அரும்பாகி மொட்டாகி பூவாகி (எங்க ஊரு பாட்டுக்காரன் 1988), பூப்பூக்கும் மாசம் (வருஷம் 16- 1988), ராசாத்தி மனசிலே (ராசாவே உன்னை நம்பி 1988) என்று தொடர்ந்த நல்ல பாடல்களை சுசீலாவைப்பாட வைத்துக் கொண்டிருந்தார்.

இன்னொரு 24 காரட் குரலான சித்ராவை தமிழ்ச் சினிமாவில் வலம்வரச் செய்தார். டிராக் பாடகர் மனோ இளையராஜா அலையில் வானில் சஞ்சரிக்க ஆரம்பித்துவிட்டார்!
கால வெள்ளத்தில், 5 கோடி மக்களுக்கு வாய்த்த ஒரே இசையான திரை இசையின் சக்ரவர்த்தியாக செயல்பட்டுக் கொண்டிருந்தார் இளையராஜா.

அந்தப் புத்தாண்டின் கடைசி ஆண்டில், அவரது இசை, நட்சத்திரமாகச் செயல்பட்டு வெற்றி அடைந்த படம், கரகாட்டக் காரன்… அதில் இளையராஜாவே தனது இசை ராஜ்ஜியத்தைப் பற்றி, தம்பி கங்கை அமரனின் வரிகளின் வாயிலாக எடுத்து இயம்பினார்…

பாட்டாலே புத்தி சொன்னார்
பாட்டாலே பத்தி சொன்னார்
பாட்டுக்கு நான் பாடுபட்டேன்-அந்தப்
பாட்டுக்கள் பலவிதம்தான்…

காளையர்கள் காதல் கன்னியரைக் கவர்ந்திட, பாடல் கேட்டார்கள் / ஏழைகளும் ஏவல் அடிமைகளாய் இருப்பதைப் பாடச் சொன்னார்கள் / கதவோரம்கேட்டிடும் கட்டில் பாடலின் மெட்டுப் போடச் சொன்னார்கள் / தெருவோரம் சேர்ந்திட திருவாசகம் தேவாரம் கேட்டார்கள்… / நான் பாடும் பாடுகள், அந்த ஏடுகள் அதில் எழுதினாலும் முடிந்திடாது…
""பூஜையில் குத்துவிளக்கை ஏற்ற வைத்து, அதுதான் நல்லதென்றார்கள் / படத்தின் முதல் பாடலை பாட வைத்து, அது நல்ல ராசி என்றார்கள் / எத்தனையோ பாடுகளை அந்தப் பாடல்களாய் நான் விற்றேன். இதுவரையில் / அத்தனையும் நல்லவையா அவை கெட்டவையா என அறியேன் உண்மையிலே, எனக்குத்தான் தலைவர்கள் என் ரசிகர்கள் / அவர் விரும்பும் வரையில் விருந்து படைப்பேன்''…

ஒரு இசை அமைப்பாளரின் வாக்குமூலம் இது…

**'தளபதி'யில் இணைந்த மும்மூர்த்திகள்**



மாற்றங்களைக் கொண்டு வரப்போகிற பத்தாண்டுகளாக தொண்ணூறுகளின் முதல் ஆண்டு தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டோ அறிவித்துக்கொண்டோ வரவில்லை. ஆனால் இசையில் ஒரு புதிய அலையைத் தனது முந்தானையிலே அது முடிந்துகொண்டுவந்தது.

அதற்கு முன் சில தற்கால மாற்றங்களும் நடந்தேறின.

தன் பழைய இசை அன்பரின் பிரிவை நினைத்து ஏங்கிக்கொண்டிருந்த பாரதிராஜா, "என் உயிர்த் தோழன்' என்று தன் படத்திற்குப் பெயரிட்டார் (சிவாஜியை வரவேற்கும் முகமாக தன் படத்திற்கு, முதல் மரியாதை என்று பெயரிட்டதைப் போல).

தேவேந்திரன் (வேதம் புதிது 1987), ஹம்சலேகா (கொடி பறக்குது 1988) ஆகியவர்களை இசை அமைக்க வைத்த பிறகு--- கொடி பறக்குதுவின் ஒட்டுமொத்த நிராகரிப்பு அவரை அச்சுறுத்தியிருக்க வேண்டும் --மீண்டும் இளையராஜாவுடன் "என் உயிர்த் தோழன்' ஆனார் பாரதிராஜா.

புது முகங்களும் (குறிப்பாக, கட்சித் தொண்டனாக பாபு; பகுதி நேர அரசியல்வாதினியாகவும் மிகுதி நேர விலைமாதாகவும் ரமீலா), சரியான வேடங்களில் நடிக்க வைக்கப்பட்ட பழைய முகங்களும் (தொண்டனின் குடிகார தமக்கையாக வடிவுக்கரசி, பாரதிராஜாவின் வெற்றிகரமான கதைப் பின்னலில் இடம்பெற்று, நகரத்துச் சேரியிலே ஒரு உண்மைத் தொண்டனின் பரிதாப நிலை யதார்த்தமாக வெளிப்பட்டது.

இதில், நுட்பமான காமிரா கோணங்களைப் போலவே நல்ல இசையும் கைகொடுத்தது.

சேரியிலிருந்து கிராமப்புறத்தின் அகன்ற வெளிகளுக்கும் வனங்களுக்கும் இடம் பெயர்ந்த நாடோடித் தென்றலில், பாடல்களைத் தானே எழுதி, இசை அமைத்தார் இளையராஜா (1992). நாடோடிக் கூட்டத்தாருடன், அந்தத் தேன் நிறத்து உயரமான பெண் (ரஞ்சிதா) நடந்து (பறந்து? வழுக்கிக்கொண்டு? அன்னம்போல்?) செல்லும் அழகு, யாரும் விளையாடும் தோட்டம் என்ற பாடலில் எப்படித் துலங்குகிறது.

பாடலை இளையராஜா அமைத்த அழகைச் சொல்வதா, அதை மனக்கண்ணில் தரிசித்து காமிரா கண்ணன் உதவியுடன்

காமிரா கண்ணில் அற்புதமாகப் படம் பிடித்த பாரதிராஜாவின் கற்பனை வளத்தைச் சொல்வதா?

பெண் - ஆவியாகிப்போன நீரும் மேகமாச்சு
மேகநீரும் கீழே வந்து ஏரியாச்சு
ஆறு என்ன ஏரி என்ன நீரு ஒண்ணு
வீடு என்ன காடு என்ன பூமி ஒண்ணு
கடலுக்குள் சேரும் தண்ணி உப்பாகுது

குழுவினர் - ஓ ஹோய்

பெண் - சேராத தாமரைப்பூ தண்ணிபோல
மாறாத எங்க வாழ்வு வானம் போல.

என்று செல்லும் பாடல், நாடோடிப் பெண்ணின் பாட்டாக ஒலித்தாலும், இளையராஜாவின் எண்ணமாகவே எதிரொலிக்கிறது.

எட்ட நின்ற அவர் மனம், உறவுகளை, "சேராத தாமரைப்பூ தண்ணிபோல' என்று அர்த்தப்படுத்திக் கொண்டது போலும்.

எப்படி இருந்தால் என்ன? ஒரு நாடோடிப் பெண், ஒரு நாகரிக வெள்ளைக்காரப் பெண், ஒரு வாலிபன் என்ற படத்தின் முக்கோணம் கலந்துபோன மாக்கோலம் ஆகிவிட்டது. சினிமா உலகத்தில் வெற்றிதான் உறவுகளைச் செப்பனிடும் சிமெண்டு. ஒட்டிவிடும் ஃபெவிகால்.

நாடோடித் தென்றல் நாமகரணம் இல்லாமல் நழுவியபோது, புதுப்பிக்கப்பட்ட உறவுகள் மறுபதிப்பில்லாமல் மறைந்து போயின. தொண்ணுறில் தொடங்கிய பதிற்றாண்டு, முந்தானை முடிச்சை அவிழ்க்கும் தருவாய் வரும் வரை, இந்த விரிசல் வேறு அர்த்தம் பெறக் காத்திருந்தது. எப்படியும் "புது நெல்லு புது நாத்து' வந்தபோது, புது நாயகி சுகன்யாவுக்கு ஒலித்தப் பாடல்கள் ஜீவனுள்ள விலாசம் பெற்றன.

பாரதிராஜா தனது புது நாயகியிடமிருந்து பெற்ற நடிப்பின் காரணமாக. ஆனால் இசையிலும் ஒரு புது கதிர் (கதிரவன்) இணையப்போகிறது என்பதற்கு அந்தப் பெயர் அச்சாரமாகப் போனது.

பாட்டு வாத்தியார், பாட்டுக்காரன், குயில், கூழாங்கல் எட்செட்ரா எட்செட்ரா என்று ஏகப்பட்ட படங்கள் வந்துபோய், பாட்டெதுவும் பலிக்காமல் போனதும் உண்டு. ஆனால், பல்லாயிரம் பாடல் கண்ட பின்னணிப் பாடகரை நாயகனாக நடிக்கவைக்கும்போது, பாட்டு பாஸ்ஆகாமல் போனால் படம் பீஸ் பீஸ் தானே!

ஆனால் எஸ்.பி.பியை ஹீரோவாகப் போட்டு, இளம் டைரக்டர் கேளடி கண்மணி எடுத்தபோது, கேளடி பாடல்களை என்று சொல்லும்படிதான் இருந்தது.

சொல்லி வைத்தப் பாடல்களை வெற்றியடைய வைக்கும் திறமையுள்ளவர்கள் குறைவு. நூற்றுக்கணக்காய் பாடல்கள் போட்டவருக்கு எது ஹிட்டாகும் என்று தெரியாதா என்ன? ஆனால் யாருக்கும், படைப்பும் அது பெறக்கூடிய வரவேற்பும் புதிரானவைதான்.

எஸ்.பி.பிக்கு நல்ல "தம்' உண்டு என்று உலகத்துக்குத் தெரிந்ததுதான். (பாடலைக் கிரகிப்பதில், "ப்ளாட்டிங் பேப்பர்' அதாவது சொல்லிக் கொடுத்த மெட்டை தன்னுடைய சின்ன ரிக்கார்டரில் வாங்கிக்கொண்டு, பதினைந்து நிமிடத்தில் மானிடருக்கு ரெடியாகிவிடும் சுறுசுறுப்பு சுந்தரம் அவர்).

ஆனால் "மூச்சுவிடாத பாடல்' என்று அவர் பாடிய "மண்ணில் இந்தக் காதல் இன்றி யாரும் வாழ்தல் கூடுமோ' ஆச்சரியத்தை மட்டும் அல்ல, ஓரளவு ஆனந்தத்தையும் ஏற்படுத்தியது.

அந்தக்காலத்தில் - அட ஒரு நாற்பது வருஷத்திற்கு முன்புதான் - பாதை தெரியுது பார் என்ற படத்தில் எம்.பி. சீனிவாசன் இசையில் ஜானகி பாடிய தேவாரம் (மாசில் வீணையும் இத்யாதி) என் மனதில் நிழலாடுவது உண்டு. அதனுடன் போய் உட்கார்ந்துகொள்ளப் பார்க்கிறது.

இளையராஜா "கேளடி'யில் அமைத்த திருப்பாவை மெட்டு- மோகனம், நாயகி, காபி ஆகியவற்றில் கச்சிதமாக அமைந்த ராகமாலிகை.

என்னதான் "மண்ணில் இந்தக் காதல்' கீரவாணி என்றாலும், அது "நீ பாதி நான் பாதி' சக்ரவாகமாக இருக்கிற அளவுக்கு கீரவாணி இல்லை! சக்ரவாகத்தை நெற்றியில் ஒட்டிக்கொண்டு வரும் பாட்டு எப்படி சர்க்கரையாய் இனிக்கிறது, பல நாளாய் அறிந்தவரின் முகத்தைப் பார்த்ததும் உண்டாகும் இன்பத்தைப்போல. ராகங்களை இனம் காட்டுவது திரைப்பாட்டின் கடமை இல்லை என்றாலும், உணர்ச்சிக்கு குந்தகம் இல்லாமல் ராகத்தைத் தெரியப்படுத்துவது பெரிய விஷயம் இல்லையா.

ஆர்.வி. உதயகுமார் இயக்கிய கிழக்கு வாசலில், ரேவதி ஏற்ற பாத்திரத்தின் புனிதத்துவம் மனதைத் தொட்டது. என்னதான் காதலையும் காமத்தையும் மனிதன் தேடினாலும், அவற்றைக் கடந்த ஒரு காருண்யமும் கடவுட் தன்மையும்கூட அவனுடைய ரகசிய உட்பொதிந்த தேடல்களாக உள்ளன.

"கபடமில்லாத' கார்த்திக், "பச்சை மலைப் பூவு' என்று ஊஞ்சலில் வீற்றிருக்கும் ரேவதியைப் பார்த்து (எஸ்.பி.பி குரலில்)

பாடும்போது, காதல் பாட்டிற்கான வித்தியாசமான கட்டம், மென்மையான பாடலை இன்னும் மணக்கச் செய்கிறது.

என்ன ஒரு 25 வருடங்களுக்கு முன்பு, கிராமப்பாணியைக் கொஞ்சமாக சேர்த்து, பூவு என்பதைப் பூ என்று சொல்லியிருப்பார்கள். பொதுப்பார்வைக்கு வரும்போது, இயற்கையான பேச்சைக்கூட கொஞ்சம் நாகரிகபடுத்திக் கொடுப்பது அன்றைய பாணி. பின்னாளில் எல்லாமே, குயிலு, மயிலு, வெயிலு என்றாகிவிட்டது,

ஒரு செந்தூரப்பூவேவிற்குக் கூட, கிட்டாரின் ஜொலிப்பான பல்லக்குத் தேவைப்படுகிறபோது, வார்த்தைகளுக்கும் அவ்வப்போது செந்தமிழின் வாசம் கொடுக்கலாம் அல்லவா?

ஒரே ஆண்டு வந்த இரண்டு நிலாப் பாடல்கள். இரண்டும் தர்பாரி கானடாவில் அமைந்தவை. இரண்டிலும் ஏசுதாஸ். அதைத் தவிர இரண்டிலும் கேரள சம்பந்தம். பாசில் எழுதி, இயக்கிய "அரங்கேற்றவேளை'யில், "ஆகாய வெண்ணிலே'வே என்று உமா ரமணனோடு ஏசுதாஸ் பாடினார்.

தயாரிப்பாளர் கோவை செழியன், மலையாள மம்முட்டியை தமிழுக்கு கொண்டு வந்ததும் (மௌனம் சம்மதம்), "கல்யாணத் தேன் நிலா' என்று சித்ராவுடன் ஏசு பாடினார்!

நிலாக் காலத்தில் நேரம் நிறைய இருக்கும் இல்லையா. அதைக் காட்டுவதுபோல், பாடல்கள் சந்திர கிரணங்களில் சாவகாசமான கதியில், மெல்ல நடைபோடும். இந்த வேகம் குறைக்கும் நிதான வழியை, சாலையில் வாகன ஓட்டுனர்கள் கடைபிடித்தால், எத்தனை ஒழுங்காகச் செல்லும் போக்குவரத்து. நகரம் எத்தனை நலம் பெறும்!

ரசிகர்கள் இப்படி எல்லாம் கொடுத்தால் ஏற்பார்கள் என்று அஞ்ச வேண்டிய நிலையில் இல்லை இளையராஜா. நாம் ரசித்ததை அவர்களும் ஏற்பார்கள என்று தைரியமாகச் செயல்பட்டார் அவர். "முன்பு தென்றலை அனுபவித்தோம். இப்போது ஃபேன் காற்றில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்' (ஃபேனா? ஒளிப்பதிவுக் கூடங்களின் ஏ.சி. என்பது இன்னும் சரியாக இருக்குமோ?) என்று நினைக்கத் தோன்றியது இளையராஜாவிற்கு. ஆனால் என்ன செய்வது. அதுதானே வளர்ச்சி?!

பேசாமல், ஃபேனைத் தட்டிவிட்டு, "சொர்க்கமே என்றாலும் நம்மூரைப் போலாகுமா' என்று பாட ஆரம்பித்துவிட்டார் (ஊரு விட்டு ஊரு வந்து).

நம்ம ஊர் ஜேம்ஸ் பாண்டாக முயற்சி செய்து, கமலஹாசனுக்கு அது அவ்வளவாகப் பலிக்காமல் போனது (விக்ரம் 1986). ஏவி.எம். எடுத்த "பேர் சொல்லும் பிள்ளை'யில் (1987) அவர் மனம் ஒன்றவில்லை. "பேசும் படம்' (1987) பேசாத படமாக அமைந்து, திறமைக்குச் சவால் விட்டது. தானே தயாரித்த "சத்யா'வில் (1988), திருப்தியும் நிறைவும் கிடைத்தது.

தயாரிப்புடன், திரைக்கதையும் மூன்று வேடங்களும், வழக்கமான பழிவாங்கல் கதையில், சாப்ளினின் காதல் சோகமும் அமைந்த அபூர்வ சகோதரர்களில் கமலஹானுக்கு மாபெரும் வரவேற்பும் வெற்றியும் கிட்டியது.

இதிலெல்லாம், பேசும் படம் தவிர, இசையாக இருந்தவர் இளையராஜா. சத்யாவிற்கு, லதா (மங்கேஷ்கர் பெயருடையவர்தான்) வந்து "வளையோசை கலகலவென' எனப் பாடி, இளையராஜாவின் இசைத் திறமைக்கு புகழுரை சூட்டிச் சென்றது எப்படி மறக்க முடியும்?

மூவர், பஞ்சு அருணாசலத்தின் மைக்கேல்மதனகாமராஜனில் நால்வர் ஆனபோது, அந்த நாள் பொன் மாலைப் பொழுதின் கேதாரத்தில், "சுந்தரி நீயும் சுந்தரன் ஞானும்' என்னு பாலக்காட்டுக்காரா பாடினது பாந்தமாகத்தன்னே இருந்தது. அபூர்வ ராகங்களைப் பயன்படுத்தி, எல்லோரும் அனுபவிக்கக்கூடிய வகையில் கொடுப்பதில் மீண்டும் வெற்றி (1990).

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதற்கு ஒப்ப, ஒரு அப்பாவியின் வாழ்க்கையில் அபிராமியின் மணத்தையும் குங்குமத்தின் நிறத்தையும் முதலில் காட்டி, விபரீதங்கள் குறுக்கிடும்போது மகாகாளியின் கோரத்தாண்டவத்தையும் குருதியின் பெருக்கையும் காட்டுகிறது "குணா' (1991). அந்நாளில் பாட்டுக்குள் வீடுகட்டும், அளவிற்கு பாண்டித்யம் இருந்த எஸ். வரலட்சுமியை, வயதுக்கு ஏற்ப அளவோடு, "உன்னை நான் அறிவேன்' என்று வேலை வாங்கிக்கொண்டார் இளையராஜா.

தனது மலைப்பிரசங்கத்தில் (உச்சக்கட்டத்தில் அங்குதான் ரத்தக்களறி நடந்தேறுகிறது), குணா வடிக்கும் காதல் மடல் நமது காது மடல்களுக்கு மேஜர் ஸ்கேலில் "கண்மணி அன்போடு' என்று வருவதில் ஒரு எளிமையான லாகவம். (இதே மேஜர் ஸ்கேலில்தான் வரும், "எங்க ஊரு காதலைப் பத்தி என்ன நினைக்கிற' என்று கேட்கிற "புதுபாட்டு' பாடலும். இதே படத்தில் ஜானகி குரலில் ஒரு ஜெர்மன் பாடலை கொடுத்தார் இளையராஜா)!

சூப்பர் டைரக்டராக உருவாகிய மணிரத்னம், சூப்பர் ஸ்டாரான ரஜினிகாந்தை முதன் முதலில் தளபதியில் தீண்டியபோது, தோட்டாதரணி (கலை), சந்தோஷ் சிவன் (காமிரா கலை) ஆகிய "கண்' கலை (அல்லது நுண்கலை) நிபுணர்களுக்கு உறுதுணையாக இருந்தவர், "பண்'கலை நிபுணரான இளையராஜாதான்.

"அடி ராக்கம்மா' என்று இடுப்புகளை ஒடிக்க வைத்து, அதனுடன் உடுக்கைக்குள் ஒடுக்கும் இடுப்புக்காரனான நடராஜனின் குனித்தப் புருவமும் என்ற தேவாரத்தைப் புகுத்திவிடும் நேர்த்தி அபாரம்!

இந்த சந்நிவேஷம் சினிமாவில் மட்டுமே சாத்தியம். இத்தனைக்கும், இந்தப் பாட்டுக்கு பி.பி.சி. நேயர்களின் மரியாதையும் பரிசும் பல ஆண்டுகள் கழித்து இப்போது கிடைத்திருப்பது பி.பி.சியின் பக்குவத்தையும் அல்லவா காட்டுகிறது!

ஆனால் தளபதிக்குப் பிறகு மணிரத்னம் - இளையராஜா கூட்டு விடுபட்டு, வேறு புதிய வியூகங்கள் விளையும். இது தொடர்பாக திரைமகள் தன் முந்தானை முடிச்சை அவிழ்க்கும் தருவாயில் இருந்தாள்!

*கல்லூரிக் காதலாக இருந்தாலும் (கண்ணீர் ரகம் - இதயம் 1991; காரில் போகும் ரகம் - ஈரமான ரோஜாவே 1991), கிராமத்து காதல் என்றாலும் (சின்னத்தம்பி 1991) வெற்றியின் வாசற்படியைத் தொடும் வார்ப்புகளைத் தன்னால் சிருஷ்டிக்க முடியும் என்று காட்டிக்கொண்டிருந்தார் இளையராஜா.*

*பெரிய நட்சத்திர பவனி இல்லாத இந்தப் படங்களும் அவற்றின் பாடல்களும் முழக்கமிட்டதற்கு முக்கிய காரணம் அவரது இசை என்கிற அளவிற்கு ரசனைகள் இன்னும் அவர் கைப்பிடிக்குள் இருந்தன.*

*"பாட்டெடுத்து நான் படிச்சா காட்டருவி கண் உறங்கும்*
*பட்ட மரம் பூப்பூக்கும் பாறையிலே நீர் சுரக்கும்*
*ராகமென்ன தாளமென்ன அறிஞ்சா நான் படிச்சேன்*
*ஏழுகட்டை எட்டுகட்டை தெரிஞ்சா நான் படிச்சேன்*
*நான் படைச்ச ஞானமெல்லாம் யார்கொடுத்தா சாமிதான்*
*ஏடெடுத்துப் படிச்சதில்லை சாட்சி இந்தப் பூமிதான்'*

*என்று சின்னத்தம்பியின் நாயகனுக்கு மட்டும் வாலி எழுதியிருந்தால், பாடலில் இவ்வளவு எச்சி ஊறியிருக்காதே!*

*ஆனால் கிளாசிகல் கிட்டாரின் மேல் படிப்பில் லண்டன் டிரினிட்டி கல்லூரியின் தேர்வில் பொற்பதக்கத்துடன் வெற்றியடைந்தவரை நிச்சயம் படிக்காத மேதை என்று கூறிவிடமுடியாது. (அதனால் படித்ததால்தான் மேதை என்று கூறிவிட முடியும் என்று பொருள் அல்ல).*

*நகர்புறக் காதலுக்கும் (ஈரமான ரோஜாவே) நாட்டுப்புறக் காதலுக்கும் (சின்ன தம்பி) இசைத் தொடுப்பிலே கிடைத்த மாற்றங்களைக் கவனித்து இன்புற்றால், சின்னத்தம்பிக்கும் "ஈரமான ரோஜாவே'வில் காதலிக்கும் சின்ன தம்பிக்கும் (சிவா) உள்ள வேறுபாடு புரியும்!*

*சின்னதம்பியின் வெற்றிக்குக் காரணம், படத்தின் நாயகியா (ஒரு படத்தில் வடிவேலு உச்சரித்ததைப் போல - குஸ ன் பு), திரைக்கதையா, இயக்குநரின் சாமர்த்தியமா என்பதோடுகூட பொருத்தமான பாட்டால் கிடைத்த ஒளிவட்டம் சேர்த்து எண்ணத்தக்கது.*

*இதற்கிடையில், இசையின் முதன்மையை (நட்சத்திர ஆதிக்கத்தை இணைத்துப் பார்க்கையில்) நிறுவுகிற ஒரு படம் வந்தது. படத்தின் பெயர் "என் ராசாவின் மனசிலே'. கிராமம், ஊர் கட்டுப்பாடு இன்ன பிறவற்றைப் பார்த்து புளித்துப்போனதற்கு மருந்தாக, ஒரு அம்மானைக் கதையாக (கூஹைப்ஹைக் ர்ஹைப்ங்) சோக நாயன் ஒருவனின் சரிதத்தைச் சொன்ன படம். அது, பிரபலமடையாத தயாரிப்பாளர் ராஜ்கிரணின் நடிப்பில் வந்ததால், இளையராஜாவின் இசையும் பெயரும் முதன்மை பெற்றது.*

*சிங்காரவேலனுக்கு, "இன்னும் என்ன செய்யப் போகிறாய்' மன்னனுக்கு பண்டரிபாயின் தாய்மை முகத்தை ரஜினிகாந்துடன் கல்யாணி ராகத்தில் தாய் - சேய் பிம்பமாக்கிய "அம்மா என்றழைக்காத உயிர் இல்லையே', மளையாளத் "தகரா'வை "ஆவாரம் பூ வாக்கி, கடலலையோடும் மணலோடும் நந்தினியின் இளமைப் பூரிப்போடும் வினீத்தின் குழந்தைமையோடும் பரதன் தந்த "நதியோரம்' (சோகம் இழையோடும் ஒரு ஜானகி பாடல்). திரையில் உயர்த்துடிப்பை நல்கிய பாடல்கள் வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தன.*

*யாருடைய கண்ணையும் பளிச்சென்று கவராமல், தொண்ணூறாம் ஆண்டு அவிழ்ந்த முடிச்சுக்கு வருவோம். பதினான்கு ஆண்டுகள் திரை வாய்ப்புகளுக்காகப் போராடிவிட்டு, 1990ல் வைகாசிப் பொறந்தாச்சு என்று வந்தார் தேவா. மூன்றே ஆண்டில் 75 படங்கள் செய்யப்போகும் வாயிலில் இருந்தார்.*

*இன்னொருவர், திரை உலகில் எத்தனையோ இசை அமைப்பாளர்களுக்குப் பக்கபலமாக இருந்து, ஓரிரு மலையாளப் படங்களுக்கு இசை அமைத்து, திரை இசைத் துறையிலே ஞானஸ்தர் என்று பெயர் பெற்றாலும் மக்கள் மத்தியிலே பேர் வாங்காத ஆர்.கே. சேகர் என்பவரின் மகனான திலீப் என்ற ஏ.ஆர் ரஹ்மான்.*

*சுயேச்சையான ஒரு கலைஞனின் உள் உலகத்தை யாருடைய வருகையும் விலகுதலும் பாதிக்காது என்பது உண்மையானாலும், திரை உலக மாறுதல்களும் திரை இசைத் தொனியில் மாற்றங்களும், அதே உலகத்தில் உள்ள இன்னொருவரின் செல்வாக்கை மாற்றத்தானே செய்யும் "கால வகையினானே நிகழ்கிற' இவை, இளையராஜாவையும் எதிர்கொண்டன.*

***இசை சரித்திரம் தொடரும்***

*இளையராஜாவின் இசை வெற்றிகரமாக அமைந்த மௌனராகம், (1986), நாயகன் (1987), அக்னி நட்சத்திரம் (1988), அஞ்சலி (1990), தளபதி (1991) முதலிய படங்களை இயக்கிய மணிரத்னத்தின் இயக்கம்...*

*சிந்து பைரவி (1985) என்ற இசைச் சித்திரத்தை இயக்கிய கே. பாலசந்தரின், தயாரிப்பு... இப்படி இவர்கள் இணைந்த படமான "ரோஜா'விற்கு இசை அமைப்போ, அது நாள் வரை அவர்களின் மகிமை பொருந்திய இசை அமைப்பாளரான இளையராஜா இல்லை...*

*சினிமாவே வேண்டாம் என்று சின்னத்திரை விளம்பரங்களில் 30 செகண்டு சித்துவிளையாடல் புரிந்து கொண்டிருந்த ஏ.ஆர். ரஹ்மான்!*

*சின்னத் திரையின் சுவீகார புத்திரராக, ஒரு புதிய மீடியத்திற்கான இசையின் நெளிவு சுளிவுகளை கையகப்படுத்திவிட்ட நிலையில், கீபோர்டை தன் காண்டீபமாக உயர்த்திப் பிடித்தபடி, ரோஜாவின் இசை அமைப்பாளர் காட்சி கொடுத்தார்.*



எழுபத்து ஆறில் மச்சானைப் பாத்தீங்களா முழங்கியதைப் போல், ''சின்ன சின்ன ஆசை' நாடெங்கிலும் ரீங்காரம் செய்தது. அறுபதுகளின் கடைசி ஆண்டுகளில் ஜமைக்காவின் கறுப்பர்கள் பாட்டாக இருந்து, எழுபதுகளில் உலக இசை அரங்கத்திலே இடம் பிடிக்க ஆரம்பித்துவிட்ட ''ரெக்கெ'யின் தாளக்கட்டிலே வந்த அந்தப் பாடலில், பாட்டு வரிகள் தெளிவாக இருந்தன. படமும் பாடலும் தமிழில் மட்டும் அல்ல, இந்தியிலும் மிகப் பெரிய வெற்றி அடைந்தன.

சின்ன சின்ன ஆசை, ''சோடி ஸி ஆஷா'வாகி உபகண்டத்தையும் அதைத் தாண்டி இந்தியர் கூறு உலகத்தையும் உபத்திரவப்படுத்தியது!

இன்னொரு பக்கம், நூற்றுக்கணக்கில் பக்திப் பாடல்களுக்கு இசை அமைத்த அனுபவத்துடனும், இசை தெரிந்த தம்பிகளின் பக்கபலத்துடனும் வாயப்புகளை வாரிக்கொள்ள ஆயத்தமாகவிருந்தார் தேவா.

இவை எல்லாம் இளையராஜாவிற்கு உடனடியான எந்தப் பாதிப்புகளையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், இனி அவர் திரை இசையின் ஏகச் சக்ராதிபதி அல்ல என்பதை மறைமுகமாகச் சுட்டும் சில நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருந்தன.

தமிழ்நாடு அரசு உதவியுடன் எடுக்கப்பட்ட ''நீங்க நல்லா இருக்கணும்' (1992) என்ற படம் தொடர்பான நிகழ்ச்சி, பிரசாத் ஸ்டூடியோவில் நடந்தது. அதில் அந்நாளைய முதல் அமைச்சர் கலந்து கொண்டார். பிரசாத்தில் தனி அறையும் காலை ஏழிலிருந்து பாடல் பதிவுகளும் கொண்டிருந்த இளையராஜா, நிகழ்ச்சிக்கான கெடுபிடிகளால் ஏதோ ஒரு வகையில் அசெளகரியத்திற்கு ஆளாகியிருக்க வேண்டும்.

இந்தக் கால கட்டத்தில், இளையராஜாவின் திரைப்பாடல்களை காசெட்டுகளாக வெளியிடும் ஒப்பந்தத்தை அவருடன் செய்து கொண்டது ஏ.வி.எம். நிறுவனம். தனது பாடல் பதிவுகளையும் ஏ.வி.எம்.மிலேயே செய்து கொள்ளலாம் என்று அந்த ஸ்டூடியோவிற்குக் குடிபெயர்ந்தார் இளையராஜா.

ஏ.வி.எம். ரஜினிகாந்தை வைத்து, ஆர்.வி. உதயகுமாரின் இயக்கத்தில் எடுத்த எஜமானனுக்கு சில உருப்படியான பாடல்கள் கிடைத்தன (ஒருநாளும் உனை மறவாத, ஆலப்போல் வேலப்போல், நிலவே முகம் காட்டு, எஜமான் காலடி மண்ணெடுத்து). எஜமானுக்கு ஒரு அதிர்ஷ்டம் அடித்தது… பல பிரச்சினைகளில் சிக்கிய திரை உலகம் ஸ்தம்பித்த நிலையில், அதற்குப் போட்டியாக படங்கள் வரவில்லை. ஒலிநாடாக்கள் மூலம் எங்கும் ஒலித்த பாடல்கள், படத்திற்குக் கூடுதல் ஓட்டத்தைக் கொடுத்தன.

இதைத் தொடர்ந்து இளையராஜா இசை அமைத்த ''வீரா' அவருக்கு அந்தக் காலத்தில் நல்ல பெயரை ஏற்படுத்தியது. ''கொஞ்சி கொஞ்சி அலைகள் ஆட' (எஸ்.பி.பி.) ''மலைக்கோயில் வாசலிலே' (மனோ, ஸ்வர்ணலதா) ஆகிய பாடல்கள் வெற்றியடைந்தன. ஏராளமான தோல்விப் படங்களுக்கு இடையே (அதற்கு இசை அமைப்பாளர் மட்டுமே காரணம் அல்ல), ''கலைஞன்', ''ராஜகுமாரன்' முதலிய படங்களின் ஒலிநாடாக்கள் ஓரளவிற்கு விற்பனையாகியிருந்தன.

இவற்றைத் தொடர்ந்து வந்த எஜமானும், ''வீரா'வும் நல்ல நம்பிக்கையை ஏற்படுத்தின. ரோஜா, ஜென்டில்மேன் முதலிய ரஹ்மானின் பெரிய ஹிட் படங்களுக்குப் பிறகு, இளையராஜா இசை அமைத்த ''வீரா' பாடல்களின் வெற்றியாலும் காசெட் விற்பனையாலும் இளையாராஜாவின் ஈர்ப்பு தொடர்ந்து கணிசமாக இருப்பதை உணர்த்தியது. அப்படித்தான் இசை உலகத்தில் இருந்தவர்கள் எண்ணினார்கள்.

இந்தக் கால கட்டத்தில், படங்களில் அமைந்த சில அம்சமான பாடல்களை, நான் கேட்ட வரை குறிக்கிறேன். மறுபடியும் (ஆசை அதிகம் வச்சு நலம் வாழ, நல்லதோர் வீணை செய்தே), பொன்னுமணி நெஞ்சுக்குள்ளே), சின்ன மாப்பிள்ளை (காதோரம் லோலாக்கு)…

ஆனால் இவை எல்லாம் இளையராஜாவிற்கு தொடர்ந்து பண்ணிக்கொண்டு வந்த செயல்பாடுகளாகவே தெரிந்தன…

அவர் ஒரு சில ஆண்டுகளுக்குப் பின் ஒரு பேட்டியில் சொன்னதுபோல… """இங்கு வருகிற லவ் டூயட்டில்… என்ன வெரைட்டி கொடுக்க முடியும்..? என்ன புதுமை செய்துவிட முடியும்? இங்கே ஒரு சிந்தனையாளன் தேவை இல்லை… ஒரு மெக்கானிகல் ரீபுரொடக்ஷன் செய்கிற ஆள் போதும்…''

இத்தகைய மனோநிலையிலும், புதிதாக முளைத்திருந்த போட்டியாளர்களுக்குத் தனது இசைஞான தரிசனத்தின் விஸ்தீர்ணத்தையும் விலாசத்தையும் காட்டவும், அவர் சிம்போனி நம்பர் 1ல் இறங்கியிருந்தார்.

கமலஹாசனும் ரஜினிகாந்தும் புடைசூழ, என்றும் இல்லாத திருநாளாய் அவர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, லண்டன் ராயல் ஃபில்ஹார்மோனிக் ஆர்கெஸ்டிரா வாசிக்கப் போகும் சிம்போனியை சிருஷ்டிப்பதாக அறிவித்தார். சன்னியாசம் கொண்டுவிட்டார், சினிமா உலகத்தைக் கை கழுவி விட்டார் என்றெல்லாம் வதந்திகள் உலவ, ஒரு மாதம் தனிமையில் இருந்து அதை முடித்திருந்தார்.

"""மூன்று சிம்போனிகளுக்கான இசையை எழுதினேன். மூன்றையும் வேண்டாம் என்று விட்டு, நான்காவதை அனுப்பினேன்''

என்றார்.

வாத்தியக் கலைஞர்களை நடத்திச் சென்ற கண்டக்டர் ஜான் ஸ்காட் தனது கோலை தூக்கி ஆட்டி, "தொடங்குங்கள்' என்ற சமிக்ஞை செய்த பின், திடீரென்று இளையராஜா அவரை நிறுத்தச் சொன்னார்.

தேங்காய் மீது கற்பூரம் ஏற்றி வைத்து, தான் கண்ணில் ஒற்றிக்கொண்ட பின்தான், வாசிப்பும் ஒலிப்பதிவும் மீண்டும் தொடர்ந்தது. லண்டன் மாநகரில், அதுவும் மேற்கத்திய இசையின் மணிமுடியான சிம்போனி, பதிவு செய்யப்படும்போதுகூட, அவர் தனது நம்பிக்கையை விடவில்லை. அதுதான் அவரைக் காப்பாற்ற வேண்டும்.

சிம்போனியை சிருஷ்டித்து, சரித்திரம் படைத்துவிட்ட தமிழராக இளையராஜா பரிணமித்ததால், திரைப்பட சங்கத்திலிருந்து ஜாதி சங்கம் வரை சகலதும் பெருமைப்பட்டுக் கொண்டன. கோடி ரூபாய் கனவை ஈடுகட்ட அவை உதவுமா என்ன?

மாய்ஸ்டிரோ என்ற புகழுடன் தான் அவர் 94ல் வந்த பல படங்களுக்கு இசை அமைத்திருந்தார். மகாநதி, மகளிர் மட்டும் ஆகியவை கவனத்தைக் கவர்ந்தன. மற்றபடி இளையராஜா இசை அமைத்த சுமார் பதினைந்து படங்களில் படத்திற்கு ஒன்றிரண்டு ஓரளவுக்கேனும் ஓசை நயம் இல்லாமல் போகுமா...

ஐ.ஏ.எஸ். அதிகாரியாக இருந்துகொண்டு, திரைப்பட இயக்கத்தையும் செய்து வரும் ஞானராஜசேகரன் அந்தக் கால தஞ்சை தரணியில் சங்கீத மணம் கமழும் தி. ஜானகிராமனின் "மோகமுள்' நாவலைப் படமாக்கினார். இந்தப் படத்திற்கு இளையராஜா அமைத்தப் பாடல்கள் பெரிய ஹிட்டாகவில்லை என்றாலும், கனமான படத்திற்கு ஏதுவான இசை வார்ப்பாக அமைந்தன.

பாடல்களுக்கு இளையராஜா தேர்ந்தெடுத்த ராகங்களும் (கமலம்- ராமப்ரியா; நெஞ்சே குருநாதரின்- நாடகப்பிரியா) அபூர்வமான தேர்வுகளாக இருந்தன. "அபூர்வ ராகங்கள்' என்று படப் பெயரின் காரணமாக அபூர்வ ராகத்தைத் தேடினாலும் (மஹதி), பிரதானமாக ஜனரஞ்சகத்தைத் தேடியதால் அதிலும் அந்நிய ஸ்வரப் பிரயோகங்களைக் கொண்டு வந்து, அபூர்வ ராகத்தை அவ்வளவு அபூர்வமாக இல்லாத "வலஜி'க்கு கொண்டு சென்றது முந்திய அணுகுமுறை... ஆனால் இளையராஜாவோ தன் தேடலில் அபூர்வங்களை நாடி அஞ்சவில்லை.

அத்துடன் காலத்திற்கு ஏற்ற புதிய தொனிகளிலும் அவர் நுழைய முயற்சி செய்து கொண்டிருந்தார். அவதாரம் (நாஸரின் வித்தியாசமான படம்), நந்தவனத் தேரு, ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரி, கோலங்கள், மாயா பஜார், பாட்டுப் பாடவா, ராசய்யா, சதி லீலாவதி என்ற பட்டியலின் பாட்டியல் ஸ்வாரஸ்யமானது...

"வந்தாள் வந்தாள் ராஜகுமாரி', "ஒரு மைனா குஞ்சு' (ஒரு ஊரில் ஒரு ராஜகுமாரி), "ஒரு கூட்டில்' (கோலங்கள்), "நான் பிறந்து வந்தது' (மாயா பஜார்), "தில் தில்', "பூங்காற்றிலே' (பாட்டுப் பாட வா), "மஸ்தானா' (ராசய்யா) என்று இளையராஜா தொடுத்த பாடல்களில், வித்தியாசமான இசைச் சேர்க்கைகளை அலசுவதில் அவர் ஈடுபட்டிருந்தார்.

உதாரணத்திற்கு, "மஸ்தானா மஸ்தானா, நீதான் என்க்கு மச்சானா, யெஸ்தானா யெஸ்தானா, என் கேள்விக்குப் பதிலும் எஸ்தானா...' என்று குறும்புத்தனமான விளையாட்டு வரிகளும் துள்ளல் நடையில் வரும் பாடலின் குரல் தேர்வும் (பவதாரிணி, அருண்மொழி), அதன் ஒய்யார சதிராட்டத்திற்கு ஒரு வீச்சை அளிக்கின்றன. குறிப்பாக, இளையராஜாவின் மகளின் குரல் விசேஷமும், பாடலை விட்டேத்தியாகப் பாடும் பாணியும் மஸ்தானாவிற்கு மஸ்த் ஏற்றுகின்றன.

வீ.டிவி. எம்.டிவி. வகையறாவை ரஹ்மான் நம்ம தொழிற்பேட்டையில் வெற்றிகரமாக வார்த்தெடுக்கத் தொடங்கிய பின்னர், தொனியில் வித்தியாசம் அத்தியாவசியம் என்ற நிர்ப்பந்தம் தெரிகிறது. புதிய குரல்கள், பம்பாயிலிருந்து இறக்குமதிகள் புதிய பூச்சுக்குத் தேவைப்படுகின்றன.

எப்படி என்றாலும், ஒரு பாரம்பரிய ராகத்தை (தர்பாரி கானடா) துணைக்கழைத்து, "மாருகோ மாருகோ' என்று "சதி லீலாவதி'யில் ஹாஸ்யமாகக் கதைக்கும்போது, ஜில் தண்ணியும் வெந்நீரும் தேவைக்கேற்றபடி கலந்துகொண்டு மார்கோவில் நீராடும் உணர்வு ஏற்படுகிறது.

தென்றலைப் போல் புதிய தந்திகளில் நாதம் வீச... (கம்ப்யூட்டரின் குளுமையிலிருந்து), சித்ராவின் சீனி சர்க்கரைக் குரல் "இந்தப் பூவிற்கொரு அரசன்' என்று ஒலிப்பதும் (உடன் எஸ்.பி.பி. -பூவரசன் 1996), "பொட்டுவச்ச கிளியே' என்று அதே படத்தில் பாலுவின் கொண்டாட்டப் பாணிக்கு கோரஸ் குரல்களின் தோரணம் கட்டி, நெய்யாண்டி மேளமுழக்குகளுடன் வரவேற்பு நல்குவதும், காட்சிக்கு ஏற்ற போக்குகளாக மட்டும் தோன்றவில்லை. அவை புதிய சூழ்நிலையை சோதனை செய்துபார்க்க விடப்படும் பரீட்சார்த்தப் பாடல்களாகத் தோன்றுகின்றன.

ஆனால் தமிழ்நாட்டில் சென்ற அரை நூற்றாண்டாக ஒரு போக்கு... கதாபாத்திர, நட்சத்திர, மற்றும் திரைப்படப் பின்னணி இல்லாமல் எந்தப் பாடலும் பூரணமாக ஜெயிப்பதில்லை. ஐம்பதுக்கு முன்னால், கிராமபோன் இசைத்தட்டுக்கள் வாயிலாக தனிப் பாடல்களுக்குக் கிடைத்த மகத்துவம் பின்னர் கிடைக்கவில்லை... (சினிமாவில் புகழ்பெற்ற ஒரு சில பாடகர்களின் பக்திப் பாடல்கள் ஏற்கப்பட்டன).

இன்றைக்கு, ஆல்பம் பப்ளிகம் என்று யார் என்ன கொக்கரித்தாலும் அது சினிமாவிற்கான அறிமுகமாக இருக்குமே தவிர, ஆல்பம் வந்தது ஆல் போல் வளர்ந்தது என்ற சங்கதி இல்லை... இதை இசைக் கம்பெனிகள் கையைச் சுட்டுக்கொண்டு உணர்ந்திருக்கின்றன.

என்ன சொல்ல வந்தேன் என்றால், நல்ல திரைப்பாடல்கூட, நல்ல கதை, கதாபாத்திரம், அதில் தோயும் நடிக- நடிகையர் இல்லாமல் பெரிய வெற்றி அடைவதில்லை... மலர்ந்தும் மலராத பாடலுக்கு சிவாஜி- சாவித்திரி அபிநயிக்காமல் அந்த நாள் நாயகர் ஸ்ரீராமும் உபநாயகி வேறு யாராவதும் நடித்திருந்தால் இந்த அளவிற்கு மனதில் நிற்குமா?

கதைக்கும், கதாபாத்திரத்திற்கும் முக்கியத்துவம் கொடுத்த ஃபாசிலின் படங்களில், இளையராஜாவின் இசை மீண்டும் அலைமீது ஆரோகணித்தது… இளமை, காதல் இவையெல்லாம் அர்த்தம் பெறவேண்டும் என்றால், காதல் கட்டாந்தரையிலே புரளாமல் வளமானதாக இருக்க வேண்டும் என்றால், அது பண்பாட்டிலே வேர்விட வேண்டும், "காதலுக்கு மரியாதை' (1997) வர வேண்டும் என்று கதை சொன்னார் ஃபாசில். அதனால்தான், "என்னைத் தாலாட்ட வருவாளா…' என்று கஸல் பாடகர் ஹரிஹரன் பாடியது இன்னும் கவனத்தை ஈர்த்தது…

மேற்கூறிய கதைப் போக்கும் அதை ஓரளவிற்கு தாங்கிப் பிடிக்கிற திரைக்கதையும் மற்ற அமைப்புகளும் இல்லாத படத்தில் அது இடம் பெற்றிருந்தாலும் பாடல் ஈர்த்திருக்குகம், ஆனால ஏதாவதொரு ஆழமான அனாதைப் போல் தோற்றம் கொடுத்திருக்கும்.

நெய்க்குத் தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா என்று மூலமுதற் கேள்விக்கு பதில், இக்கட்டான சூழ்நிலையில் தெரிந்துவிடும் அல்லவா? எந்த இசைச் சித்திரமும் திரைச்சுவர் இல்லாமல் பரிமளிக்காது (தமிழ்நாடச்டுச் தழலில் என்று தெரிந்துவிடும் அல்லவா?…''

இளையராஜாவின் இசையைத் தாங்கிவர, ஒரு சிலர் ஆவலுடனும் கலை ஆர்வத்துடனும் முன்வந்தார்கள்… (அதற்குள் இளையராஜாவின் மூத்த மகன் கார்த்திக் ராஜாவும், இளைய மகன் யுவன்சங்கர் ராஜாவும் சுயேச்சையாக இசையமைப்பில் இறங்கிவிட்டார்கள்… தேவதையில் மீண்டும் தயாரிப்பாளர், இயக்குநர், கதை வசனகர்த்தா என்று அவதாரம் எடுத்தார் நடிகர் நாசர்.

சிறந்த பின்னணி இசை, உணர்ச்சியோட்டம் உள்ள பாடல்கள் (ஒருநாள்- எஸ். ஜானகி) என்று அமைந்தாலும், படம் தேறாமல் போனால் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிவிடும்… ஆனால் ஒரு நல்ல இசையமைப்பாளருக்கு, அதுவும் தன்னை நவீனப்படுத்திக் கொள்ள முயன்று கொண்டிருக்கும் இசை அமைப்பாளருக்கு எல்லாம் ஒரு ஒத்திகை போலத்தான்.

"கிழக்கும் மேற்கும்' (1998- கத்தும் குயிலே- சாதான சர்கம்), "பூந்தோட்டம்' (1998- மீட்டாத ஒரு வீணை- ஹரிஹரன் மகாலட்சுமி… சம்பிரதாய வண்ணம் என்றாலும், அதை தொண்ணூறுகளின் சாயத்திற்கு ஏற்ப நவீன தொழில்நுட்பக் குளிர்ச்சிகளோடு தொடுப்பதில் இளயைராஜா ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை உணர முடிகிறது…)

"வீரத் தாலாட்டு' (1998- படிக்கட்டுமா- ஜானகியின் அபாரமான நாட்டுப்புற உச்சரிப்பிற்கு இன்னொரு எடுத்துக்காட்டு) முதலிய படங்களுடன் இளையராஜா செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

இதற்குள், பெருவாரியான திரைப்பாடல்கள் குரூப் டான்சுகளாகவும் டான்ஸ் மாஸ்டர்களின் கற்பனைக்கு உட்பட்டவையாகவும் வரத் தொடங்கின.

மனம் விரும்புதே உன்னை, டைம், காதல் கவிதை, ராஜஸ்தான் ஆகிய 1999ன் படங்களுக்கு இடையே, "சேது' வந்தது. ஒரு முரட்டு கல்லூரி மாணவன் காதல் ஸ்பரிசத்தில் முறிந்துபோன கதையை, இயக்குனரும் (பாலா), நடிகரும் (விக்ரம்) உயிர்ப்பித்தார்கள். இந்தப் படைப்பு வட்டத்தில் இளையராஜாவின் இசையும் நாதபிந்துவாக நர்த்தனமிட்டது.

கல்லூரி வாலிபர்களின் கொண்டாட்டம் என்றாலும் (சிக்காத சிட்டு), கல்லூரி வாலிபியின் அலட்சியம் என்றாலும் (காதல் என்ன), மூட் ஏற்படுத்தும் பின்னணிப் பாடல் என்றாலும் (கானக் குருங்குயிலே), காதலின் ஏக்கத்தைச் சொல்வதானாலும் (மாலை ஏன் வேதனையை), கல்லூரித் தேர்தல் கோஷம் என்றாலும் (அண்ணன் சேதுவிற்கு)… அனைத்தும் பாலாவும் விக்ரமும் பிரவேசித்த உலகத்தின் மூர்ச்சனைகளை சரியாகத் தொட்டன.

இரண்டாயிரம் ஆண்டிற்கு கமலஹாசன் சமர்ப்பித்த "ஹே ராம்' வெற்றிபெறவில்லை. ஆனால் அது மூன்று தேசிய விருதுகள் (உடை, ஸ்பெஷல் எஃபெக்ட்ஸ், துணை நடிகர்) பெற்றது.

"உலகிலேயே மிகச் சிறந்த முறையிலே ரீ ரிக்கார்டிங் செய்த இளையராஜாவிற்கு விருது கிடைக்கவில்லையே' என்று ஆதங்கப்பட்டார் கமலஹாசன். அதை 2000த்தின், காக்கை சிறகினிலே…வில், எஸ்.பி.பி.யைக் கொண்டு காபி / தேஷ் ஆகிய இணக்க ராகங்களுடன் வெற்றிகரமாக விளையாடினார் இளையாராஜா…

ஹரிஹரனை நிலவுப் பாட்டுப் பாட வைத்து (கண்ணுக்குள் நிலவு -2000), நிலவொளி தரும் உணர்ச்சியை வாத்தியங்களின் புல்லரிப்பாக அவர் தொடுத்ததை உணர முடிகிறது.

ஞான ராஜசேகரின் "பாரதி'க்கு ஏற்ற இசை வார்ப்புகளாக அவரது பாரதிப் பாடல்கள் அமைந்தன. மயில்போல் பொண்ணு ஒண்ணு என்று பவதாரணியைப் பாட வைத்து, மகளுக்குத் தேசிய விருதை வாங்கித் தந்திருக்கிறார்.

புதிய மில்லென்னியத்தின் இரண்டாம் ஆண்டு, ஃபிரெண்ட்ஸ், அழகி, காசி என்ற உயிர்த் துடிப்புள்ள புதிய அத்தியாயத்தை இளையராஜா தொடங்கியிருக்கிறார்.

காமிராவில் ஓவியப் பாங்கையும் திரைக்கதையில் யதார்த்தத்தையும் கடைபிடிக்கும் தங்கர்பச்சானின் அழகிக்கும் சொல்ல மறந்த கதைக்கும் பாட்டுக் குரலாலும் இசையாலும் வளம் சேர்த்திருக்கிறார். மலையாளத்திலிருந்து வந்த காசியில், பொருட்செறிவுள்ள பாடல்கள் தக்க மெட்டுவாகனங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆண்டின் ஜூலி கணபதியிலும் (இதயமே இதயமே காட்சி அமைப்பிற்கு ஏற்ற இசைச் சூழல்; எனக்குப் பிடித்த பாடல்), மனசெல்லாம் (நீ தூங்கும் நேரத்தில், இனிய நாள்- பாடியவர் சாதனா சர்கம்) அவர் சரியான திசையில் பயணம்

செய்வதைக் காட்டுகின்றன.

சென்ற ஆண்டு வந்த "என் மன வானில்', என்ற படத்தில், "ரோட்டோரமா பாட்டுச்சத்தம்' என்ற பாடலில் ஏசுதாஸின் விரலைப் பிடித்து நடைபயில்வதைப் போல், ஸ்ருதி கமலஹாசன் பாடியிருக்கிறார்...

அது புதிய சகாப்தத்தில், புதிய தொனிகளுடனும் புதிய வீச்சுக்களுடனும் இளையராஜா வலம் வருவார் என்பதற்கு அச்சாரமாகவும் அத்தாட்சியாகவும் ஒலிக்கிறது...







